# ஸ்ரீ பேரநாயுடு ஸ்ரீ ரங்கம்மா சரித்திரம்

வெளியிட்டோர்

துக்கின்னார் நம்பூரார் சேம நல டிரஸ்ட்
ஸ்ரீ பேரநாயுடு ஸ்ரீ ரங்கநாயகி அம்மன் கோவில்
மாடுகட்டிபாளையம், சென்னிமலை வழி
ஈரோடு மாவட்டம் 638 051
போன் : 098436 45197
இணையதளம் : www.srirangammal.com

இப்புத்தகத்தின் எப்பகுதியையும் மாடுகட்டிபாளையம் துக்கின்னார் நம்பூரார் சேம நல டிரஸ்ட்டின் முன் அனுமதியின்றி எந்த வகையிலும் உபயோகிக்கக்கூடாது

ஸ்ரீ

முன்னுரை

## *அறிவது - அரிது!*

*அகர முதல எழுத்தெல்லாம்*
*ஆதி பகவன் முதற்றே உலகு*

அகிலாண்டத்தில் ஆதி மூலப்பொருளின் பல்வகையான பரிமாணங்கள் யாவுமே இன்னது தான் என்றோ இவ்வளவு மட்டும் தான் என்று வரைமுறையிட்டு அளவிட இயலாதவை, அதாவது ஆதிமூலப்பொருளின் கொள் அளவோ, தர-பரிமாணமோ, தன்மை-பரிமாணமோ இது தான் என்றோ, இவ்வளவு மட்டும் தான்! என்றோ தெளிவுற குறிப்பிட்டு அறிய இயலாதவை.

விஞ்ஞான உண்மை... மெய்ஞான வேத-நெறியோடு இசைபடுகின்றன... தமிழ்-மறையும் அவ்வுண்மைகளை வலியுறுத்தி தெளிவுபடுத்துகிறது.

ஆதிமூலம் பரமாத்மா பரந்தாமன் இறைவனின் வல்லமை பரிமாணங்களும், தன்மைகளும், உயர்-நல பாங்குகளும் வரையறை கடந்தவை. எனவே தான் அவன் “பரம்பொருள்” என்றும் “கடவுள்” என அழைக்கப்படுகிறான்.

கணக்கு-இயலில்... (Mathematical)... “இன்பினிட்டி (Infinity)” என்னும் எண்ணிக்கையின் தொகை அளவு... ஓர் வரையறை இல்லாதது.! ஆம் அந்த ஆதி-மூலப்பொருள் இது தான் என்றோ... இன்னபடி தான் என்றோ இவ்வளவு தான் என்றோ... வரையறுத்து குறிப்பிட முடியாத வகையிலே “கணக்கிட இயலாத எல்லை-அளவு” என்று மட்டுமே குறிப்பிடப்படுவது. விஞ்ஞான ரீதியில் ஆராய- புகுந்தால் (+) இன்பினிட்டியின் (Plus Infinity) அளவு மதிப்பீட்டின் கருத்திலே, பெரியவை அனைத்திலும் மகா பெரியது, வல்லமை-சக்திகள் அனைத்திலும் மகா-வல்லமை பொருந்தியது.

மாறாக மைனஸ்-இன்பினிட்டி (Minus Infinity) என்னும் குறியீட்டின் அளவு... ஒரு பொருளின் மிக-சிறிய பரிமாணத்தையும் எல்லையற்ற சிறிய தன்மையையும் காட்டுவது. இரு மாறுபட்ட பரந்தாமனின் பாங்கை குறிப்பிடுகின்றன வேத சொற்கள் “அணோர் அணியான் மஹாதோ மஹீயான்”... அணுவுக்குள் அணுவானவனும் அவனே, மகத்தானவை அனைத்திலும் பெரும் மகத்தானவன். “கடவுள் என்னும் பெயரிலே நம்மை ஆண்டு காக்கும் அந்த ஒரே மா வல்லவன் இறைவன் யார்? அவனது திருவருளை பெற்று மானிட-இனம் ஓங்கி முன்னேறுவது எவ்வாறு?”

நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண பரஹ நாராயண பரோஜ்யோதிஹ ஆத்மன் நாராயண பரஹ நாராயண பரோ த்யாதா த்யானம் நாராயண பரஹ யச்ச கிஞ்ச்சித் ஜகத் சர்வம் த்ருஸ்யதே ஸ்ரூயதே பி வா அந்த்தர் பஹிஸ் ச தத் சர்வம் வ்யாப்ய நாராயண ஸ்திதஹ...!

தளர்வு இன்றியே என்றும் எங்கும் பரந்த தனி முதல் ஞானம் ஒன்றாய் அளவுடை ஐம்புலன்கள் அறியா வகையால் அருவாகி “நிற்கும்” வளரொளி ஈசனை மூர்த்தியை பூதங்கள் ஐந்தை இரு சுடரை கிளரொளி மாயனை கண்ணனை தாள் பற்றி யான் என்றும் கேட்டு இலனே.! (திருவாய்மொழி) (3-10-10)

மானிட- வாழ்க்கையில், மனித-சக்திக்கு மேம்பட்ட இறைவனின் ஆளுமை செயல்பாட்டோலோ அல்லது விதி-வசத்தாலோ எதிர்பாராது நேரும் பல்வகையான குறைகள், இடையூறு, தடை, துயர், துன்பம், கேடு, விபத்து போன்ற அனைத்து வித தீங்குகளிலிருந்தும், மாட்டிக்கொண்ட இக்கட்டுகள், ஏமாற்றங்களிலிருந்தும் விடுபடவும் தவிர்க்கவும், குறைக்கவும் அவற்றை எதிர்கொண்டு வெற்றி இன்ப-வாழ்வு பெறவும், பாமர்க்கும் கூட எளிதான அணுகுமுறையிலே பல்வகையிலே சிறந்த வழி-காட்டும் ஒருவனே இறைவன் நாராயணன். “வேத நெறியில் எந்த வித குழப்பமும் இல்லை. நாம் தான் புரியாது நம்மை குழப்பிக் கொள்கிறோம்.

ஆம்.. வேத-நெறி திட்டவட்டமாக பறை சாற்றுகிறது. பரந்தாமன் பரமாத்மா தலைமை இறைவன் ஒருவனே!" அவனே திருமால் நாராயணன். திருமால் ஒருவனே பல-உருவங்களில் சிவ-பெருமானாகவும், காளியாகவும் மேலும் பல்வேறு இறைவர்களாகவும் அருவாகவும் திகழ்ந்து, அவரவர் உகந்து நாடும் முறையிலே பல்வகையாய் தோன்றியும் அணுகியும் அகிலாண்டத்தையும் ஆண்டு காக்கிறான் என்று வேத புராணங்கள் திட்டவட்டமாக வரையறுத்து காட்டுகின்றன.

வேதாஹம் மே தம் புருஷம் மஹாந்த்தம் ஆதித்ய வர்ணம் தமஸஸ்து பாரே சர்வாணி ரூபானி விசித்ய தீரஹ. நாமானி க்ருத்வா அபிவதன்யதாஸ்தே தாதா புரஸ்தாத் யம் உதாஜஹாரா சக்ர ப்ரவித்வான் பர்த்சஸ் சதஸ்ரஹ தம் ஏவம் வித்வான் அம்ருத இஹ பவதி ந் அன்ய பந்த்தா அயனாய வித்யதே

அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவர் இறையவர் என அடி யடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர்; இறையவர்
அவரவர் விதிவழி யடைய நின் றனரே
திருவாய்மொழி (1-1-5)

வணங்கும் துறைகள் பலபல ஆக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல ஆக்கி அவையவைதோ
றணங்கும் பலபல ஆக்கிநின் மூர்த்தி பரப்பிவைத்தாய்
இணங்கிநின் னோரைஇல் லாய் நின்கண் வேட்கை எழுவிப்பனே
திருவிருத்தம் (96)

வேத-நெறியின் எந்தவொரு கடவுளை வழிபட்டாலும்.. அது ஒரே பரம்பொருள் நாராயணனையே போய் சேர்கின்றன என்றும், பற்பல துணை தெய்வங்கள், குலதெய்வங்கள், கோத்ர தெய்வங்கள் மூலமாக உலகு அனைத்தையும் அனைவரையும் அருள் பாலித்து ஆள்பவன் அந்த பரந்தாமன் திருமாலே என்று வேதங்களும் கீதையும் புராணங்களும் வரையறுத்து தெளிவுறுத்துகின்றன.

*ஓம்*

*ஸ்ரீ ரேணுகா தேவி துணை*

நம் கம்மகுலம் லட்சத்தொரு குலப்பிரிவுகள் கொண்டது. கம்மவார் குலத்தில் கணக்கற்ற வீட்டுபெயர்கள் இருப்பதால் லட்ச குல கம்மவார் என்று சொல்வோம். ஒவ்வொரு குலப் பிரிவுக்கும் தனித்தனியாகக் குல தெய்வங்கள் அவர்களுடைய கோவில்களில் கொலு வீற்றிருக்கின்றனர். முன் காலத்தில் கம்ம குலப் பெரியவர்களுக்கான சிறப்பு அம்சங்களுடனும், தெய்வீக குணங்களுடனும் வாழ்வாங்கு வாழ்ந்து வருங்காலச் சந்ததியினருக்கு வழிகாட்டியாக விளங்கிய அவர்களைத் தாங்கள் தங்கள் குல தெய்வங்களாகக் கொண்டாடி, வணங்கிப் போற்றுவது நமக்கு முறையாக இருந்து வருகிறது. ஒவ்வொருவரும் குல தெய்வத்தை வழிபடாத குறைபாட்டை நன்கு அனுபவித்த பிறகு குலதெய்வங்களுக்குக் கோவில்கள் எழுப்பி அந்த நீத்தார் பெருமைகளை உணர்ந்து சொல்லி நம் கம்மகுலம் மீண்டும் தழைத்து வருவதை அறிகிறோம். குலதெய்வத்தின் அருள் பெறாமல் நாம் ஏனைய பெருந்தெய்வத்தின் அருளை என்றும் பெற முடியாது. குல தெய்வத்தின் அருள் பெறாமல் வைணவர்கள் ஆகிய நாம் ஏனைய பெருந் தெய்வங்களான ரேணுகா மற்றும் பெருமாள் அருளை என்றும் பெறமுடியாது.

*(ஆதலால் தான் திருப்பதிக்கு வருபவர்கள் முதலில் குல தெய்வத்தை வணங்கி விட்டு தான் திருமலைக்கு வரவேண்டும் என்று அறிவுறுத்தபடுகிறார்கள்.)*

துக்கின்னார், நம்பூரார் என்ற இரண்டு கம்மகுலப் பிரிவுகளுக்கும் குலதெய்வமாக விளங்கி அவர்கள் குலங்களை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மிளிர்ந்தோங்க செய்பவர்கள் - அருள் மழையை பொழிந்து பாவிப்பவர்கள் மாடுகட்டிபாளையம் ஸ்ரீ பேரநாயுடு ஸ்ரீ ரங்கம்மா தெய்வங்கள் ஆவர்.

துக்கின்னார் - நம்பூரார் குலத்தவர்கள் பௌர்ணமிப் பூஜையில் கலந்து அவர்களின் பரிபூரண அருளைப் பெற்றுச் சுகமாக இருக்கின்றனர்.

ஸ்ரீ பேரநாயுடு ஸ்ரீ ரங்கம்மா சரித்திரத்தை அனைவரும் குடும்பத்துடன் பய பக்தியுடன் படித்து தெய்வங்களின் அருளுக்குப் பாத்திரமாகும்படி பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம்.

ஸ்ரீ பேரநாயுடு ஸ்ரீ ரங்கம்மா பாதாரவிந்தங்களில் இந்தத் தெய்வ நூலை சமர்ப்பிக்கிறோம்.

*ஓம்! சாந்தி! சாந்தி! சாந்தி!*

*துக்கின்னார் நம்பூரார் சேமநல டிரஸ்ட்*

முதல் பதிப்பு - 1957
இரண்டாம் பதிப்பு - 1979
மூன்றாம் பதிப்பு - 1993
நான்காம் பதிப்பு - 2008
ஐந்தாம் பதிப்பு - 2014
ஆறாம் பதிப்பு - 2018

ஓம்



## *பொங்கும் மங்களம் எங்கும் தங்குக*

## *விநாயகர் துதி*

நற்குஞ்சரக் கன்று கண்ணிற்கலை ஞானம் கற்குஞ்சரக்கன்று காண்.
அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றிற் பிறந்த
தொல்லை போம் போதாத்துயரம் போம் - நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்துள் மேவுங் கணபதியை கைதொழுதக்கால்.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்தனை ஞான கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோம்



## *ஸ்ரீ ரேணுகா துதி*

ஓரிகண்டி பட்டணமுல ஜீர்ன வீர்ன வனமுல
அல்லி மல்லி இருவாட்சி தாமரலு சம்பங்கி புஷ்பாலு
தெங்காய அரிடிதோபு நடம ஒக கெஜநிம்ம
மரி கென்னேறு செட்டு கிந்த சுன்ன புட்டல
வெலகீன கார் பொம்மரேணுகா நீபாதமுல பூஜீதமு
சேசேமு காபாட ராவம்மா கருணதோ!

## *ஸ்ரீ ரங்கம்மா ஸ்தோத்திரம்*

*ஓம் மஹா தேவ்யை ச வித்மஹே*
*பேர நாயுடு பத்னீச தீமஹீ*
*தன்நோ ரங்கநாயகி பிரசோதயாத்*

கார்த்திகையானும் கரிமுகக் கடவுளும்

மூர்த்திகள் பலரும் பார்த்து மகிழ்ந்து

எக்குலமும் போற்றும் எல்லம்மாள் கருணை

தம்மீது தயையுடன் தாண்டவம் ஆடவே

தீக்குளித்துத் தம் கற்பைத் திறம்பட நிறுவிய

துக்கின்னார் நம்பூரர் குலதிலக நல் நாரீமணியை

தீர்த்தவாரியும் திருமண வைபவமும்

கார்த்திகை ரோகிணியில் ஏற்றிய ஜோதியே

பூக்கொள் கூந்தல் புனித ரங்கம்மாளை

மனோரம்மியமான மணமது செய்வித்து மகிழவே

பாக்கள் பல பாடி பலர் முன் சுடர் ஏற்ற

நம் மாடுகட்டிபாளையம் வருவீர் வையகத்தாரே

*துக்கின்னார் - பேர நாயுடு - பீமார்ப்ப கோத்ரம்*
*நம்பூரார் - ரங்கம்மாள் - ஏருட்ல கோத்ரம்*

*ஸ்ரீ ராம ஜெயம்*

*ஸ்ரீ ரேணுகா பராசக்தி துணை*

*ஸ்ரீ பேரநாயுடு ஸ்ரீ ரங்கம்மாள் திருவடிகளே சரணம்*

“பெருகும் ஆசைக்கடல் விழுந் தறிவெனும்
கலத்தையும் கைவிட்டு
உருகும் மனமொடு வினைச் சுறா வாய்பற்றி
உற்றே கிடும் போது
மருவும் பரசுடை மறையவன் தாயினின்
மாணடித் தாமரையே
கருதிப் புணையாப் பற்றிக் கரையேற
லாவது திண்ண மதே”

## *கம்மகுல வரலாறு*

வட தேசத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன் கன்மகிரி பட்டிணத்தை ஷத்திரிய குலத்தில் பிறந்த கஜஜாபவுடு எனும் அரசன் ஆண்டு வந்தான். அந்த அரசனுக்கு காந்தாமணி என்று பெயர் கொண்ட அரசியிருந்தாள். அரசி பதிவிரதா ரத்தினம். அரசி காந்தாமணியின் கர்ப்பத்தில் பதினாறு ஆண் குழந்தைகள் பிறந்து வளர்ந்து வந்தார்கள். டெல்லி சக்ரவர்த்தி நவாப் அஜீஸ் முகமது அரசாட்சியில் கன்மகிரி கப்பம் செலுத்தும் ஓர் சிறிய தேசமாக இருந்தது. கஜஜாபவுடு அரசன் தன் மைந்தர்களுக்கு கல்வி, வில்வித்தை, குதிரையேற்றம், கத்திச்சண்டை, முதலியவைகளை கற்பித்து, தனது அரசில் சில விவசாயப் பண்ணைகளை ஆங்காங்கு ஏற்படுத்தி, பதினாறு பேர்களுக்கும் திருமணம் செய்து, விவசாயப்பண்ணைகளில் குடியேற்றி வைத்தார். கப்பம் செலுத்தும் சிறிய நாடாதலால் அரசு செய்ய வகையில்லாது கஜஜாபவுடு அரசன் தன் மைந்தர்களைப் பண்ணைகளில் வசிக்க விட்டார். கன்மகிரியில்

வசித்தவர்கள் தான் கம்ம குலத்தவர்கள் என்று சில ஏடுகளில் குறிப்பு காணப்படுகிறது. பல வருஷங்களுக்கு பிறகு இவர்கள் தனித்தனியே பிரிந்து பல இடங்களில் வசித்து வந்தார்கள். கால மாறுதலுக்கு ஏற்றபடி பிற்காலத்தில் கொள்வினை கொடுப்பினை முதலியவைகள் ஏற்பட்டு குலம் கோத்திரம் மாறுபட்டு வாழ்ந்து வந்தார்கள். ரேணுகையை குலதேவதையாக ஏற்று அனைவரும் சீறும் சிறப்பும் பெற்று வாழ்ந்து வரும் நாளில்-

## *முகமதிய அரசன் கம்ம குலத்தில பெண் கொள்ள ஆசைப்படுவது*

தட்சணாய கார்த்திகை மாதம் கன்மகிரி பட்டணத்தில் வீர்ன ஜீர்ன வனத்தில் அல்லி அரளி தாமரை தடாகத்தின் அருகில் எலுமிச்சம் மரத்தடியில் புற்றில் வாழும் ரேணுகையை கொண்டாடும் பொருட்டு வெளியூர்களில் வாழும் கம்மகுலத்தவர்கள் அனைவரும் கன்மகிரி பட்டணம் வந்து சேர்ந்தார்கள். கன்மகிரி பட்டணத்தில் இருந்து கம்மகுலத்தவர்கள் ரேணுகை நைவேத்தியத்திற்கு வேண்டிய சாமான்களை எடுத்துக் கொண்டு குடும்பசமேதர்களாக மேளதாள வாத்தியங்கள் முழங்க ரேணுகை கோவிலுக்குப் புறப்பட்டார்கள். அப்போது கன்மகிரி பட்டிணத்தில் வாழும் காகல்லார் வெங்கடப்ப நாயுடு வீட்டில் இருந்து ரேணுகை கோவிலுக்குப் போகப் புறப்பட்டார்கள். அது சமயம் காகல்ல வெங்கிடப்ப நாயுடு தன் மகள் பேரம்மாளை அழைத்து, “குழந்தாய் நீ வீட்டில் பாட்டியுடன் பத்திரமாக இரு. பருவப் பெண்கள் பகல் நேரத்தில் பலரும் அறிய திருவிழாக்களுக்கு செல்லக்கூடாது. இன்று இரவு நான் வந்து அலங்கார பூஜைக்கு அழைத்து செல்லுகிறேன்” என்று சொல்லி பேரம்மாளை வீட்டில் விட்டு அனைவரும் கோவிலுக்குச் சென்றார்கள். கன்மகிரி பட்டணத்துப் பெண்கள் குழந்தைகள் அலங்காரமாக ஆடைகள் ஆபரணங்கள் அணிந்து மேள தாள வாத்தியங்கள் முழங்க கூட்டம் கூட்டமாக பூஜை சாமான்கள் எடுத்துக் கொண்டு சென்றார்கள்.

இந்த வேடிக்கையைப் பார்க்க காகல்ல பேரம்மா வீட்டு முற்றத்தில் தன் பாட்டி அருகில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். டில்லி சக்ரவர்த்தி ஜனாப் அஜீஸ் முகமது மகன் இளவரசன் சையத் அலி என்பவன் தன் நண்பன் வெங்கு அய்யா என்பவருடன் குதிரைகளின் மேல் அமர்ந்து கன்மகிரி திருவிழா பார்க்கப் புறப்பட்டு வந்து கன்மகிரி பட்டண வீதிவழியே வந்து கொண்டிருந்தார்கள். அப்போது இளவரசன் சையத் அலி வெங்குவைப் பார்த்து "வெங்கு! அதோ பார் அந்த வீட்டு முற்றத்தில் ஓர் அழகிய பருவமங்கை நிற்கிறாள். என்ன அழகு! நீண்டு கருத்த வளர்ந்த கூந்தலும், கருமேகங்களின் மத்தியில் தோன்றும் பூரணசந்திரன் போன்ற முகமும், இதற்கிடையில் நட்சத்திரங்கள் போல பிரகாசிக்கும் ஆபரணங்களும், தங்கப் பதுமை போல் அழகே உருவாக அமைந்து நின்று கொண்டிருக்கும் இந்த பெண் யார்? கிராமங்களிலும் இவ்வளவு அழகுடைய பெண்கள் இருக்கிறார்களா? வெங்கு நீ போய் அவள் யார்? அந்த வீடு யாருடையது என்று விபரமாக அறிந்து கொண்டு வா" என்று அனுப்ப வெங்கு குதிரையை விட்டிறங்கி பேரம்மா நிற்கும்படியான இடத்திற்குச் சென்று பேரம்மாளைப் பார்த்து "தாயே! நான் வெளியூரில் இருந்து வருகிறேன், தாகத்திற்கு கொஞ்சம் தண்ணீர் வேண்டும்" என்று கேட்டான். அப்போது பேரம்மா நாணத்தால் தலை குனிந்து தன் பாட்டியைக் காட்டி, "அந்த அம்மாளைக் கேளுங்கள்" என்று சொல்லிவிட்டு வீட்டிற்குள் சென்றாள். வெங்கு பாட்டியிடம் சென்று தண்ணீர் கேட்க, பாட்டி தன் வீட்டு வேலைக்காரியைக் கூப்பிட்டு வெங்குவுக்கு தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கச் சொன்னார். தாகம் தீர தண்ணீர் குடித்த வெங்கு, பாட்டியிடம் விசாரித்து, அந்த வீடு அங்கு நின்று கொண்டிருந்த பெண் வரலாறு தெரிந்து கொண்டு வந்து இளவரசனிடம் "அய்யா, இந்த வீடு கம்மகுல காகல்ல வெங்கிடப்ப நாயுடுவுடையது. அங்கு நின்று கொண்டிருந்த பெண் அவருடைய மகள் பேரம்மா என்பவள்" என்றான். இதைக் கேட்ட இளவரசன் "சபாஷ் இவ்வளவு அழகான பெண்ணை நமது ராஜ்ஜியத்தில் வைத்துக் கொண்டு என் அப்பா எங்கெல்லாமோ

பெண் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு இங்கு அழகான பெண் இருப்பது தெரியாது என்று நினைக்கிறேன்" என்றான். அப்போது வெங்கு "ஐயா, நீங்கள் பெண்ணின் அழகைப் பார்த்து ஆசைப்பட்டு விட்டீர்கள். அவர்கள் கம்மகுலத்தவர்கள் வைஷ்ணவர்கள், ரேணுகையின் பக்தர்கள், உங்கள் முகமதிய குலத்திற்கு பெண் கொடுக்க மாட்டார்கள், நீங்கள் புறப்படுங்கள் நேரமாகிறது" என்றான் வெங்கு. இளவரசன் "நமது ராஜ்ஜியத்தில் இருக்கும் பிரஜைகள் அவர்களுடைய சக்ரவர்த்தி மகனுக்கு பெண் கொடுக்க மறுப்பார்களா? என் தந்தையிடம் சொல்லி எப்படியும் நான் அந்த பெண்ணை கல்யாணம் செய்தே தீருவேன்" என்று சபதம் செய்து கொண்டு டில்லி நகர் வந்து சேர்ந்தார்.

அன்று இரவு இளவரசன் தன் தகப்பனாரிடம் சென்று வணங்கி, "அப்பா, நானும் வெங்குவும் நேற்று கன்மகிரி பட்டணம் சென்று ரேணுகா திருவிழா பார்க்கச் சென்றோம். கன்மகிரி வீதியில் போகும் போது அங்கோர் வீட்டின் முற்றத்தில் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றாள் ஓர் பெண், என்ன அழகு! கருத்த சுருண்ட நீண்ட கூந்தலும், வலம்புரி சங்கு போன்ற கழுத்தும், வள்ளைக்கொடி போன்ற காதுகளும், குமிழம்பூ போன்ற நாசியும் கண்ணாடி போன்ற கன்னங்களும், வேல் போன்ற புருவங்களும் கவரி மான் விழிகளும், தங்கப்பதுமை எனச் சொல்லும்படியான உடலும், அன்னம் போன்ற நடையும் உடைய அந்த பெண்ணைப்போல் நான் எங்கும் பார்த்ததில்லை. ஆகையால் நான் அவள் மேல் காதல் கொண்டு விட்டேன். நீங்கள் வெங்குவை அழைத்துக் கேட்டு திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யுங்கள்" என்றார்.

இதைக் கேட்ட அரசன் வெங்குவை அழைத்து விசாரித்து விபரம் தெரிந்து கொண்டு தன் மகனைப் பார்த்து "அப்பா சையத் அலி! நீ சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது கம்ம குலத்தவர்கள் நம் குலத்திற்கு பெண் கொடுக்க மாட்டார்கள். என்னதான் அழகு இருந்தாலும்

நாம் வேறு குலப்பெண்ணை மணம் செய்து கொள்ள நமது குரான் சம்மதமளிக்குமா? நமது ஆட்சியில் நாம் மற்ற மதத்தவர்களிடம் பகைமை கொள்ளக்கூடாது. அதிகாரம் இருக்கிறது என்று அக்கிரமம் செய்யக்கூடாது. நீ சொல்லும்படியான அந்தப் பெண்ணைவிட பன்மடங்கு அழகான பெண்ணைப் பார்த்து நான் கூடிய சீக்கிரம் கல்யாணம் செய்து வைக்கிறேன். இந்த ராஜ்ஜியத்தையும் பட்டாபிஷேகம் செய்து வைக்கிறேன்" என்று ஆறுதலான வார்த்தைகள் சொன்னார்.

எவ்வளவு சொல்லியும் கேளாமல் சையத் பிடிவாதமாக "நான் செய்த சபதப்படி நீங்கள் அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து வைக்க வேண்டும். அந்த பெண்ணை பட்டத்து அரசியாக்க நான் சம்மதிக்கிறேன். நாம் சகல சேனா சைன்யங்களுடன் அரசு செலுத்துகிறோம். அரசன் தன் ராஜ்ஜியத்தில் எவரை வேண்டுமானாலும் எந்த குலத்திலும் பெண் கொள்ள உரிமையுண்டு அல்லவா! அரச பதவி வகிக்க யார்தான் சம்மதிக்கமாட்டார்கள்? நீங்கள் எனக்கு அந்தப் பெண்ணை மணக்க ஏற்பாடு செய்யுங்கள். இல்லையேல் இந்த ராஜ்ஜியமும் வேண்டாம், நான் கல்யாணமே இல்லாத சன்யாசியாகப் போகிறேன்" என்றான். இளவரசன் சன்யாசியாகி விட்டால் என்ன செய்வது, இருப்பது ஒரே மகன் என்று அரசன் ஆலோசித்து, மந்திரி பிரதானிகளை அழைத்து, ஆலோசனை செய்து, இளவரசனைப் பார்த்து "உன் எண்ணம் போல் செய்கிறேன்" என்று சொல்லி அனுப்பிவிட்டு மறுநாள் காலையில் கன்மகிரி சென்று கல்யாண மனு பேசுவது என்று தீர்மானம் செய்தார்.

மறுநாள் காலையில் ஜனாப் அஜீஸ்முகமது அரசன் தன் மந்திரி பிரதானிகளுடன் புறப்பட்டு கன்மகிரி வந்து சேர்ந்து ஊர் வெளியில் கூடாரமடித்து தங்கி கம்மகுல வெங்கிடப்ப நாயுடுவையும் மற்ற பெரியோர்களையும் அழைத்து வர தூதுவரை அனுப்பினார். தூதுவர்கள் நகருக்குள் சென்று பறை அறிவித்து "சகல கம்மகுல பெரியவர்கள்

ஊர் வெளிப்புறத்தே வந்து தங்கி இருக்கும் டில்லி அஜீஸ் முகமது அரசனை நேரில் வந்து சந்திக்கும்படி உத்திரவு" என்று பறை சாற்றிச் சென்றார்கள். இதைக் கேட்ட கம்மகுலத்தவர்கள் அனைவரும் அரசன் உத்தரவுப்படி ஊர் வெளிப்புறத்தே கூடாரம் அடித்து தங்கியிருக்கும் அரசனிடம் வந்து சேர்ந்தார்கள். அப்போது அரசன் கம்மகுல பெரியவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்து ஆசனமளித்துஉட்கார வைத்து, "கம்மகுல பெரியோர்களே! நான் உங்களிடம் வந்தது ஒரு முக்கியமான விஷயம். நான் சொல்வதை நீங்கள் கேட்டு பதில் சொல்ல வேண்டும். என் மகன் இளவரசனுக்கு கல்யாணம் செய்து வைத்து மணிமகுடம் சூட்ட வேண்டும். இளவரசனுக்கு கல்யாணம் செய்து வைக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தோம். இளவரசன் ரேணுகா திருவிழாவிற்கு வந்த சமயம் கன்மகிரி வீதி வழியே வந்தபோது காகல்ல வெங்கிடப்ப நாயுடு குமாரத்தி பேரம்மா எனும் பெண்ணை பார்த்துக் காதல் கொண்டு அந்த பெண்ணையே கல்யாணம் செய்து வைக்க வேண்டும், இல்லாவிட்டால் சன்யாசியாக போகிறேன் என்று பிடிவாதமாக இருக்கிறான். நீங்கள் யோசனை செய்து அந்த பெண்ணை இளவரசனுக்கு கல்யாணம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள். அந்தப் பிரகாரம் கல்யாணம் செய்து கொடுத்தால் அவளை பட்டத்து ராணியாக்க நான் சம்மதிக்கிறேன். உங்கள் சம்மதம் என்ன?" என்று கேட்டார். இதைக் கேட்ட கம்மகுல பெரியவர்கள் திடுக்கிட்டு சொல்வது இன்னதென்று அறியாது ஒருவரை ஒருவர் பார்த்து திகைக்கும்போது ராஜகொண்டலார் கோவிந்தப்ப நாயுடு ஒரு சிலரை அப்பால் அழைத்து, "ஐயா! இது என்ன விபரீத காலமாக இருக்கிறது! கம்மகுலத்தில் இருந்து முகமதிய குலத்திற்கு பெண் கேட்க மனுவாட வந்தான் என்றால் இந்த அரசனுக்கு ஏதோ புத்தி தடுமாற்றம் என்றுதான் தெரிகிறது. நமது கம்மகுலத்திற்கு இழிவு வராமல் நாம் பார்த்துக்கொள்ளவேண்டும். மேலும் அரசனுக்கு சமாதானமாக பதில் சொல்லி அனுப்பிவிட்டு நாம் யோசனை செய்வோம்" என்று தீர்மானம் செய்து அரசனிடம் சென்று "அரசே! இன்று நீங்கள் நகரம் செல்லுங்கள். நாங்கள் அனைவரும்

நீங்கள் கேட்ட கல்யாண விஷயத்தை யோசித்து சேதி சொல்லி அனுப்புகிறோம்." என்று அரசனிடம் சொல்லி விடை பெற்றுக்கொண்டு கம்மகுல பெரியவர்கள் அனைவரும் விநாயகர் கோவில் மேடைக்கு வந்து சேர்ந்து முகமதிய அரசன் மனு கேட்ட விஷயமாக ஆலோசித்தார்கள்.

## *கம்மகுல பெரியோர்கள் மந்திராலோசனை*

ஆலோசனையிலமர்ந்த பெரியோர்களை நோக்கி ராஜ கொண்டலார் கோவிந்தப்ப நாயுடு "கம்மகுல பெரியோர்களே! சக்ரவர்த்தி முகமதிய அரசன் மதிகெட்டு நம்குலத்தில் பெண்கொள்ளப் பார்க்கிறான். முகமதிய குலத்திற்கு பெண் கொடுத்தால் நமது கம்மகுலம் உள்ளவரை நமக்கு தீராத பழி வந்து சேரும். பெண் கொடுப்பதில்லை என்றாலோ, அரசன் நம்மைத் துன்புறுத்துவான். நமது குலம் அழியுங்காலம் வந்து விட்டதா! இதற்கு நாம் என்ன செய்வது! என்று சொல்லக் கேட்க, நீர்கொண்டார் ராமிநாயுடு ஐயா நாம் என்ன செய்வது! இன்று இரவு நமது குலதெய்வமான ரேணுகையை பூஜை செய்து சகுனம் பூ வைத்து கேட்போம், அதன்பின் யோசிப்போம்" என்றார். இத்தீர்மானத்தின்படி அன்று சாயந்திரம் ரேணுகையை திருமஞ்சனம் செய்து அலங்கரித்து தூப தீப நைவேத்தியங்கள் செய்து "ஏ, ரேணுகா! ஜகன் மாதா! கம்மகுல தேவதா! நித்ய கல்யாணி! பரமேஸ்வரி! எங்களை ஆதரித்து எங்களுக்கு இப்போது வந்துகொண்டிருக்கும் ஆபத்தில் இருந்து எங்களை காப்பாற்ற வேண்டும் தாயே" என்று அனைவரும் வேண்டி நின்ற சமயம், நீர் கொண்டார் நாரப்ப நாயுடு மனைவி சாயம்மா ரேணுகையின் அருள் கொண்டு மெய்சிலிர்க்க புரண்டு எழுந்து கிலாரித்து, "கம்ம குலப் பெரியவர்களே! உங்கள் மனக்குறை நான் அறிவேன், முகமதிய அரசனுக்கு அழிவு காலம் வந்துவிட்டது. ஆகையால்தான் அவன் கம்மகுலத்தின் மேன்மை அறியாது மணப் பெண் கொள்ள வந்து விட்டான். உங்களுக்கும்

மாறுதல் காலம் வந்துவிட்டது. அரசன் சொன்னபடி நீங்கள் பெண் கொடுக்கவில்லை என்றால் உங்களை துன்பத்திற்குள்ளாக்குவான். பெண்ணை பலவந்தமாக சிறை பிடிப்பான். ஆகையால் அதற்கு ஒரு வழியுண்டு. காலம் மாறும்போது கஷ்டங்கள் வருவது இயற்கையே கம்மகுலம் இருக்க வேண்டுமானால் அழியாத புகழ் பெறவேண்டுமானால் நீங்கள் இனி கொஞ்சமும் தாமதிக்காமல் இந்த தேசம் விட்டு வெளியேற வேண்டியதுதான். அதற்கு முன் அரசன் சந்தேகப்படாமல் இருக்க நீங்கள் தூதுவர்கள் மூலமாக பெண் கொடுக்க சம்மதிக்கிறோம். இன்றையிலிருந்து பத்தாவது நாள் முகூர்த்தம் வைத்துக் கொள்ளுங்கள். எங்கள் குல வழக்கப்படி மாப்பிள்ளை கோலத்துடன் பந்துஜனங்களுடன் கன்மகிரி வரவேண்டும்" என்று சேதி சொல்லிவர தூதுவரை அனுப்பிட்டு நீங்கள் அனைவரும் உங்கள் தட்டு முட்டு சாமான்களை எடுத்து மூட்டைகளைக் கட்டி தயார் செய்துகொண்டு ஊர் அலங்காரம் செய்து தோரணங்கள் கட்டி காகல்ல வெங்கிடப்ப நாயுடு வீட்டை கல்யாண வீடு போல் அலங்காரம் செய்து, மணவறை கட்டி அலங்கரித்து பானைகள் வைத்து ஓர் நாயைப் பிடித்துவந்து கல்யாணப் பெண் போல் சிங்காரித்து மணவறையில் கட்டி உரலின் மேல் விளக்கு வைத்து விளக்கெண்ணையால் வீட்டை மெழுகி அதன் மேல் கேழ்வரகைத் தூவி விட்டு நீங்கள் குடும்ப சமேதரர்களாகப் புறப்பட்டுவிடுங்கள். நான் உங்களுக்கு எப்போதும் உடன் இருந்து காப்பாற்றுவேன் என்று சொல்லக் கேட்ட பெரியவர்கள் ரேணுகை சொன்னதே சரியென்று ஒப்புக் கொண்டு முகமதிய அரசனுக்கு தூதுவரை அனுப்பிவிட்டு, சாயம்மா சொன்னபடி செய்துவிட்டு, தாங்கள் தங்கள் சாமான்களுடன் குடும்ப சமேதரர்களாக தெற்கு நோக்கிப் புறப்பட்டார்கள். டில்லி சென்ற தூதுவர்கள் அரசனை வணங்கி, ஐயா! கம்மகுல காகல்ல வெங்கிடப்ப நாயுடு மகளைத் தங்கள் குமாரனுக்கு கல்யாணம் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு தங்களிடம் சொல்லிவிட்டு வர அனுப்பினார்கள். மேலும் இன்றைக்கு ஆறாவது நாள் மாப்பிள்ளைக் கோலத்துடன் பந்து ஜனங்கள் புடைசூழ கன்மகிரி பட்டணம்

வரும்படி சொல்லி அனுப்பினார்கள் என்று தூதுவர்கள் சொல்லி விடை பெற்றுச் சென்றார்கள். முகமதிய அரசன் ஆனந்தங்கொண்டு தன் மந்திரி பிரதானிகளை அழைத்துக் கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய உத்தரவிட்டார். மந்திரிகள் ஏவலாளிகளைக் கொண்டு அரண்மனையை அலங்காரம் செய்து வீதிகளில் மகர தோரணங்கள் கட்டி பல்லக்கை அலங்கரித்து வைத்தார்கள். கல்யாண சேதி கேட்டு அரண்மனைக்கு சகல பந்துக்களும் வந்து சேர்ந்தார்கள்.

கல்யாணத்திற்கு முந்தின நாள் மாப்பிள்ளையை அலங்கரித்து பல்லக்கில் உட்காரவைத்து சகல சிற்றரசர்களும், பந்துக்களும் புடை சூழ மேள தாள வாத்தியங்களுடன் யானைகள், குதிரைகள் அணிவகுத்து முன் செல்ல ஆகாய அதிர் வெடிகள், மத்தாப்புகள் எங்கும் பிரகாசிக்க ஊர்வலம் கன்மகிரி வந்து சேர்ந்தது. கன்மகிரி வந்து சேர்ந்த கல்யாண ஊர்வலத்தைப் பார்க்க ஒருவரும் அங்கு காணவில்லை! எங்கும் நிசப்தம்! ஏன் என்று கேட்பாருமில்லை! இதை அறிந்த அரசன் காவலர்களை அனுப்பி விசாரித்து வரச் சொன்னார். அரசன் உத்திரவுப்படி காவலர்கள் கன்மகிரி பட்டிணத்திற்குள் பிரவேசித்துத் தேட, அவர்கள் கண்முன்னால் ஒரு ஆள் கூடத் தென்படவில்லை.

ஊரின் வீதிகளில் மூலைக்கு மூலை தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. கல்யாண வீடு நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. காவலர்கள் கல்யாண வீட்டிற்குச் சென்றார்கள். அங்கும் ஒருவரையும் காணவில்லை. கல்யாண வீட்டிற்குள் சென்று தேடுவோம் என்று எண்ணி சிலர் வீட்டில் கால் எடுத்து வைக்க கால் சறுக்கி விழுந்து விட்டார்கள். மேலே எழுந்திருக்க முடியாமல் தத்தளித்தார்கள். மற்ற காவலர்கள் அதிவேகமாக வந்து நடந்த செய்தியை அரசனிடம் சொன்னார்கள். ஆச்சரியமும் ஆத்திரமும் கொண்டு அரசன் தன் பிரதானிகளுடன் நகருக்குள் பிரவேசித்தான். கல்யாண வீட்டிற்குள் சென்ற காவலர்கள் எழுந்திருக்க முடியாமல் தத்தளிப்பதைக் கண்ட

அரசன் அவசரமாக வீட்டிற்குள் சென்றான், உள்ளே கால் எடுத்து வைத்தான், வழுக்கி விழுந்து புரண்டான்.

அரசன் விழுந்ததைப் பார்த்த பிரதானிகளும் அரசனுக்கு உதவி செய்ய வீட்டிற்குள் சென்றார்கள். அவர்களும் வழுக்கி விழுந்து அவஸ்தைப்பட்டார்கள். காவலர்களும் பிரதானிகளும் அரசனும் அவஸ்தைப்படுவதை மீதி நின்ற சேவகர்கள் வந்து இளவரசனிடமும் பந்துக்களிடமும் சொன்னார்கள். மண கோலத்துடன் இருந்த இளவரசனும், மற்றவர்களும் வேகமாக கல்யாண வீடு வந்து சேர்ந்து தன் தகப்பனாரும் மற்றவர்களும் படும் அவஸ்தையைக் கண்டு இளவரசன் கோபங்கொண்டு வீட்டிற்குள் பிரவேசித்தான். விளக்கெண்ணையும், கேழ்வரகும் இளவரசனையும் விழச் செய்து விட்டது. தத்தித் தடுமாறி இளவரசன் மணவறை அருகில் சென்று மணவறை கம்பத்தின் உதவியால் எழுந்து நின்று மணவறையைப் பார்த்தான். மணவறையில் ஒரு நாய் “வள் வள்” என்று குரைப்பதை பார்த்தான். நாயைப் பெண் போல் அலங்கரித்து கட்டி வைத்திருப்பதைப்பார்த்து அடங்கா கோபம் கொண்டு உடைவாளால் அந்த நாயை இரு துண்டாக வெட்டி மேலும் மணவறையில் இருந்த சாமான்களை எல்லாம் உடைத்து வீசி எறிந்தான். உரலில் மேல் வைத்திருந்த விளக்கைக் காலால் உடைத்துத் தள்ளினான். கம்மகுலத்தவர் செய்த அடாத செய்கையை நினைத்து ஆத்திரம் கொண்டான். வீசி எறியப்பட்ட சாமான்களின் உதவிகளால் அரசனும் பிரதானிகளும் சேவகர்களும் மெதுவாக எழுந்து நின்று ஒருவரையொருவர் பிடித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே வந்தார்கள். அடக்கமுடியாத கோபங்கொண்ட முகமதிய அரசன் தன் பந்துக்களையும், குமாரனையும் சமாதானப்படுத்தி “எப்படியும் நான் கம்மகுலத்தவரை எங்கிருந்தாலும் கண்டுபிடித்து பழிக்குப் பழி வாங்கி வருகிறேன்” என்று சொல்லி தன் பிரதானிகளையும் சேனையையும் அழைத்துக் கொண்டு கம்மகுலத்தவர்களை தேடிச் சென்றான்.

நாய்க்குட்டியைக்கட்டி வைத்த மணவறையை இனி நம் இனத்தவர் திருமணத்தில் பயன்படுத்துவதில்லை என்று தீர்மானித்தனர். அரவ, மரவ ஜாதியினர் திருமணத்துக்கு மணவறை சிங்காரிப்பதுண்டு. நமது கம்மவார் இனத்தில் இன்றும் மணவறை அமைக்கும் பழக்கமில்லை. மணவறைக்குப் பதிலாக புதிய வேட்டியை மேலே கட்டி அதில் மல்லிகைப் பூ மாலைகளை மேலிருந்து கீழாக தொங்க விட்டு அலங்காரம் செய்தல் வழக்கமாயிருக்கிறது. நாய்க்குட்டிக்குக் கட்டிய மணவறையைத் திருப்பிக் கட்டக்கூடாது என்ற வைராக்கியத்தைப் பார்க்கிறோம்.

## *கம்மகுல பெரியோர் ரேணுகையின் கிருபையால் கோதாவரி ஆற்றைக் கடந்து ஆந்திர தேசம் வருதல்*

முகமதிய அரசனுக்குப் பெண் கொடுப்பது இல்லை என்று தீர்மானம் செய்து கன்மகிரி பட்டணம் விட்டுப்புறப்பட்ட கம்ம குலத்தார்கள் மூன்று நாட்கள் இரவும் பகலும் பிரயாணம் செய்து கோதாவரி நதி வந்து சேர்ந்தார்கள். அன்று இரவு அங்கு தங்கி கூடாரங்கள் அடித்து ஆகாரங்கள் செய்து உண்டு களைப்பாறினார்கள். அன்று இரவு என்றுமே காணாதபடியான மழை பெய்து, எங்கு பார்த்தாலும் வெள்ளக்காடாக இருந்தது. ஆற்றிலும் இரு கரைகளும் வழிய தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. அதிகாலையில் கம்மகுலத்தவர்கள் மேற்கொண்டு பிரயாணம் செய்ய முடியாமல் ஆற்றில் கரை புரண்டு தண்ணீர் போவதைக் கண்டு, ஆற்றில் தண்ணீர் குறையும் வரை காத்திருந்தால் ஒரு சமயம் அவமானம் அடைந்த முகமதிய அரசன் வந்து விட்டால் நாம் என் ன செய்வது என்று ஆலோசித்து இருந்தபோது சாயம்மா "ஐயா, நாம் ரேணுகையை பூஜை செய்தால் ஆபத்து வராமல் ரேணுகை காப்பாற்றுவாள்" என்று சொல்ல அதன்படியே ரேணுகை பூஜை செய்வதென்று தீர்மானித்தார்கள்.

அப்போது கம்மகுலத்தில் ராஜுலு பூஜாரி பட்டம் பெற்ற துக்கின்னார், நீர்கொண்டார், காங்கல்லார், சென்னார் மற்றும் சீகார் ஆகியோர் தங்களுடன் பேழையில் வைத்து உடன் கொண்டு வந்த ரேணுகை சுயம்பு விக்கிரகத்தை ஆற்றில் திருமஞ்சனம் செய்து எடுத்து வைத்து பூஜிக்க ஆரம்பித்தார்கள். அப்போது நீர்க்கொண்டார் சாயம்மா ஆற்று மணலால் விளக்கு செய்து ஆலம் விழுதை திரியாக வைத்துத் தண்ணீரை எண்ணையாக விட்டு கொண்டு வந்து வைக்க கம்மகுலப் பெரியோர், சிறியோர் அனைவரும் ஒன்றாக "ஏ ரேணுகா! பரஞ்சோதி, நாரணி, பூரணி, தயாபரீ! நாங்கள் உம்மை நம்பினோம், எங்களை இந்த ஆபத்தில் இருந்து காப்பாற்றுவாய், அம்மா! முகமதிய அரசன் எங்களைப் பின் தொடர்ந்து வந்துவிட்டால், நாங்கள் என்ன செய்வோம்! இந்த ஆற்றை நாங்கள் எப்படிக் கடப்போம்" என்று வாய்விட்டுக் கதறி கண்மூடி மவுனமாக தியானம் செய்த சமயம் கண கணவென மணியோசையும், சங்கு, கேசண்டி, வீர்ண சப்தங்கள் முழங்க, அனைவரும் கண்திறந்து பார்த்தார்கள். தண்ணீர் ஊற்றி வைத்த விளக்கு தக தகவென சுடர் விட்டெரிய ஆறானது இரண்டாகப் பிரிந்து நிற்கக் கண்டு ஆனந்தங்கொண்டு ரேணுகையை வணங்கியபடி கம்மகுலப் பெரியவர், சிறியவர், பெண்கள் தங்கள் சாமான்களுடன் ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்தார்கள்.

கம்மகுலத்தவர்கள் ஆற்றைக் கடந்து மறுகரை வந்து சேர்ந்ததும் ஆற்றுத்தண்ணீர் பழையபடி கூடி பொங்கிப் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தது. அக்கரை சென்ற கம்மகுல பெரியோர் ஆற்றங்கரையில் நின்று திரும்பிப் பார்க்க மறுகரையில் முகமதிய அரசன் தன் சேனையுடன் நிற்பதைக் கண்டனர். ஆற்றங்கரை வந்து சேர்ந்த முகமதிய அரசன் ஆற்றில் தண்ணீர் கரை புரண்டு ஓடுவதை அறிந்து ஆற்றைக் கடந்து செல்ல வழி இல்லாமல் நின்றான். அப்போது அங்கிருந்த சில படகோட்டிகள் கம்மகுலப் பெரியோர்களுக்கு ஆறு வழி விட்ட அதிசயத்தை சொல்லக் கேட்டு ஆச்சரியப்பட்டு, தான் செய்த தவறை உணர்ந்து இனி நாம் கம்மகுலத்தவர்களிடம் நமது

தவறை ஒப்புக் கொண்டு மன்னிப்புக்கோரி மறுபடியும் அவர்களை நமது நாட்டிற்கே அழைத்து செல்வதென்று தீர்மானம் செய்து கொண்டு, படகோட்டிகளின் உதவியால் ஓர் படகில் ஏறி அரசன் மட்டும் அக்கரை சென்று இறங்கி கம்மகுல பெரியோர்களை வணங்கி ஐயா, உங்கள் மகிமை, வீரம், தீரம், குல தர்மத்தை காக்கும் திடம் அறியாது உங்களிடம் பெண் கேட்டு வந்தேன். நான் செய்த தவறை மன்னித்து விடுங்கள், நீங்கள் வேறு தேசம் செல்லாதீர்கள். எங்கள் நாட்டிற்கே திரும்பி வாருங்கள். இனிமேல் உங்களுக்கும் உங்கள் குலத்துக்கும் "யாதொரு கெடுதலும் இடையூறும் இல்லாமல் நான் காப்பாற்றுவேனாக" என்று பலவாறு சொன்ன முகமதிய அரசனை கம்மகுலப் பெரியவர்கள், "ஐயா, உங்கள் மீது குற்றமில்லை, எங்கள் விதி வழியே நாங்கள் செல்ல வேண்டியவர்கள். எங்களைக் காத்து ரட்சிக்க எங்கள் குலதெய்வம் ஸ்ரீ ரேணுகை இருக்கும்போது எங்களுக்கு ஒரு குறையும் வராது, நீங்கள் திரும்பி நகர் செல்லுங்கள். இனிமேலாவது தகாத காரியங்கள் செய்யாதீர்கள்" என்று சொல்ல அரசனும் "ஐயா, கம்மகுலப் பெரியோர்களே! இனிமேல் உங்கள் குலம் மட்டும் அல்ல, மற்றவர்களையும் காப்பாற்றி வருவேன்". எனக்கு ஒரு வரம் கொடுக்க வேண்டும். அதாவது உங்கள் குலத்தில் நான் மனு பேசி கல்யாணம் நிச்சயம் செய்ததால் நீங்களும் நானும் சம்மந்திகளானோம். காலப்போக்கில் கல்யாணம் நடைபெறாவிடினும் இனி உலகம் உள்ளளவும் "கம்மகுலத்தவர்களும் முகமதிய குலத்தவர்களும் மாமன் - மைத்துனன் முறை கொண்டாட உரிமை வேண்டும்" என்று கேட்ட அரசனுக்கு நன்றி செலுத்தி "அப்படியே செய்வோம் மாமா" என்று அழைத்து ஜனாப் அஜீஸ் முகமது அரசனுக்கு கம்மகுல பெரியோர்கள் விடைகொடுத்து அனுப்பினார்கள்.

## *கம்மகுலத்தவர்கள் ஆந்திர தேசத்தில் குடியேறுதல்*

கோதாவரி ஆற்றைக்கடந்த கம்மகுலத்தவர்கள் கிருஷ்ணா நதியையும் தாண்டி ஆந்திரா வந்து சேர்ந்தார்கள். வரும் வழியில்

சில குலத்தவர்கள் வசதியான இடங்களில் தங்கி விட்டார்கள். பலர் ஓர் சமவெளியில் வந்து தங்களுடன் கொண்டு வந்திருந்த கூடாரங்களை அடித்தும் பனை ஓலையால் வேய்ந்த சிறு வீடுகளைக் கட்டிக்கொண்டு சில நாட்கள் கழித்தார்கள். ஒரு நாள் இரவு நம்பூரார் நாரிமுத்து நாயுடு, காகல்ல வெங்கிடப்ப நாயுடு, நீர்குண்டார் ரங்கப்ப நாயுடு, ராஜகொண்டலார் கோவிந்தப்ப நாயுடு, துக்கின்னார் ராமி நாயுடு, எண்டபில்லார் அயோத்தி நாயுடு, நீர்குண்டார் பாபிநாயுடு, குண்டுபில்லார் கோனமநாயுடு, ஆதூரிவார் அக்கமநாயுடு, உப்பட்டலவார் திம்மி நாயுடு ஆகிய அனைவரும் ஒன்று கூடி, “நாம் இப்படியே இங்கிருந்தால் என்ன செய்வது? நமது வாழ்க்கை நலம் பெற்று வாழ நாம் வழிதேட வேண்டாமா? இது எந்த தேசம், யாருடைய ஆட்சியில் இருக்கிறது என்று தெரிந்து, நம் வாழ்க்கைக்கு வேண்டிய வசதி செய்து கொள்ள வேண்டாமா?” என்று ஆலோசித்து, மறு நாள் காலையில் அனைவரும் சென்று அந்த தேசத்து அரசனைக் கண்டு சகல விபரங்களையும் தெரிந்துகொள்ள வேண்டியது என்று தீர்மானம் செய்து மறுநாள் காலையில் ரேணுகையை வணங்கி பட்டணம் புறப்பட்டார்கள்.


அந்திநேரம் பட்டணம் வந்து சேர்ந்தார்கள். அன்று இரவு தங்குவதற்கு ஏதாவது தகுந்த இடம் கிடைக்குமா என்று விசாரித்து பிரம்மகுல வெங்கடேஸ்வரலு என்பவர் உணவு விடுதி யொன்று யாத்திரைவாசிகளுக்கு நடத்தி வருவதாக அறிந்து அங்கு சென்று தங்கி அன்று இரவு உணவு விடுதி வெங்கடேஸ்வரலுவை சந்தித்து “ஐயா, இந்த நாட்டை ஆளும் அரசன் யார்?, அவர் பெயர் என்ன?, அவருடைய குணம் எப்படி?, நாங்கள் அயல் தேச வாசிகள் அரசனைக் காண வந்திருக்கிறோம்” என்று கேட்க, வெங்கடேஸ்வரலு இதை ஆளும் அரசன் பெயர் பலபத்திரர், அரசன் அரண்மனை இந்த நகர கோடியில் இருக்கிறது. நல்ல தன்மையுடையவர், ஏழைகளை ஆதரிக்கும் குணம் கொண்டவர், யாரும் சாதாரணமாக அவரைப் பார்க்கலாம் பேசலாம்.

மற்ற அரசர்கள் போல கட்டுதிட்டம் ஒன்றும் கிடையாது என்று சொல்லக்கேட்ட கம்மகுல பெரியவர்கள் மகிழ்ந்து மறுநாட்காலையில் எழுந்து ரேணுகையை வணங்கி பலபத்திர ராஜா அரண்மனைக்குச் சென்றார்கள். அங்கு வாயில் காப்போனிடம் தங்கள் வருகையை அரசனுக்கு சொல்லி வர அனுப்ப அரசன் உத்திரவு பெற்று அரசன் வீற்றிருக்கும்படியான கொலு மண்டபம் சென்று அரசனைக் கண்டு வணங்கினார்கள். அரசனும், பெரியோர்களே! வாருங்கள் உட்காருங்கள் என்று ஆசனம் கொடுத்து உட்காரவைத்து, "நீங்கள் இந்த நாட்டிற்கு புதியவர் போல் தோன்றுகிறது, நீங்கள் யார்? உங்கள் வரலாறு என்ன? என்னைக் காண வந்ததன் காரணம் என்ன?" என்றார். அது கேட்டு கம்மகுலத்து பெரியவர்கள் "அரசே நாங்கள் வடக்கே கன்மகிரிப் பட்டணத்தில் வாழ்ந்து வந்தோம். டில்லி சக்ரவர்த்தி அஜீஸ்முகமது அரசன் தன் மகனுக்கு எங்கள் கம்ம குல பெண்ணை திருமணம் செய்ய திட்டமிட்டான், நாங்கள் பெண் கொடுக்க மறுத்தால் எங்களை துன்புறுத்துவான் என்றறிந்து குலத்தைக்காக்க நாங்கள் தீர்மானம் செய்து கொண்டு பூமி வீடு வாசல் முதலியவைகளைத் துறந்து குடும்ப சமேதர்களாக நாட்டை விட்டு வெளியே வந்துவிட்டோம். எங்களை அந்த அரசன் கோதாவரி நதி வரை துரத்தி வந்தான். நாங்கள் தப்பித்து இங்கு வந்து சேர்ந்து அடவியில் தங்கியிருக்கிறோம். இப்போது உங்கள் குடிஜனங்கள் தான் நாங்கள். எங்களை ஆதரித்து இந்த நாட்டில் எங்களை வாழ வகை செய்து கொடுத்து எங்களையும் எங்கள் குலத்தையும் காப்பாற்ற வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்" என்றார்கள். இதைக் கேட்ட அரசன், அவர்களின் தீரமும், வீரமும் குலத்தைக் காக்கும் பொருட்டு செய்த தியாகத்தையும் பாராட்டி "பெரியோர்களே இந்த தேசத்தில் நீங்கள் எங்கு வேண்டுமானாலும் நிலங்களை எடுத்துக்கொண்டு உங்கள் வாழ்க்கையை நடத்த நான் சம்மதிக்கிறேன். நீங்கள் எங்கெல்லாம் பூமிகளை எடுத்துக் கொள்கிறீர்களோ அதன் விவரங்களை மட்டும் அரசாங்கத்திற்கு அனுப்புவதுடன் ஆண்டு தோறும் நீங்கள் அடையும் ஆதாயத்தில் ஆறில் ஒரு பாகம் களஞ்சியத்திற்கு அனுப்ப வேண்டியது.

இதோ என் முத்திரை வைத்த பட்டயம்” என்று எழுதிக்கொடுத்து அரசாங்க முத்திரை வைத்துக் கொடுத்தார். கம்மகுலப் பெரியவர்கள் அரசனுக்கு வணக்கம் செலுத்தி பட்டயம் பெற்று விடைபெற்றுத் திரும்பினார்கள்.

## *ஆந்திர தேசத்தில் கம்மகுலத்தவர் வாழ்க்கை*

அரசன் பலபத்திரரிடம் பட்டயம் பெற்று வந்த கம்மகுலத்தவர்கள் தங்களுக்குப் பிடித்தமான பொருத்தமான இடங்களைத் தேடி அவர்களுக்கு சாத்தியமான அளவு பூமிகளை எடுத்து விவசாயம் செய்து வந்தார்கள். ரேணுகையின் அருளால் அங்கு மாதம் மும்மாரி பெய்து கரும்பு, நெல், வாழை, நவதானியங்கள் முதலியவை விளைந்து வந்தன. கம்மகுல குடும்பங்கள் செழித்து வந்தன. அங்கங்கே வசித்து வந்த கம்மகுலத்தவர்கள் தங்கள் நிலத்திற்கு அருகாமையிலேயே வீடுகள் கட்டி கிராமங்களாக்கி அக்கிராமங்களுக்கு வீட்டுப்பெயர் வைத்து ஒவ்வொரு கிராமத்திலும் விநாயகர் கோவில், ரேணுகை கோவில், சத்திரம், சாவடிகள், நடைகிணறுகள் வெட்டி இல்லையென்று இரப்போருக்கு உதவி செய்து அரசன் உத்திரவுப்படி ஒரு பங்கு ஆதாயம் அரசனுக்கு செலுத்தி வாழ்ந்து வந்தார்கள்.




(விஜயவாடாவில் இருந்து குண்டுர் செல்லும் வழியில் 24 கி.மீ-ல் நம்பூரு எனும் ஊரும் விஜயவாடாவில் இருந்து தெனாலி செல்லும் வழியில் 21 கி.மீ-ல் துக்கிரில்லா எனும் ஊரும் இன்றும் உள்ளது. இந்த இரண்டு ஊர்களும் 5 கி.மீ. இடைவெளியில்

உள்ளது. ஆந்திராவில் குலப் பெயர் கொண்ட கிராமங்கள் இன்றைக்கும் காணலாம்) நம்பூரு என்ற பெயர் கொண்ட நம்பூரு கிராமமும், காதிதெல்லூர் என்று காகல்லார் கிராமமும், பெஜவாடா பெஜாடியாரும், குண்டுபில்லார் குண்டு பிலாரும், வற்றாத நீர் குன்று இருந்த இடத்தில் நீர்கொண்டலரும், பாபட்லா எனும் கிராமத்தை பேபட்லாறும், துக்கினாபுரம் என்னும் கிராமத்தை துக்கின்னாரும், உடுபட்ல எனும் கிராமத்தை உட்பட்லாரும், ஆதிவூர் எனும் கிராமத்தை ஆதூர்வாரும் வீட்டுப்பெயர்களை கிராம பெயர்களாக வாழ்ந்து வரும் நாளில், நம்பூரார் குலத்தில் நாரிமுத்து என்பவர் மிகுந்த செல்வாக்கு பெற்றவர், அவர் மனைவி ஏண்டம்மா எனும் அம்மையார் பதிபக்தியும், தெய்வபக்தியும் தர்ம சிந்தனையுமுள்ளவர், இவர்களுக்கு ஆறு குமாரர்கள் உண்டு. கொண்டம நாயுடு, வெங்கிடாத்திரி நாயுடு, ஏலப்ப நாயுடு, வேணுகோபால் நாயுடு, ராமி நாயுடு, சின்னம நாயுடு இவர்கள் ஆறு பேரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து விவசாய வேலைகளில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். அதற்கடுத்த துக்கினபுரத்தில் துக்கின்னார் ராமி நாயுடு, பாபட்ல ரங்கப்ப நாயுடு, உப்பட்ல குலசேகர நாயுடு வாழ்ந்து வந்தார்கள். அது சமயம் ஆதூரி பாபி நாயுடுவுக்கு காகல்ல வெங்கிடப்ப நாயுடு குமாரத்தி பேரம்மாளை கல்யாணம் செய்து வைத்தார்கள். நம்பூரார் நாரிமுத்து நாயுடு தன் மூத்த மகன் கொண்டமநாயுடுவுக்கு, உட்பட்ல குலசேகர நாயுடு மகள் மங்கம்மாளை மணம்பேசி கல்யாணம் செய்து வைத்தார்கள். துக்கின்னார் ராமி நாயுடுவுக்கு ஆண் குழந்தைகள் இருவர். இவர்களில் மூத்தவர் நாரப்ப நாயுடு, இளையவர் துரை கிருஷ்ணம நாயுடு. ஆதூரிவாரி பாபி நாயுடு மகள் ஏலம்மாளை நாரப்ப நாயுடுவுக்கு மனு பேசி கல்யாணம் செய்து வைத்தார்கள். அதற்குப் பின் துக்கின்னார் துரைகிருஷ்ணம நாயுடுவுக்கு நீர் கொண்டார் வீட்டில் லட்சுமிம்மா எனும் பெண்ணை மனு பேசி கல்யாணம் செய்து வைத்தார்கள்.

நம்பூரார் கொண்டம நாயுடு மங்கம்மா, நம்பூர் நகரில் குடித்தனம் நடத்தி வரும் நாளில், மங்கம்மா தனது மாமன் மாமியார் கொழுந்தன்மார்களையும் அன்புடன் உபசரித்து தன் பதி கொண்டம நாயுடு சொல் தவறாது குடித்தனம் நடத்தி வந்தாள். சில நாட்களுக்குப் பிறகு கொண்டம நாயுடுவின் தாய் தந்தையர்கள் காலமானார்கள். அதன் பிறகு மங்கம்மா குடும்பத்தை பொறுப்பேற்று நிர்வாகம் செய்து வரும்போது தனது கொழுந்தன்மார்கள் வயது வந்தும் கல்யாணம் ஆகாமல் இருப்பதை கொண்டமநாயுடுவிடம் சொல்லி கல்யாணங்களுக்கு ஏற்பாடு செய்ய ஆலோசித்து வரும்படி துக்கினாபுரம் சென்று வர வேண்டினாள். கொண்டம நாயுடு மனைவி மங்கம்மா ஆவல்படி மறுநாட்காலையில் துக்கினாபுரம் சென்று மாமனார் குலசேகர நாயுடுவையும் மைத்துனர் உப்பட்ல கஸ்தூரி நாயுடுவையும் கலந்து ஆலோசித்து காதிதெல்ல நகர் சென்று வெங்கிடப்ப நாயுடு குமாரத்தி லட்சுமி எனும் பெண்ணை மனு பேசி முடித்து முறையே மற்ற நால்வருக்கும் மனு பேசி சீரும் சிறப்புமாக அனைவருக்கும் கொண்டமநாயுடு மங்கம்மா கல்யாணம் செய்து வைத்து இன்புற்றார்கள்.

நம்பூரார் கொண்டமநாயுடு மனைவி மங்கம்மா தன் கொழுந்தன்மார்களையும் தங்கைகளையும் அழைத்துவந்து விருந்து உபசாரம் செய்து மகிழ்ந்தாள். அன்று இரவு தங்கைகளை அழைத்து கூடத்தில் தன் அருகில் உட்கார வைத்து "தங்கைகளே நமது குலத்தைப் பற்றியும் குடும்பத்தில் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டிய அவசியத்தையும், பெண்கள் கல்யாணமானபிறகு நடந்து கொள்ள வேண்டியதையும் சொல்லுகிறேன் கேளுங்கள். நமது வம்சமானது மிகவும் மேலானது நம்பூரார் குலம் ஏருட்ல கோத்திரம். பிறந்த குலத்தை விட புகுந்த குலம் மேல். நமது குலதேவதை ரேணுகையை நாம் ஒரு நாளும் மறக்கக்கூடாது. பெண்கள் குடும்ப நிர்வாகம் நடத்த முற்பட்டால் முதலில் மாமன், மாமி, நாத்தன், கொழுந்தன், உற்றார் உறவினர்களை அன்புடன்

நேசித்து உபசரிக்க வேண்டும். சூரிய உதயத்திற்குமுன் எழுந்து நீராடி நெற்றியில் திலக குங்குமம் வைத்து பதி முக தரிசனம் செய்து, சூரிய நமஸ்காரம் செய்து அதன் பிறகு வீட்டு வேலைகள் செய்து, இல்லையென்பார்க்கு அன்புடன் ஆதரவளித்து சுற்றத்தாரை நேசித்து, அயல் வீடு சென்று வீண் வார்த்தையாடாமல் கோள் சொல்பவர்களை அருகில் சேர்க்காமல் பொறுமையே ஆபரணமாக எண்ணி குடும்பம் நடத்த வேண்டும். மேலும் நாம் ஒற்றுமையாக நடந்து நமது குலப்பெயரை நிலைநாட்ட வேண்டும்" என்று பல புத்திமதிகள் அன்பான வார்த்தைகளால் இதமாக போதித்து ரேணுகையின் விரத மகிமைகளை அனைவருக்கும் சொல்லி விடைகொடுத்து அனுப்பினாள்.

## *ஆந்திரப் பிரதேசத்தில் கம்மவார் வாழ்வும் வந்த துன்பமும்*

குலதேவதை ரேணுகையின் அருளால் கம்ம குலத்தினர் செல்வச் செழிப்போடும். நற்பண்புகளோடும் ஏழைகளுக்கு உதவியும் சுற்றத்தாரைக் காத்தும் வாழ்ந்தனர். அரசனுக்குக் கொடுக்க வேண்டிய ஆறில் ஒரு பங்கைச் செலுத்தினர். தான தருமங்கள் செய்தனர். தம் கருமங்களைக் கருத்தோடு செய்து வந்தனர். இவ்வாறு பெருமையோடு வாழ்ந்த காலத்தில் மழை தவறியது. தொடர்ந்து சில ஆண்டுகள் மழை பொய்த்தமையால் ஆறு, குளங்கள் வற்றின. பஞ்சம் தாண்டவமாடிற்று. குடி தண்ணீர் கிடைப்பதே அரிதாயிற்று. ஆடு மாடுகளும் பறவைகளும் நீரின்றி வீழ்ந்து இறந்தன. மக்களின் வறுமை நிலை கண்ட மன்னன் தன் களஞ்சியத்திலிருந்து தானியங்களை வாரி ஈந்தான். அரசகளஞ்சியமும் காலியாய் விட்டது. அதற்கு மேல் அரசனாலும் மக்களுக்கு உதவ இயலவில்லை. ஆதலால் கம்மவார் தெற்கு நோக்கி பயணப்பட்டு சந்திரிகிரி அடைந்தார்கள். அங்கும் மிகவும் வறட்சியாய் இருந்தது.

## *மக்கள் மழை வேண்டி ரேணுகையை இறைஞ்சுதல்*

கம்ம குலத்துப் பெண்கள் மழைச்சோறு எடுத்து இந்திரனுக்கு பொங்கலிட்டு விழா நடத்தினர். ரேணுகையை வழிபட்டார்கள். "தாயே ரேணுகையே, தயை நிறைந்தவளே! சகல கலைகளையும் கற்றவளே! சாந்தமே வடிவானவளே! தரும சொரூபமாக இருப்பவளே! ஜமதக்கினியின் அன்புக்குரியவளே! பரசுராமனின் தாயே! கன்மகிரியில் எழுந்தருளியிருந்து எங்களுக்கு வந்த துன்பங்களைப் போக்குவதாக வாக்களித்து எங்களை அழைத்து வந்தாய். ஆற்றில் வழி காட்டிக் கம்ம குலத்தைக் காப்பாற்றி வாழவகை செய்தாய். இப்போது இங்கு பஞ்சம் தாண்டவமாடுகிறது! கம்மகுலமே பூண்டோடு அழிந்துவிடும் பஞ்ச நிலைமை வந்து விட்டது. தாயே திருவருள் கூர்ந்து எங்களை வாழ்விக்க வழி காட்ட வேண்டும். எம் குலம் சேர் எழில் விளக்கே! எங்களுக்கு ஒரு வழி காட்டி அருள்வாயாக" என்று பணிந்து வேண்டினார்கள்.

## *தேவி இரங்கிச் சென்னிமலைநாதனின் உதவியை நாடுதல்*

அடியார்க்கு எளியவராகி அருள் செய்து இரங்கும் ரேணுகை அன்று இரவு சென்னிமலை ஆண்டவனை அணுகினாள். "அண்ணா உலக உயிர்கள் அனைத்தையும் காப்பது உன் கடமை அல்லவா? என்னையே நம்பி, என்னையே வணங்கி உயிர் வாழும் கம்ம குலத்தவர்கள் ஆந்திரதேசத்தில் உண்டான கடும் பஞ்சத்தினால் வாடுகின்றனர். உண்ண உணவும் குடிக்க நீரும் இன்றித் தவிக்கிறார்கள். ஆடு மாடுகளை இழந்துவிட்டனர். தம் குழந்தைகளையும் காப்பாற்ற முடியாது கவலையால் வாடுகின்றனர். இந்தப் பஞ்சநிலை இன்னும் சில ஆண்டுகள் நீடிக்க உள்ளது. என் அடி பணிந்து வாழும் கம்ம குலத்தவர்களைக் காப்பது உன் கடமை அண்ணா! அதற்கு ஒரு வழி, அவர்களை இந்த சென்னிமலைப் பகுதிக்கு அழைத்துக் கொண்டு வருவதே. அவர்கள் இங்கு வந்தால் உம்மையும் அன்போடு வணங்கிப் போற்றி வருவார்கள் வழிபடு கடவுளாகக் கொண்டு வணங்குவார்கள்"

என்று சென்னிமலை நாதனிடம் கூறினாள்.

*பவள முத்து வியாபாரிகள்*

சென்னிமலை நாதனும், ரேணுகா தேவியும் பவளமும் முத்தும் விற்கும் வணிகர்கள் போல் அண்ணன் தங்கையாக வேடம் பூண்டார்கள். பொதிமாடுகளின் மேல் முத்து மூட்டைகளை ஏற்றி கொண்டு போய் ஓர் இரவு நேரத்தில் சந்திரகிரிப் பகுதியை அடைந்தார்கள். அதிகாலையில் எழுந்து கம்மவார் கூடாரங்கள் அருகில் சென்று "பவளம் முத்து வாங்கவில்லையோ! பவளம் முத்து வாங்கவில்லையோ!" என்று தெலுங்கு மொழியில் கூவிக் கொண்டு சென்றார்கள். சுற்றிச் சுற்றி கூவிச் சென்றாலும் ஏன் என்று கேட்பார் இல்லை வணிகர்கள் சுற்றிச் சுற்றி அலுத்துவிட்டார்கள். அலுத்துச் சோர்ந்து இறுதியில் அரச மர விநாயகர் மேடையில் வந்து மூட்டைகளை இறக்கி வைத்துவிட்டு உட்கார்ந்தார்கள்.

*ஊரார் வியப்பு*

வியாபாரிகள் முத்து பவளங்களை விற்க விலை கூறிச் செல்வதை கம்மவார் மக்கள் பார்த்தார்கள். வியாபாரிகளின் உடையழகு, அணியழகு, மாடுகளின் நடையழகு, அவர்களின் குரலினிமை ஆகியவற்றைக் கண்ட பலர் இப்பஞ்ச காலத்தில் இவர்களுக்கு வியாபாரமாகுமா? யார் வாங்குவார்கள்? என்று பேசலானார்கள். அந்த வணிகர்களை கேட்டால் நல்ல நீர் வளம் உள்ள இடங்கள் தெரியும் என்று பேசிக் கொண்டிருந்தார்கள். நம்பூரார் கொண்டமநாயுடு மற்ற குலப் பெரியவர்களான துக்கின்னார் நாரப்ப நாயுடு, உப்பட்ல குலசேகர நாயுடு, ஆதூரி அக்கம நாயுடு, பாபட்ல ரங்கப்ப நாயுடு, காங்கல்ல வேங்கடப்ப நாயுடு, நீர்க்கொண்டார் சாமநாயுடு மற்றும் ஏனைய பெரியோர்களும் பிள்ளையார் கோவிலுக்குச் சென்றனர். அப்போது அந்த வியாபாரி கம்மகுலப் பெரியோர்களை அன்புடன் வணங்கி வரவேற்று அருகில் அமரும்படி வேண்டினார். கம்மகுலப் பெரியோர்கள்

அவ்வேண்டுகோளை மதித்து வியாபாரியினருகில் அமர்ந்தார்கள். அப்பவள வியாபாரியின் தங்கை வெற்றிலை பாக்கு கொண்டுவந்து வைத்து விட்டு நின்றாள்.

இவ்வாறு அன்புடன் உபசரிக்கப்பட்ட கொண்டம நாயுடு வியாபாரியைப் பார்த்து, "அய்யா! தாங்கள் எந்த ஊர்?. இந்த அம்மையார் யார்? இங்கு எங்கு வந்தீர்கள்? இந்த வெற்றிலையை பார்த்தால் இப்போதுதான் பறித்து வந்தது போல் உள்ளதே" என்று கேட்டார்.

பவள வியாபாரி, "பெரியோர்களே! நாங்கள் தென்னாட்டு வியாபாரிகள். இங்கு எங்கள் முத்து பவளங்களை விற்க வந்தோம் இங்குள்ள பஞ்ச மிகுதியால் வியாபாரம் எதுவும் நடக்கவில்லை பொதி மாட்டுக்குத் தீவனமும், தண்ணீரும், எங்களுக்கு உணவு ஏதும் கிடைக்கவில்லை என்ன தேசம் இது?" என்றார். அது கேட்ட கொண்டம நாயுடு, "அய்யா! நாங்கள் என்ன செய்வோம், சில ஆண்டுகளாகப் பருவ மழை தவறி ஆறு குளங்கள் வற்றி விட்டன. மக்கள் சோறும் நீரும் இன்றித் தவிக்கிறார்கள். நாங்கள் தெற்கு நோக்கி நல்ல நீர் வளம் உள்ள இடங்களை தேடி செல்கிறோம். நாங்கள் எங்கள் குலதேவதை ஸ்ரீ ரேணுகையைப் போற்றி வேண்டினோம் விமோசனம் கிடைக்கவில்லை. எங்கள் குலம் அடியோடு அழியும் காலம் வந்துவிட்டது என்று எண்ணி வருந்துகிறோம். நல்ல நிலையில் வாழ்ந்து வந்த எங்கள் நிலை இப்படி ஆகி விட்டது".

"மண்ணின் மிசை வான் பொய்த்து நதிகள் தப்பி
மண்ணுயிர்கள் கண்சாம்பி உணவு மாறி
விண்ணவர்க்கும் சிறப்பில்வரும் பூஜைஆற்றா மிக்க
பெரும்பசி உலகில் விரவக் கண்டோம்

என்று சான்றோர் கூறியுள்ளதைக் கண்கூடாகக் கண்டு அனுபவிக்கிறோம். நீங்கள் தென்னாடு என்று சொன்னீர்களே, அந்த நாடு எது? நீங்கள் யார்? இந்த அம்மை யார்? உங்கள் நாட்டின் வளம் எப்படி?" என்று கேட்டார். அதற்கு வியாபாரி, "அய்யா நாங்கள் கொங்கு நாட்டில் பெருந்துறைப் பகுதியில் உள்ள சென்னிமலைக் கிராமத்தில் வாழ்ந்து வருகிறோம். என் பெயர் சிவநேசன், இந்த நாகம்மை என்னுடைய தங்கை. தன் கணவர் கைவிட்டதால் பிறந்த வீடு வந்து சேர்ந்து எனக்கு உதவி புரிந்து வருகிறார் " என்றார்.

எங்கள் பகுதியில் சென்னிமலை என்ற ஒரு மலை உள்ளது. அகத்தியர் தென் பொதிகைக்குச் செல்ல வந்தபோது அம்மலையில் தங்கி சிவபெருமானை பூஜை செய்ததால் அம்மலை புண்ணியஸ்தலமாயிற்று. மாதமும்மாரி தவறாது பெய்து எம் நாடு செழித்து விளங்குகிறது மக்களும் ஊக்கத்தோடு உழவு போற்றி உணவு பெருக்கி அறம் செய்து இன்பமாக வாழ்கின்றனர். சென்னிமலைமேல் அடியவர்களுக்கு அருள் செய்யும் சென்னிமலையப்பன் எழுந்தருளியுள்ளான். தம்மை வணங்கும் பக்தர்களுக்கு பரிவு காட்டியருளும் பரமன் அவன். உங்கள் குலம் தழைக்க நீங்கள் எங்கள் நாட்டிற்கு வந்து சேருங்கள். நாங்கள் சென்னிமலை அடிவாரத்தில் சிவபக்த பஜனை மடத்தில் வாழ்ந்து வருகிறோம் என்று சொன்னார்கள்.

அப்போது பேரொளி தோன்றியது. அவ்வொளியைப் பார்க்க முடியாது கண்மூடித் திறப்பதற்குள் வியாபாரியையும், அவர் தங்கையையும், பொதிமாட்டையும் காணவில்லை. இதைக்கண்ட எல்லோரும் வியப்படைந்தனர். ஸ்ரீ ரேணுகா தேவியின் திருவிளையாடல் தான் இது என்று எண்ணித் தாயே! ரேணுகா! நீ வியாபாரியின் தங்கையாக வந்து எங்களுக்கு தரிசனம் கொடுத்து ஆட்கொண்டாய், உன் திருவுளப்படி பெருந்துறை பகுதியில் உள்ள சென்னிமலைக்கு இன்றே புறப்படுகிறோம் என்று தீர்மானித்தார்கள், பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடு செய்தார்கள்.

## சென்னிமலைப் பயணம்

மறுநாள் சந்திரகிரிப் பகுதியை விட்டு கட்டை வண்டிகளிலும், குதிரை வண்டிகளிலும், பொதி மாடுகளோடு புறப்பட்டார்கள். நம்பூரார் கொண்டம நாயுடு தன் சகோதரர் ஐவரோடும் புறப்பட்டார். மேலும் துக்கின்னார் நாரப்ப நாயுடு, துரைகிருஷ்ணம நாயுடு, உட்பட்ல குலசேகர நாயுடு, கஸ்தூரி நாயுடு மற்றும் பாபட்லார், நீர்கொண்டார், சென்னார், தோணாதலார், ஆதூரரார் மற்றும் பலர் பயணமாகிச் சென்றனர்.

சென்னிமலைக்குச் செல்லும் வழியை விசாரித்துக் கொண்டு சென்னிமலைப் பக்கம் உள்ள உப்பாற்றங்கரையில் கூடாரங்கள் அமைத்து தங்கினர். பின் சென்னிமலைக்கு பெரியவர்கள் சென்ற போது அங்கு ஆண்டவன் கோவில் பூசாரியாகிய பண்டாரம் எதிர்ப்பட்டார். அவர் “தான் சென்னிமலைப் பக்கத்தில் உள்ள கவுண்டன்பாளையத்துக் காணியாள கந்தசாமிக் கவுண்டருடைய வீட்டிற்கு ஆண்டவனின் தீர்த்தப் பிரசாதம் கொண்டு போவதாக” சொல்லி அவர்களுக்கும் திருநீரும், தீர்த்தமும் வழங்கினார்.

அப்போது கொண்டம நாயுடு அவரிடம் காணியாள கந்தசாமிக் கவுண்டரின் வரலாற்றை அறிய விரும்பினார். அதற்கு பண்டாரம் கந்தசாமிக் கவுண்டர் அப்பகுதியில் புகழ் பெற்ற நிழக் கிழார். பன்னிரெண்டு கிராமங்களுக்கு அதிகாரி, உப்பாறு முதல் சென்னிமலை வரையுள்ள ஆறு மைல் பரப்புள்ள பூமிகள் அவருக்குரியவை தெய்வ பக்தி நிறைந்தவர், தர்ம சிந்தனை மிகுந்தவர், அண்டினோரை அருளோடு ஆதரிப்பவர் என்று கூறினார். கம்மகுலப் பெரியோர்கள் மனம் மகிழ்ந்து அத்தகைய சான்றோரை தாங்கள் பார்க்க வேண்டும் என்று விரும்பினர். அவரை அறிமுகம் செய்து வைக்க வேண்டுமென்று பண்டாரத்திடம் வேண்டிக்கொண்டனர்.

பண்டாரம் கம்ம குலத்தாரை அழைத்துக் கொண்டு கந்தசாமிக் கவுண்டர் இல்லத்திற்குச் சென்றார். பண்டாரம் கவுண்டரின் வீட்டிற்குள் சென்றார். கவுண்டர் அவரை வரவேற்று, “அய்யா! நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? கையிலுள்ள தட்டில் இருப்பது என்ன?” என்று கேட்டார். பண்டாரம் “ஐயா, இன்று கார்த்திகை நட்சத்திரம், அர்ச்சகர்கள் இன்று காலை சென்னிமலை நாதனுக்கு அர்ச்சனை பூஜைகள் செய்துத் தங்களுக்கு தீர்த்தப் பிரசாதம் கொடுத்தனுப்பியுள்ளனர்” என்றார். கந்தசாமிக் கவுண்டர் தீர்த்தப் பிரசாதம் பெற்றுக் கொண்டு பண்டாரத்துடன் வெளியே வந்தார். வெளித் தாழ்வாரத்தில் காத்துக் கொண்டிருக்கும் கம்ம குலத்தாருக்கும் பிரசாதம் கொடுத்த பண்டாரம் மறைந்தார். கவுண்டர் வியப்படைந்து மெய் மறந்து மயிர்க் கூச்செறிந்து, அய்யா நீங்கள் யார்? இப்போது தீர்த்தம் கொடுத்த பண்டாரம் எங்கே? “நீங்கள் அவருடன்தான் வந்தீர்களா? இது நாள் வரை ஒரு நாளும் சென்னிமலையிலிருந்து எனக்குத் தீர்த்தப் பிரசாதம் வந்தது கிடையாது. நான் கண்டது கனவா, அல்லது நனவுதானா! நீங்களே உண்மையை விளக்க வேண்டும்” என்று வேண்டிக்கொண்டார். அது கேட்ட கம்மகுலப் பெரியவர்கள் “அந்த பண்டாரம் யார் என்று எங்களுக்குத் தெரியாது, நாங்கள் இந்த பகுதிக்கு வந்து இரண்டு நாட்களே ஆயிற்று, உப்பாற்றின் கரையில் தங்கியுள்ளோம், சென்னிமலை சென்று தரிசித்து வரச் சென்றோம், பிள்ளையார் கோவிலருகில் வந்து வழி தெரியாது விழித்து நின்றோம், இந்தப் பண்டாரம் அங்கே வந்தார். அவர் சொல்லைக் கேட்டு தங்களைப் பார்க்க அவருடன் வந்தோம், அவரைப் பற்றி வேறு ஒன்றும் நாங்கள் அறியோம்” என்றனர்.

இதைக் கேட்ட கந்தசாமிக் கவுண்டர் “சென்னியப்பா, உன் கருணையே கருணை, பல நாள் தவமிருந்தும் பார்க்க முடியாத, எண்ணவும் முடியாதவனே! தேவர்க்கும் அறியவனே! அடியார்க்கு

எளியவனே! என்னை ஆள்பவனே நீ பண்டார வேடமாக வந்து காட்சியளித்தாய், என் ஜன்மம் ஈடேறத் தீர்த்தப் பிரசாதம் கொடுத்து மறைந்தாய்!" என்று ஆண்டவனைப் போற்றினார். ஆனந்தக் கண்ணீர் விட்டார், கம்ம குலப் பெரியவர்களைக் கட்டியணைத்து "அய்யா உங்களால் அல்லவா என் அப்பனை, சென்னிமலை நாதனைப் பண்டார வேடமாகக் கண்டேன். உங்களுக்கு என்னால் ஆக வேண்டியதைச் சொல்லுங்கள்" என்றார். அப்போது கம்ம குலப் பெரியோர், ரேணுகையின் திருவருளே இச் செயல்களுக்குக் காரணம் என்று அக மகிழ்ந்து தங்கள் வரலாற்றை ஆதியோடந்தமாகக் கூறினார்கள்.

எங்கணம் நிறைந்து நிற்போன்
  எழில் நிறை அரசி பாசம்
தங்கவாள் மிளிரும் கையாள்
  தலையுறு மணிகிரீடம்
திங்களைப் போன்ற தன்மை
  திகளொளி முகமும் கொண்டு
இங்கெமை ஏற்பீராயின்
  ஈடெமக் கெவரே தேவி

என்று பாடினார்கள். இதைச் செவியுற்றுப் பேரானந்தம் கொண்ட கந்தசாமிக்கவுண்டர். "அய்யா உங்கள் வரலாறு மிகவும் பரிதாபகரமானது. உங்களுக்கு ஆண்டவன் துணை இருக்கிறான் என்பதனை கண்கூடாகக் கண்டேன். உங்கள் குலம் பெருகவும் வாழ்க்கை நலம் பெருகவும் இங்கு உள்ள உப்பாற்றங்கரையிலிருந்து மூன்று காத தூரத்திற்குள் எங்கு வேண்டுமானாலும் பூமிகளை வைத்துக்கொண்டு இந்த பகுதியில் எங்களுடன் பக்கபலமாக வாழ்க்கை நடத்துவீர்கள். அதற்காக நான் பட்டயம் எழுதிக் கொடுக்கிறேன்" என்று சொல்லி ஆண்டவனை வணங்கிப் பட்டயம் எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுத்தார்.

அப்போது கொண்டம நாயுடு “அந்தப் பூமிக்கு விலை என்ன?” என்று கேட்டார். அதற்கு கவுண்டர், “ஐயா நீங்கள் விலை கொடுப்பீர்கள் என்று நான் எழுதிக் கொடுக்கவில்லை. உங்களால் நான் ஆண்டவனை தரிசித்ததற்கும், நான் காண முடியாத சென்னிமலையப்பன், சிவ சண்முகன், பண்டார வேடமாக வந்து தீர்த்தப் பிரசாதம் கொடுத்து உங்களையும் காட்டிச் சென்றார். அதற்கு நான் என்ன கைமாறு செய்தாலும் ஈடாகாது. ஆகையால் நீங்கள் இந்நிலப்பகுதியைப் பெற்றுக் கொண்டு கார்முள்படர்ந்த காடுகளையும் சீர் செய்து வாழ்க்கையை நடத்துங்கள் ”என்றார்.

அது கேட்ட கொண்டம நாயுடுவும் மற்ற பெரியவர்களும், “ஐயா, எங்கள் கம்மவார் குலம் எதையும் தானமாகப் பெறலாகாது. தானமாகப் பெற்றால் எங்கள் குலம் வளர்ச்சியடையாது. ஆகையால் நீங்கள், நாங்கள் கொடுக்கும்படியான சிறு தொகையை விலையாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்” என்று நூறு வராகனைக் கொடுத்துக் கந்தசாமிக் கவுண்டரின் பட்டயத்தைப் பெற்றுக் கொண்டு, அவரையும் அழைத்துக்கொண்டு உப்பாற்றங்கரையில் கூடாரங்கள் இருக்கும் இடம் வந்து சேர்ந்தார்கள்.

கம்ம குலப் பெரியவர்கள் தத்தம் கூடாரங்களுக்குச் சென்று நடந்த விவரங்களையெல்லாம் தம் உறவினர்களுக்குச் சொல்லி ஆனந்தமடைந்தனர். கொண்டம நாயுடுவின் வரவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த மங்கம்மா தன் கணவர் ஒரு விருந்தினருடன் வருவதைக் கண்டு கூடாரத்தினுள் சென்றாள். கந்தசாமிக் கவுண்டரைப் பற்றியும், நடந்தவற்றையும் கொண்டம நாயுடு தன் மனைவியிடம் ஒன்று விடாமல் கூறிக் கந்தசாமிக் கவுண்டரின் வள்ளல் தன்மையைப் போற்றி அவருக்கு நீர் ஆகாரம் கொடுக்க, பின் நாயுடு தாழ்வாரத்திற்கு வந்து கவுண்டரோடு தத்தம் பிரதேசங்களைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள்.

காலையில் கூடாரங்களுக்குப் பக்கத்தில் "அம்மா தாய்மார்களே அரிசி, கம்பு, சோளம், காய்கறிகள், தயிர், மோர், வாங்கலையோ" என்று ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தலை மேல் கூடைகளை வைத்துக் கூவிக் கொண்டு வந்தார்கள். சாளரத்தின் வழியே பார்த்த மங்கம்மா வெளியே வந்து அவர்களைக் கூப்பிட்டு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு விலை கொடுத்தார் "எங்கிருந்து வந்தீர்கள்?" எனக்கேட்ட மங்கம்மாளுக்கு "தாம் சென்னிமலையிலிருந்து பெருந்துறைக்கு வாரம் இருமுறை சென்று சாமான்களை விற்றுத் திரும்புவோம். இன்று இங்கு புதிய கூடாரங்கள் இருக்கக் கண்டு வியாபாரம் நடக்குமென்று இங்கு வந்தோம்" என்றனர்.

அன்று அந்த சாமான்களைக் கொண்டு மங்கம்மா தன் உறவினர்களாகிய ஏலம்மா, ஏண்டம்மா, சீதம்மா, பாப்பம்மா, குர்லம்மா, தாயம்மா, லட்சுமம்மா, துளசியம்மா, கோனம்மா ஆகியோரையும் தன் தங்கைமார் ஐவரையும் அழைத்து நால்வகை உண்டிகளை அறு சுவையோடு சமைத்தார். விருந்துக்கு கம்ம குலப் பெரியோர்கள் அனைவரும் அழைக்கப்பட்டனர். மங்கம்மா தந்தை குலசேகர நாயுடு, ஆதூரி அக்க நாயுடு, ராமி நாயுடு, துக்கின்னார் நாரப்ப நாயுடு, காங்கல்ல வெங்கடப்ப நாயுடு, பாபட்ல சாம நாயுடு முதலானவர்களோடு கவுண்டருக்கும் விருந்து படைத்தார்கள். விருந்தை எல்லோரும் புகழ்ந்து கூறினர். பின் கந்தசாமிக் கவுண்டர் கம்மவாரிடம் விடை பெற்றுக் கொண்டு கவுண்டம்பாளையம் சென்றார்.

கம்மகுலத்தவர்கள் சென்னிமலைப் பகுதியில் ஊர்கள் அமைத்து வாழ்ந்தனர் கந்தசாமிக்கவுண்டரிடம் பட்டயம் பெற்ற எல்லைக்குள் இருந்த பூமிக்கருகில் கம்மகுலப் பெரியவர்கள் பகிர்ந்துகொண்டு ஆங்காங்கு குடித்தனம் நடத்தினர். மாதம் மும்மாரி பெய்தமையினால் நீர்வளமும் நில வளமும் பெருகிக் குடிவளம் உயர்ந்தது. தாம் விவசாயம் செய்யும் நில புலன்களுக்கருகிலேயே கிராமங்களை

அமைத்துக் கொண்டனர். கிராமங்கள் தோறும் கோவில், குளம், சத்திரம், சாவடிகளை அமைத்தார்கள்.

நம்பூரார் கொண்டம நாயுடுவின் பங்குக்கு வந்த பூமிக்கருகில் அவருக்கும் அவர் சகோதரர்களுக்கும் குடியிருப்புகள் அமைத்துக் கம்மவார்ப்பட்டி எனப் பெயரிட்டனர் கோவில் கட்டினர், குளம் தோண்டினர், சத்திரமும் சாவடியும் எழுப்பினர். கம்மவார்ப்பட்டியில் மற்ற அரவ மறவ ஜாதியினரும் குடியேறினர். அவர்கள் ஆடுமாடுகளை வளர்த்தனர். ஆட்டு ரோமங்களால் கம்பளங்கள் நெய்து விற்றனர். அக்கம்பளங்கள் வெளியூர்களில் புகழோடு விளங்கியதால் அவ்வூர் கம்பளியம்பட்டி எனப் பிற்காலத்தில் அழைக்கப்பட்டது. அங்கு விநாயகர் கோவில், அங்காளம்மன் கோவில், ரேணுகா தேவி கோவில் கட்டி மக்கள் பக்தியோடு பூஜை செய்து வந்தார்கள்.

துக்கின்னார் நாரப்பநாயுடு தம் பங்குக்குக் கிடைத்த பூமிகளில் வளர்ந்திருந்த முள்புதர்களை வெட்டிச் செம்மைப்படுத்தி அங்கு ஓர் ஊர் அமைத்தார். அப்பகுதியில் காரைக் காட்டைச் சுற்றி ஆலமரங்கள் வானாளவ வளர்ந்திருந்தன. பண்டிகைக் காலங்களில் அச்சுற்றுப்புறச் கிராமக் குழந்தைகள் அங்கு சென்று ஆலம் விழுதுகளில் ஊஞ்சல் கட்டி ஆனந்தமாக விளையாடுவர். ஆகையால் அந்த இடத்திற்கு ஊஞ்சல் காடு எனப் பெயர் உண்டாயிற்று. நாரப்ப நாயுடு தான் அமைத்த ஊருக்கு ஊஞ்சல்பாளையம் என்று பெயர் வைத்தார். உற்றார் உறவினரையும், ஆதூரி குலத்தவர்களையும், பாபட்ல, நீர்க்கொண்ட, காங்கல்லார் குடும்பங்களையும் அங்கே குடியேற்றிக் கோவில் கட்டி, குளங்கள் வெட்டி, சத்திரம், சாவடிகளையும் அமைத்தார்.

ஏனைய கம்மகுலத்தவர் சென்னி ஆண்டவர் பண்டார வேடமாய்க் காட்சியளித்த பகுதியில் வீடுகள் கட்டினர். விநாயகர் கோவிலைப் புதுப்பித்தனர். நடைகிணறும், சுமைதாங்கியும் அமைத்தனர். வைஷ்ணவ சம்பிரதாயப்படி விநாயகர் கோவிலுக்குத் தென்புறமாகப் பெருமாள் கோயிலைக்கட்டினர். கோவிலுக்கு சில பூமிகளை மானியமாக விட்டனர். அவ்விடத்திற்குக்

கொண்டையம்பாளையம் எனப் பெயரிடடனர். பெருமாள் கோவில் நித்திய நைவேத்திய பூஜைகளுக்கு பிராமண அர்ச்சகர்களை நியமித்தனர். ஆதூரிவாரையும் மற்றும் சில குடும்பங்களையும் அங்கு குடியேற்றினர். சில ஆண்டுகளில் நம்பூரார் கொண்டமநாயுடு, துக்கின்னார் நாரப்ப நாயுடு ஆகியோரின் நன்முயற்சியாலும் ஸ்ரீ ரேணுகையின் திருவருளாலும் பெரும் குடித்தனக்காரர்களாயினர். சென்னிமலை நாதன் கோயிலில் சீர்திருத்தங்கள் செய்து, கோயில் நிர்வாகத்திலும் பங்கேற்று, கோயிலறங்களைச் செவ்வனே நடத்தி பேரும் புகழும் பெற்றனர். நம்பூரார் கொண்டம நாயுடு பொது மக்களுடைய நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றுக் கம்பளியம்பட்டியைச் சூழ்ந்த பன்னிரண்டு கிராமங்களின் மணியங்களைப் பெற்றார். துக்கின்னார் நாரப்ப நாயுடு பெருந்துறை மணியமேற்றார். ஆங்காங்கு நீதி ஸ்தலங்களைக் கட்டி மக்களின் வழக்குகளைத் தீர்த்து அப்போது பெருந்துறைப் பிரதேசத்தை அரசாண்டு வந்த முகமது இப்ராகீம் மன்னனுக்கு வரி செலுத்தி வாழ்ந்து வந்தார்கள்.

### *மங்கம்மாவின் மனக் கவலை*

கம்பளியம்பட்டியில் குடும்பம் நடத்தி வந்த மங்கம்மாள் வயது மிகுந்தும், தனக்கு குழந்தையில்லாக் குறையை நினைத்து வருந்தினாள்.

“கடவுட் கற்பொடு குடிக்குடி விளக்காகிய
புதல்வற் பயந்த புகழ் மிகு சிறப்பின் தன்னராட்டி”

எனும்படியான பெருமை எனக்கு ஏற்படவில்லையே, “சொல்மறா மகப் பெற்றவர் அருந்துயர் துறந்தார்” என்று பெரியோர் கூறுவரே, “ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம், மக்கட் பேற்றிற் பெரும் பேறு இல்லை”, என்று புலவர் கூறுவாரே.

“வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்
வாலிலாய்க் கொண்ட அடிசிலின் மிச்சில்”

உண்ணைப் பெற்றிலேனே என்று பொன்போர் புதல்வரைப் பெறாது பெருந்துயர் கொண்டாள். நாள் தோறும் ரேணுகை, கௌரி, அங்காள தேவதை, விநாயகர் ஆகியதெய்வங்களுக்குப் பூஜை செய்து வந்தாள். ஒரு நாள் வெள்ளிக்கிழமை வீட்டில் நோன்பிருந்து வழிபாடுசெய்தாள். தாயே ரேணுகா, பரஞ்சோதி, பராசக்தி, ஜெகன் மாதா, கம்மவார் குலத்தைக் காத்திட வந்த கருணைாகரியே, கம்ம குலம் வாழ வழி காட்டினாய், சகல செல்வங்களும் எமக்கு அளித்துள்ளாய், எம் குடும்பம் வாழையடி வாழையாகத் தழைக்கச் சந்ததி இல்லாக் குறையைப் போக்க மனமில்லையா? - இரக்கமில்லையா - உனையன்றி எனக்கு வேறு கதியுள்ளதோ, தாயே அருள் செய்து ஆள்வாய் என்று வாய்விட்டுக் கதறி தொழுது தியானத்தில் இருந்தாள்.

அப்போது கொண்டம நாயுடு தன் காரியங்களை முடித்துக்கொண்டு வீட்டிற்கு வந்தார். வழக்கம்போல் மங்கம்மாள் எதிர் வராமைக் கண்டு வீட்டினுள் சென்று பூஜை அறையில் தியானத்தில் இருப்பதைப் பார்த்தார், ஆச்சரியப்பட்டார். சிறிது நேரம் பொறுத்திருந்து பார்த்தார். உணர்வு பெற்ற மங்கம்மா தீபாராதனையுடன் பூஜையை முடித்துக்கொண்டு திரும்பியபோது தன் நாதன் கூடத்தில் நிற்பதைக் கண்டாள், பாதங்களைத் தொட்டுப் பணிந்து வணங்கினாள், பின் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்துப் போஜனம் செய்ய அழைத்தாள்.

கொண்டம நாயுடு கால் கைகள் கழுவிக்கொண்டு ரேணுகையை வணங்கிவிட்டுக் கூடத்திற்குள் சென்று உணவுண்டு தாழ்வாரத்தில் வந்து அமர்ந்தார். மங்கம்மா தாம்பூலம் கொண்டு வந்து வைத்தாள், அருகில் நின்றாள். கொண்டம நாயுடு “பெண்ணே ஒரு நாளும் கூட நான் வரும்போது வாயிற்படியருகில் என்னை வரவேற்பதில் தவறியதில்லை. இன்று நீ அதனைச் செய்யாது உன்னை மறந்து தியானத்தில் ஆழ்ந்திருந்தாய், நான் வந்ததையும் நீ கவனிக்கவில்லை, உன் மனதில் ஏதோ கவலை ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன் ” என்றார்.

மங்கம்மாள், "ஐயா, நான் நீங்கள் வரும்போது எதிர்கொள்ளாத குற்றத்தை மன்னித்து விடுங்கள். பல நாட்களாக நான் தங்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்லலாம் என்றிருந்தேன். தாங்கள் அனுமதித்தால் சொல்லுகிறேன்" என்றாள். கொண்டம நாயுடு "பெண்ணே எதுவானாலும் உன் மனதிலிருப்பதைச் சொல்" என்றார்.

மங்கம்மாள், "அப்பனே ரேணுகையின் கிருபையால் நமக்கு ஒரு குறையும் இல்லை. பிற்காலத்தில் நம் குலம் தழைக்கச் சந்ததி இல்லையே என்ற குறைதான் என் மனதை வாட்டுகிறது. அதை நினைத்து இன்று ரேணுகையிடம் முறையிட்டேன் என்னையே மறந்தேன். நான் நோன்பு பலவற்றையும் நோற்றேன். அப்பாக்கியம் பெற்றிடுவேன்".

"உந்து நீர்க்கட லுடுத்த பார் முழுவது மொருங்கே
  வந்து தான் தொழும் அரசியல் வளமெலாம் பெறினும்
இந்திர ராதிபர் பெரும்பதத் திருக்கையெய் திடினும்
  மைந்த நின்றியே வாழ்வது வாழ்வு மற்றன்றே
கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சும்
  சொல்லா லுருக்கி கழுதோடித் தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்தில் விளையாடும் மகிழ்ச்சிமைந்தர்
  இல்லா தவர்க்கு மனைவாழ்வின் இனிமை யென்னாம்"

"நமது பெரியோர்கள் திருப்பதி, ஸ்ரீரங்கம் யாத்திரை செய்து சாளக்கிராம பூஜைசெய்து வந்தால் மக்கட்பேறு கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். ஆகையால் நாம் திருப்பதி, ஸ்ரீரங்கம் யாத்திரை சென்று வர வேண்டும்" என்றாள்.

அதற்குக் கொண்டம நாயுடு "பெண்ணே யாத்திரை செய்வது நல்ல காரியம் தான். நம் ஆசை நிறைவேறுவதற்கு அது நல்ல வழியேயாகும் அவசியம் போக வேண்டும். ஆனால் தற்சமயம் நிலவரி வசூல் செய்ய வேண்டியிருக்கிறது தீராத வழக்குகளை

விசாரித்து நீதி வழங்க வேண்டியுள்ளது. நான் யாத்திரையில் கலந்து கொள்வது இயலாததாயுள்ளது. ஆனால் நீ எண்ணியபடியே யாத்திரை செய்ய வேண்டியது அவசியம். நீ உன் தந்தை குலசேகர நாயுடுவை உடன் அழைத்துக்கொண்டு உன் விருப்பப்படியே யாத்திரை சென்று வா" என்று சொல்லி விட்டு கச்சேரி வீட்டுக்குச் சென்றார். மங்கம்மா கொண்டம நாயுடு சென்ற பிறகு தன் தந்தையார் உப்பட்ல குலசேகர நாயுடுவை வரவழைத்து யாத்திரை பற்றி ஆலோசித்து நல்ல நாளில் யாத்திரை புறப்பட்டார்கள்.

## *திருப்பதி யாத்திரை*

மங்கம்மாள் தன் தாய் லட்சுமியம்மாளும், தந்தை குலசேகர நாயுடுவும் உடன் வர மற்றும் சில பந்துக்களையும் அழைத்துக் கொண்டு, கொண்டம நாயுடுவிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டு இரட்டை மாட்டு வண்டிகளில் புறபட்டார்கள். வண்டிகளில் உணவுப் பொருட்களோடு சலீர் சலீர் என்று ஒலிக்கும் சலங்கை கட்டின காங்கேய நாட்டு மாடுகள் பூட்டப்பட்ட வண்டிகள் நடையும் ஓட்டமுமாகச் சென்றன. 5 நாட்கள் இரவும் பகலும் சென்று சந்திரகிரிக்கு வடகிழக்கில் உள்ள திருப்பதி மலையின் அடிவாரம் சென்று சேர்ந்தார்கள்.

அங்கே வழுக்குப்பாறை என்னுமிடத்தில் ஓர் ஓடையருகே "பெல்லாவு" என்னும் ஒரு பிரம்மாண்டமான பசுவின் விக்கிரகம் உள்ளது. அந்த வழியில் யாத்திரை செய்பவர்கள் அங்கு தங்கி பொங்கல் வைத்துப் பெல்லாவுக்கு ஆராதனை செய்து அங்கு இருக்கும் கோவில் மாடுகளுக்குப் பொங்கல் கொடுத்து உண்பிப்பது வழக்கம். மங்கம்மாள் அவ்வாறே அந்த ஓடையில் நீராடிப் பொங்கல் வைத்துப் பெல்லாவை வணங்கி அங்குள்ள மாடுகளுக்கு பொங்கல் சோறு கொடுத்துத் தானும் உண்டு இளைப்பாறினாள். பின் பயணம் செய்து பொழுது சாயுங்காலத்தில் கீழ்த்திருப்பதியை அடைந்தனர்.

கோவிந்தராஜ பட்டணம் பட்டாச்சார்லு மடத்தில் தங்கினர். அன்று இரவு கோவிந்தராஜப் பெருமாளையும், கோதண்டராம ஸ்வாமியையும், நம்மாழ்வார் சன்னதியையும் தரிசனம் செய்தனர் மறு நாள் அதிகாலையில் எழுந்து ஆழ்வார் தீர்த்தம்சென்று நீராடி ஆழ்வாராதிகளை வணங்கிவிட்டுத் திருப்பதி மலை அடிவாரத்தை அடைந்தனர். கபில தீர்த்தத்தில் நீராடிவிட்டு அங்கு விநாயகருக்குப் பூஜை செய்து பின் ராஜ கோபுரத்தில் உள்ள ஆண்டவனுடைய பாதுகைகளைத் தரிசனம் செய்தனர். பின் கோவிந்த நாமத்தை இடைவிடாது உச்சரித்துக் கொண்டே திருப்பதி மலை ஏறினார்கள். வழியில் உள்ள ஏழைகளுக்குத் தர்மம் செய்துகொண்டு வழிநெடுக இருக்கும் தண்ணீர் பந்தல்களில் இளைப்பாறி காலி கோபுரம், சீதை ஆபரணப் பெட்டி மலை, ஆஞ்சநேயர் மலை, அகத்தியர் மலை, முழங்கால்முளி மலை ஆகியவற்றைத் தாண்டி திருப்பதியை அடைந்தார்கள். அங்கு மகந்து மடத்தில் தங்கினார்கள். மறுநாள் அனைவரும் அதிகாலையில் எழுந்து முறைப்படி தீர்த்தங்களில் நீராடச் சென்றனர். முதலில் பாபநாசம் சென்று நீராடினர். பின் ஆகாயகங்கை, தும்பிதீர்த்தம், விஜயதீர்த்தம், ரங்க தீர்த்தம், ராமதீர்த்தம், துளசிதீர்த்தம், இந்திரதீர்த்தம், குமாரதீர்த்தம், ஜாம்பவதீர்த்தம், வராகதீர்த்தம், காசிபதீர்த்தம், கடகதீர்த்தம், துரோபாதாதீர்த்தம், அசுரதீர்த்தம், கோகர்ப்பதீர்த்தம், அஜதீர்த்தம், பாண்டவதீர்த்தம், கருடதீர்த்தம், விஷ்ணுதீர்த்தம் ஆகிய தீர்த்தங்களில் நீராடினர். பின் சந்திரபுஷ்கரணி எனப்படும் கோனேரி தீர்த்தத்தில் சங்கல்பம் செய்துகொண்டு தீர்த்தமாடினர். பின் திருப்பதி வெங்கடாசலபதியைச் சேவித்துத் தீர்த்தப் பிரசாதம் பெற்று கைநிறையக் காசுகளை அள்ளி களஞ்சியத்தில் போட்டுச் சாளக்கிராம சேவைக்குப் பின் மடம் வந்து சேர்ந்து உணவுண்டு ஓய்வு கொண்டனர்.

அப்போது மங்கம்மாள் தன் தந்தையர் குலசேகர நாயுடுவைப் பார்த்து “அப்பா நாம் திருப்பதி ஸ்தல வைபவங்களைத் தெரிந்து கொள்ள வேண்டாமா! இதை யாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது”

என்றாள். அதற்குத் தந்தையார் மகந்துவின் பண்டாக்களில் ஒருவரை அழைத்து வந்து திருப்பதி ஸ்தல வைபவங்களைச் சொல்ல செய்தார்.

## *திருவேங்கடமுடையான் வைபவம்*

ஸ்ரீ வைகுண்ட நாதன், பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரமன் சில நாட்கள் வைகுண்டத்திலும், சிலநாட்கள் திருப்பாற் கடலிலும் இருந்து தேவர்களையும் ஏனையோரையும் காத்து வந்தார். ஸ்ரீ தேவியின் வேண்டுகோளுக்கு இணங்கிப் பூவுலகில் மக்களை ரட்சிக்க லட்சுமியின் அவதாரமான அலர்மேல்மங்கையுடன் கோவில் கொண்டிருந்தார். அதற்கு மங்களாபுரம் என்று இப்போதும் பெயர் வழங்கி வருகிறது.

நாரதர் சூழ்ச்சியால் ஏற்பட்ட மனத்தாங்கலால் விஷ்ணு மலை மேல் சென்று நின்றபடியே தியானத்தில் இருந்து விட்டார். இதைக் கண்ட அலர்மேல் மங்கையார் மலைக்குச் சென்று அடி பணிந்து அழைத்தும் விஷ்ணு கண் திறந்து கூட பார்க்காமல் இருந்து விட்டார். மங்கையார் மனம் நொந்து திரும்பி வந்து மங்களாபுரத்தில் இன்னமும் தவமிருக்கிறார். அலர்மேல் மங்கையைக் கண் திறந்து பார்க்காமல் இருந்ததற்கு அறிகுறியாக இன்றைக்கும் வெங்கடாசலபதியின் கண் தெரியாதபடி ஸ்ரீ பாதரேணுவால் திருமண் வைத்து விடுகிறார்கள்.

திருப்பதி ஆண்டவனுக்கு வெங்கிடாசலபதி, சீனிவாசன், கோவிந்தன், ஏழுமலையான் என்று பலபெயர்கள் உண்டு.

திருப்பதி மூர்த்தியைப் பற்றிய ஒரு கதை வழங்குகிறது. சிவ பெருமான் இந்த மலை மேல் பல காலம் குடிகொண்டிருந்தாராம். இந்த விக்கிரகத்தை வைஷ்ணவர்கள் விஷ்ணு விக்கிரகம் என்று வாதாடினாராம். சைவரும் வைணவரும் தம் தெய்வம் எம் தெய்வம் என்று எதிர் வழக்கிட்டு நின்றபோது இருசாராரும் ஒரு முடிவுக்கு வந்தனர். “இரவு ஆராதனைக்குப் பிறகு கோவிலை மூடி விடுவது.

சாவியை இருவருக்கும் பொதுவான மகந்துவிடம் கொடுத்து விடுவது" என்று தீர்மானம் செய்தனர். அப்படியே கோவிலைப் பூட்டி மகந்துவிடம் சாவியைக் கொடுத்து விட்டனர். அன்று இரவு வைஷ்ணவப் பக்தர்களில் ஒருவரான பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் தம் தவ மகிமையால் ஒரு பெருச்சாளியாக உருவங்கொண்டு கோவில் தீர்த்த ஜலதாரையில் புகுந்து விஷ்ணு சின்னங்களாகிய சங்கு, சக்கரம், கமண்டலம், கதை முதலியவைகளை அமைத்து முகம் தெரியாதபடி கண்ணை மூடும்படியாக திருமண் வைத்து பஞ்சகச்சம், பீதாம்பரம் அணிவித்து வந்துவிட்டார். அதிகாலையில் இரு சாராரும் கோவில் வாசலில் கூடினார்கள். மகந்து கோவில் கதவுகளைத் திறக்க விக்கிரகம் மகாவிஷ்ணுவின் சின்னங்களுடன் தரிசனம் கொடுப்பதைக் கண்டனர். அன்று முதல் அது வைணவர் கோவிலாக மாறியது. இப்போதும் கூட அங்கு மார்கழி மாதம் முப்பது நாளும் வைணவ சம்பிரதாயப்படி ஆராதனை நடைபெற்றாலும் அர்ச்சனை வில்வத்தால்தான் நடைபெறுகிறது.

புரட்டாசி மாதம் இங்கு பிரம்மோற்சவம் நடைபெறும் விஜயதசமியன்று ஆயிரம் தங்கமணிகள் கட்டின ரத உற்சவம் நடைபெறும். இந்திய நாட்டின் பல இடங்களில் இருந்தும் பக்தர்கள் ஏராளமாகக் கூடுவார்கள். தனவந்தர்கள் இங்கு ஆயிரக்கணக்கில் பொருள் செலவு செய்து உற்சவங்கள் நடத்துவார்கள். கோவிலுக்கு வலது பக்கமாகக் கோனேரி என வழங்கப்படும் சந்திரபுஷ்கரணி இருக்கிறது. இதில் குபேரதீர்த்தம், மார்க்கண்டதீர்த்தம், அக்னி தீர்த்தம், சுமதீர்த்தம், வாயுதீர்த்தம், வசிஷ்டதீர்த்தம், இலட்சுமி தீர்த்தம், வருணாதீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம் ஆகிய ஒன்பது தீர்த்தங்களும் சேர்ந்து புஷ்கரணி குளமாக இருக்கிறது. மார்கழி மாதம் முப்பது நாட்களும் கோனேரியில் தீர்த்தமாடி வெங்கிடாசலபதியைத் தரிசனம் செய்தால் சகல பீடைகளும் நீங்கும். சந்தான பாக்கியம் கிடைக்கும். சகல சம்பத்துக்களும் வந்து சேரும். மேலும் திருப்பதி மலைக்கு வரும் யாத்திரிகர்கள் இந்த மலையில் வளர்ந்து வரும் தர்ப்பைப் புல்லை

முடிபோடுவார்கள். அங்கிருக்கும் கற்களை எடுத்து அடுப்புக் கூட்டி வைப்பார்கள். அப்படிச் செய்தவர்களுக்கு வருஷம் முடிவதற்குள் சுப காரியங்கள் நடக்கும். சுப காரியங்கள் நடந்து மறுபடியும் இங்கு வந்து கூட்டின அடுப்பைக் கலைத்து முடிந்த தர்ப்பையை அவிழ்த்து விடுவார்கள் என்று அங்கிருந்த பெரியோர்கள் சொல்லக்கேட்டு மங்கம்மாள் மகிழ்வடைந்தாள்.

பத்து நாட்கள் மங்கம்மாள் சாளக்கிராம பூஜை செய்து தீர்த்தப்பிரசாதம் பெற்று அன்றாடம் நடக்கும் தருமசேவை, துளசி சேவை, முத்தங்கி சேவை, தோமால சேவைகளைத் தரிசித்தாள். ஏழைகளுக்கு அன்னதானம் செய்தாள். மங்காபுரம் சென்று அலர்மேல் மங்காவைத் தரிசித்தாள். பின் திருவரங்கத்திற்குப் பயணம் செய்தார்கள். இராமனுஜ கூடத்தில் தங்கி காவிரி கொள்ளிட நதிகளில் நீராடி விட்டு திருவரங்கநாதரைச் சேவித்துத் தன் குறையிரந்து பலவாறு வேண்டி வணங்கினாள். தனக்கு அருள் பாலிக்க வேண்டுமென்று அரங்கநாதனை அன்போடு பக்தி செய்தாள். ஏழைகளுக்கு அன்னதானம் செய்தாள். பின் தன் பயணத்தை முடித்துக்கொண்டு ஒரு வெள்ளிக்கிழமை மாலையில் கம்பளியம்பட்டிக்கு வந்து சேர்ந்தார்கள்.

நம்பூரார் மங்கம்மா திருப்பதி, திருவரங்க யாத்திரை சென்று வந்திருப்பதையறிந்த கம்மகுலத்தவர்களும் மற்றவர்களும் கொண்டமநாயுடு வீட்டிற்கு வந்து மங்கம்மாளின் நலத்தையும் தல மகிமைகளையும் விசாரித்து சென்றார்கள். பின் ஒரு நல்ல நாளில் தல யாத்திரை செய்து இடர்பாடின்றி வந்ததை முன்னிட்டு பெருமாளுக்கு அலங்கார நைவேத்திய பூஜைகள் செய்து தன் உறவினர்களை அழைத்து விருந்து வைத்து உபசரித்தாள். அனைவருக்கும் திருமால் குங்குமம் மற்றும் திருநாமகட்டி பிரசாதங்களை கொடுத்து அனுப்பினாள். திருவேங்கடமுடைய நாதனின் திருவருளாலும், திருவரங்கப் பெருமாள் தண்ணொளியாலும்

ஸ்ரீ ரேணுகா தேவியின் திருவருளால் சில நாட்களுக்குப் பிறகு கருவுற்றாள்.

## *ஸ்ரீ ரங்கம்மா ஜனனம்*

மங்கம்மா கருவுற்ற செய்தியறிந்த அனைவரும் ஆனந்தமுற்றனர். 8வது மாதம் உட்பட்ல குலசேகர நாயுடு ஒரு நல்ல நாளில் தன் உற்றார் உறவினரை அழைத்துக் கொண்டு வந்து மங்கம்மாளுக்கு வளைகாப்பு சீமந்தம் செய்து அனைவருடைய ஆசீர்வாதத்தோடும் பிறந்த வீட்டிற்கு அழைத்து கொண்டு சென்றார்.

ரவுத்திரி வருடம் தட்சிணாயன புண்ய காலம் கார்த்திகை மாதம் விருச்சிக ராசி அமிர்தயோகம் கூடிய வெள்ளிக்கிழமை சூரிய உதயத்தில் நம்பூரார் மங்கம்மா ஒரு பெண் குழந்தையை பெற்றெடுத்தாள். குழந்தை பிறந்த செய்தியை மருமகன் கொண்டம நாயுடுவுக்கும், மற்ற உறவினர்களுக்கும் ஆட்கள் மூலமாக சொல்லியனுப்பினார். செய்தியறிந்த அனைவரும் வந்து குழந்தையைப் பார்த்து ஆசீர்வதித்துச் சென்றனர். கொண்டம நாயுடு தனது உடன் பிறந்தாருடனும் காணியாள கந்தசாமிக் கவுண்டருடனும் வந்து பார்த்துக் குழந்தையைக் கையில் எடுத்து ஆனந்தமடைந்தார். குழந்தை பிறந்த பன்னிரண்டாவது நாள் கொண்டையம்பாளையத்தில் உள்ள பெருமாள் கோவிலில் அலங்கார ஆராதனைகள் செய்தார்கள். வீட்டில் புரோகிதர்களைக் கொண்டு புண்யார்ச்சனை செய்தார்கள். குழந்தையைச் சுமங்கலிகள் எடுத்துக்கொண்டு வந்து களப புனுகு பன்னீர் கலந்த நீரால் நீராட்டினர். அழகான பட்டு பீதாம்பர ஆடைகளும், அணிகலன்களும் அணிவித்தனர். தங்கத் தொட்டிலில் வெல்வெட் துணிகளை விரித்து அல்லி, அரளி, மல்லிகை, முல்லை, செண்பகம், இருவாட்சி ரோஜா மலர்களால் தொட்டிலை அலங்கரித்தனர். நல்ல வேளையில் குழந்தையைத் தொட்டிலில் வைத்து தாலாட்டுப் பாடல்கள் பாடினர். கொண்டமநாயுடுவின் சகோதரர்கள் தம் மனைவிமார்களுடன்

வந்து குழந்தையை எடுத்து உச்சி மோர்ந்து வாழ்த்தினர். துக்கின்னார், ஆதூரிவார், காங்கல்லார், பாபட்லார் குடும்பப் பெண்களும் காணியாள கந்தசாமிக் கவுண்டர் மனைவிமக்களும் வந்து குழந்தையை வாழ்த்தினர். பின் கொண்டம நாயுடு புரோகிதர்களையும் பெரியோர்களையும் கலந்து ஆலோசித்து "ர" என்னும் எழுத்தில் பெயர் வைக்க வேண்டுமென்று அறிந்து ரங்கம்மா என்று பெயர் வைத்து அனைவரும் ரங்கம்மா என்று அழைத்து ஆனந்தம் கொண்டனர். (இதைப் படிக்கும் நாம் அனைவரும் ரங்கம்மா என்று அழைத்து ஆனந்தம் அடைவோம்). அப்போது இரண்டு பெண்கள் வீட்டிற்குள் வந்து குழந்தை ரங்கம்மாளை ஆசீர்வதித்துச் சென்றார்களா. திடீரெண்டு வந்து குழந்தையை ஆசீர்வதித்தவர்கள் யாரென்று ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள். யாரென்று அறிய முடியாமல் ஆச்சர்யப்பட்டார்கள். குழந்தைப் பிரசவத்தன்று ஏற்பட்ட அதிர்ச்சியால் நோயுற்ற மங்கம்மா மூன்று மாதங்களாகியும் படுக்கையிலேயே இருந்தாள். பல வகையிலும் வைத்தியம் செய்தும் நாளுக்குநாள் உடல் மெலிந்து ஆறாவது மாதத்தில் பரலோக பிராப்தியடைந்தாள். கொண்டம நாயுடு துணைவிக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களை முடித்த பிறகு குழந்தையை கம்பளியம்பட்டி வீட்டிற்கு எடுத்து வந்தார். பாட்டி லட்சுமியம்மாளை அழைத்துக் கொண்டு வந்து குழந்தை ரங்கம்மாளை வளர்த்து வந்தார். குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தாள். ஐந்து வயது நிரம்பியதும் கொண்டம நாயுடு தன் மனைவி மங்கம்மா நினைவாக ஏற்படுத்தி நடத்தி வரும் பள்ளிக் கூடத்தில் சேர்த்து படிக்க வைத்தார். ஆசிரியரிடமும் தன்னையொத்த குழந்தைகளிடமும் ரங்கம்மா அன்புடன் நடந்துகொண்டு அனைவருடைய நன்மதிப்பையும் பெற்றாள். ரங்கம்மாள் அதிகாலையில் எழுந்து நீராடி விநாயகர், ரேணுகை, அங்காள தேவதை கோவில்களுக்குச் சென்று வழிபாடு செய்வாள். பள்ளிக்குக் காலந்தவறாமல் செல்வாள். தெரியாதவற்றை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வாள். தன் தந்தையிடமும் பாட்டியிடமும் இராமாயணம், மகாபாரதக்

கதைகளைக் கேட்டு அறிந்து கொண்டு தன் தோழிகளுக்கும் கூறுவாள். விடுமுறை நாட்களில் தன் தோழிகளுடன் கொண்டையம்பாளையம் சென்று பெருமாளை சேவித்துத் தீர்த்தப்பிரசாதம் பெற்றுத் திரும்புவாள்.

வீட்டில் இருக்கும் வேலையாட்களுடன் சேர்ந்து சமையல் வேலையும் செய்யக் கற்றுக்கொண்டாள். தம் பாட்டியிடமும் சிறிய தந்தை தாய்மார்களுடனும் அன்பாகப் பேசி அவர்களையும் நன்கு பேணி உபசரித்து வந்தாள். தன் தந்தை கொண்டம நாயுடு வீட்டிற்கு வரும்போது ரங்கம்மா எதிர் கொண்டு அழைத்து வந்து வேலையாட்களுடன் சேர்ந்து உணவு படைப்பாள். அப்போது கொண்டம நாயுடு மகிழ்ந்து ரங்கம்மாளை அருகில் அழைத்து உட்கார வைத்து ரங்கம்மாளுடன் சேர்ந்து சாப்பிடுவார். சில நாட்களில் கொண்டம நாயுடு மங்கம்மா காலமானதைச் சிறுக சிறுக மறந்து ரங்கம்மாளை உயிரென நேசித்து வந்தார்.

ஒரு நாள் ரங்கம்மா காணியாள கந்தசாமிக் கவுண்டர் பேத்திகளுடனும் மற்ற குழந்தைகளுடனும் சேர்ந்து கந்தசாமி கவுண்டர் தோட்டத்திற்குச் சென்று கவலைக் கிணற்று மரத்து நிழலில் விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது காட்டில் ஆடுகள் மேய்ந்துக் கொண்டிருந்தது சில சிறுவர்கள் “அய்யய்யோ குள்ளநரிகள் வந்து ஆடுகளைப் பிடிக்கிறதே” என்று சத்தமிட்டு ஓடிவந்தார்கள். அச்சிறுமிகள் அக்கூக்குரலைக் கேட்டு குள்ளநரிகள் அங்கும் வந்துவிடுமோ என்று சாளைக்கு ஓடினார்கள் அப்போது ரங்கம்மா சிறுவர்களின் பரிதாப நிலையைக் கண்டு அவர்களைக் குள்ள நரியிடம் இருந்து காப்பாற்ற எண்ணி அங்குகிடந்த ஒரு கவைக்கோலை எடுத்துக்கொண்டு “தம்பிகளே” எங்கே அந்த நரிகள்! காட்டுங்கள் ஆடுகளைப் பிடிக்காமல் அவற்றை அடித்துத் துரத்துகிறேன் என்று சிறுவர்களுக்கத் தைரியம் சொல்லி கூட அழைத்துக் கொண்டு ஆடுகள் இருக்குமிடத்தை நோக்கி நடந்தாள்.

சிறுவர்கள் காட்டு வரப்பின் மேல் கொஞ்ச தூரம் சென்றதும் அங்கிருந்த புற்றின் மேல் ஒரு நாகம் படம் விரித்து சீறுவதைக் கண்டதும் "அய்யோ, பாம்பு பாம்பு" என்று சப்தமிட்டுக் காட்டுக்குள் ஓடினார்கள். புற்றின் அருகில் சென்ற ரங்கம்மா புற்றின் மேல் பாம்பு படமெடுத்துக் கொண்டு சீறிக் கொண்டு நிற்பதைப் பார்த்தாள். பயத்தால் உணர்வு மயங்கிப் பாம்பை பார்த்தவாறே கவைக்கோலை ஊன்றி நின்று கொண்டு ரேணுகையை வேண்டினாள்.

மயங்கித் தன்னை மறந்து நின்ற ரங்கம்மாள் காலடியில் அப்பாம்பு வந்து பிரதட்சணமாகச் சுற்றிவிட்டு மீண்டும் புற்றிற்குள் சென்று விட்டது. தூரத்தில் நின்று கொண்டிருந்த சிறுவர்கள் பாம்பு ரங்கம்மாளைக் கடித்துவிட்டுச் சென்று விட்டது என்று சப்தமிட்டார்கள். அது கேட்டு அக்கம்பக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் கையில் தடிகளுடன் ஒடி வந்தார்கள். அப்போது தோட்டத்திற்கு வந்த கந்தசாமிக் கவுண்டர் ரங்கம்மாளைப் பாம்பு கடித்துவிட்டது என்று கேள்விப்பட்டு அங்கு வந்து ரங்கம்மா நின்ற நிலையை அறிந்து பாம்பு கடித்தது உண்மையென்றறிந்து கொண்டம நாயுடுவிடம் நடந்ததைச் சொல்லுமாறு ஆட்களை அனுப்பினார். இச்செய்தி எங்கும் பரவி கம்மகுலப் பெரியோர் சிறியோர் அனைவரும் அங்கு கூடிவிட்டனர்.

கந்தசாமிக் கவுண்டரால் அனுப்பப்பட்ட ஆட்கள் சொன்ன செய்தியைக் கேட்ட கொண்டம நாயுடு அலறித் துடித்துக் கொண்டு பெருமூச்சு விட்டு அவசரமாகக் குதிரை மீது சேணமும் போடாமல் ஏறி வாயு வேகமாக வந்தார். கூட்டங் கூடியிருந்த இடத்திற்கு வந்து குதிரையை விட்டு இறங்கி அருகில் சென்று உணர்வற்றுக் கோல் ஊன்றிக் கொண்டு நின்ற ரங்கம்மாளை முதுகில் தட்டி அம்மா என்று கூப்பிட்டார்.

கைபட்டதால் உணர்வு பெற்ற ரங்கம்மா கண்விழித்துப் பார்த்தாள். தன் தந்தையார் நிற்பதைப் பார்த்து அப்பா என்று கட்டித்தழுவி "ஏன்

அப்பா என்னை தட்டி கூப்பிட்டீர்கள் அங்கே என்னிடம் நின்று எனக்குப் பல கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்த அம்மையாரைக் காணவில்லையே அப்பா, நீங்கள் நமது குல தேவதை ரேணுகை பாம்பு ரூபமாக வாழ்ந்து வருகிறாள் என்று சொன்னீர்களே அந்த அம்மையார் எனக்கு நல்ல புத்திமதிகள் சொன்னார்கள். படமெடுத்தாடும் பாம்பைக் கண்டு பயந்து ஓடினால் அது துரத்திக் கொண்டு வந்து துன்புறுத்தும் என்று நான் அதைப் பார்த்துக் கொண்டு நின்றேன். அது தன் படத்தை அடக்கி என் அருகே வந்தது, பயத்தால் கண்களை மூடிக் கொண்டேன். அங்கு ஓர் அம்மையார் தோன்றி நல்லுரைகள் கூறிக் கொண்டிருந்த போது நீங்கள் என்னைத் தட்டிக் கூப்பிட்டீர்கள். இனி எப்போது அந்த அம்மையாரைப் பார்ப்பது" என்றாள்.

குழந்தைக்கு பாம்பு விஷம் ஏறிவிட்டதால்தான் கண்டபடி உளறுகிறாள் என்று எண்ணி ரங்கம்மாளை அழைத்துக் கொண்டு கொண்டயம்பாளையம் பெருமாள் கோவிலுக்குச் சென்று பெருமாளை வணங்கினார். கருடன் நிழல் பட்டால் பாம்பின் விஷம் இறங்கிவிடும் என்று கருட தரிசனம் செய்வித்துப் பின் கம்பளியம்பட்டிக்கு அழைத்துச் சென்றார்.

அன்று முதல் ரங்கம்மாள் காலையில் எழுந்ததும் நீராடி விநாயகர், ரேணுகை, அங்காள தேவதைகளைப் பூஜிப்பாள். ரேணுகை உபதேசித்த மந்திரங்களை ஜபிப்பாள். கொண்டம நாயுடுவை உபசரிப்பாள். தன்னை நாடித்தேடி வருவோர்க்கு ரேணுகையின் மகத்துவத்தையும், வேறு புராணக் கதைகளையும் சொல்லுவாள். அனைவரையும் நேசித்து அன்புடன் பேசி இன்பமூட்டுவாள். ஆடு, மாடுகள், குழந்தைகள் வியாதிகளுக்கு ரேணுகையின் அருளால் அரளித் தழை கொண்டு வீசியும், கஸ்தூரி மஞ்சள் கொடுத்தும் நோய் போக்குவாள். பாம்பு, பல்லி, தேள், பூரான் முதலிய விஷக்கடிகளை ரேணுகையின் மந்திரோபதேசத்தால் குணப்படுத்துவாள். இதையறிந்த மக்கள் ரங்கம்மாளை மதிப்பும் மரியாதையும் செய்து போற்றி வந்தனர்.

ஒரு நாள் இரவில் கொண்டம நாயுடு ரங்கம்மாளை அருகில் அழைத்து உட்கார வைத்து, "குழந்தாய் ரங்கம்மா நீ பாம்புப் புற்றின் அருகில் ஓர் அம்மையாரைப் பார்த்ததாகவும், அந்த அம்மையார் ஏதோ சொன்னதாகவும் சொன்னாய். இந்த அம்மையார்தான் நம் குல தெய்வம் ரேணுகா அந்த அம்மையாரின் வரலாற்றைச் சொல்லுகிறேன் கேள் " என்றார்.

## *ரேணுகா தேவி சரித்திரம்*

கார்த்தவீரியார்ச்சுனன் ஒரு க்ஷத்திரிய அரசன், தன் தவ மகிமையால் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாது விளங்கினான்.

தத்தாத்தேயரிடம் உபதேசம் பெற்று தேவர்களிடம் பல அரும் வரங்களைப் பெற்று இராஜசூய யாகம் செய்து வெற்றி பெற்றான். வெற்றி விழாக் கொண்டாட தன் சேனை வீரர்களுடனும் ஓராயிரம் பெண்களுடனும் சரயு நதிக்கு சென்று நீர் விளையாட்டுக்கள் நடத்தினான். அவன் தன் ஆயிரம் கைகளால் தண்ணீரைத் தடுக்க நதியின் தண்ணீர் தேங்கி நின்றது. அப்போது அச்சரயு நதியில் பூஜை செய்து கொண்டிருந்த இலங்கேசுவரன் இராவணன் தன் பூஜை சாமான்கள் திடீரென்று தண்ணீரில் மிதப்பதைக் கண்டு வியப்பும் சினமும் கொண்டு தன் தூதுவர்களைச் செய்தியறிந்து வரும்படி அனுப்பினான். ஆயிரம் தலைகளும் இரண்டாயிரம் கைகளும் கொண்ட கார்த்தவீரியார்ச்சுனன் தன் கைகளால் நதியின் தண்ணீர் தேக்கியிருப்பதை அவர்கள் வாயிலாக அறிந்தான். உடனே இராவணன் எழுந்து கார்த்தவீரியார்ச்சுனனிடம் சென்று போர் புரிந்தான். கார்த்தவீரியார்ச்சுனன் சுலபமாக இராவணனைப் பிடித்துக் கட்டிக்கொண்டு போய்ச் சிறை வைத்தான். இதனையறிந்த திரிலோக சஞ்சாரியாகிய நாரதர் தூண்டுதலால் இராவணன் விடுவிக்கப் பட்டுத்தன் இலங்கை நகரம் சேர்ந்தான். பின் இராவணன் மேலும் பல தவங்கள் புரிந்து பிரம்மதேவனிடம் பல அஸ்திரங்களைப்

பெற்றதோடு சாகாவரமும் பெற்றான்.

ஒரு நாள் கார்த்தவீரியர்ச்சுனன் வேட்டைக்குக் காட்டிற்குச் சென்றான். அப்போது அக்காட்டில் ஆசிரமம் அமைத்துக் கொண்டிருக்கும் ஜமதக்கினி முனிவரைக் கண்டான். ஜமதக்கினி முனிவரின் மனைவி ரேணுகா, அவர்களின் புத்திரர்கள் நால்வர் உருமதி, உற்சாகன், விசுவாசகசு, பரசுராமன் என்போர். ஜமதக்கினி முனிவர் அரசன் வந்திருப்பதைக் கண்டு அன்புடன் வரவேற்று உணவு கொடுத்து உபசரித்தார். தான் முன்னறிவிப்பின்றி ஆசிரமத்துக்கு வந்திருந்தும், நல்லுணவு கொடுத்து உபசரித்ததைப் பார்த்த கார்த்தவீரியார்சுனன் வியப்படைந்தான். அறுசுவை உண்டு களிப்பதற்குக் காமதேனு எனும் பசுவே காரணம் என்பதனை அறிந்த கார்த்தவீரியார்ச்சுனன் அதன்மேல் ஆசை கொண்டான். தன் ஆட்களிடம் அதைப் பிடித்துக் கொண்டு போகும்படி கட்டளையிட்டான். இதனை அறிந்த ஜமதக்கினி முனிவர் வெளியே சென்று அப்போது தான் திரும்பிய பரசுராமனிடம் கூறிப் பசுவை மீட்டு வருமாறு கட்டளையிட்டார். பரசுராமனும் கோபம் கொண்டு தண்டு கமண்டலம், ஏர் ஆகிய ஆயுதங்களை எடுத்துக் கொண்டு சென்று கார்த்தவீரியனிடம் தூதுவர்களை அனுப்பிக் காமதேனுவைத் திருப்பிக் கொடுத்துவிடும்படி வேண்டினான். அம்முயற்சி வீணாகவே கார்த்தவீரியனோடு போர் செய்து அவனைக் கொன்று காமதேனுவை மீட்டு வந்து தந்தை ஜமதக்கினி முனிவரைப் பணிந்து நடந்ததைக் கூறினான். கார்த்தவீரியனின் புதல்வர்கள் பதினைந்தாயிரம் பேரும் தம் தந்தையைக் கொல்லக் காரணமாயிருந்த ஜமதக்கினி முனிவரைக் கொல்லச் சமயம் பார்த்திருந்தனர். ஆனால் பரசுராமனை நினைத்துப் பயந்து கொண்டு சும்மா இருந்தனர். அவர்களுக்கு நாரத முனிவர் தைரியமூட்டிப் பரசுராமன் இல்லாத சமயம் பார்த்து தங்கள் விருப்பத்தை முடித்துக் கொள்ளும்படி வழிகாட்டிச் சென்றார்.

ரேணுகை நாள்தோறும் ஆற்றுக்குச் சென்று மணலில் குடம்

பிடித்து அதில் தீர்த்தம் கொண்டு வந்து தன் கணவனுக்குப் பூஜைக்குக் கொடுப்பது வழக்கம். ஒரு நாள் தீர்த்தம் கொண்டுவர சரயு நதிக்குச் சென்றாள், முறைப்படி ஆற்றில் இறங்கி நீராடினாள்.

அச்சமயத்தில் கந்தர்வன் ஒருவன் புஷ்பக விமானத்தில் ஆகாயத்தில் செல்லுவதைத் தண்ணீரில் நிழலாக பார்த்தாள். அவனுடைய அழகைக் கண்டு வியப்படைந்தாள். பின் மணலைக் குடமாகப் பிடிக்கும்போது மணல் குடமாகவில்லை. தன் கணவரின் பூஜைக்குத் தீர்த்தம் கொண்டு செல்ல முடியாமல் தவித்துப் பிறகு ஆசிரமம் சேர்ந்தாள். முக்காலமும் உணர்ந்த முனிவர் ரேணுகையின் தவற்றை அறிந்து தன் குமாரர்களை அழைத்து ரேணுகையின் குற்றத்தைச் சொல்லித் தலையைத் துண்டித்துவிடுமாறு ஏவினார். முதல் மூவரும் அவ்வாறு செய்யாமல் மௌனமாக நிற்க முனிவர் பரசுராமரை ஏவிச் சகோதரர் மூவரையும் தாயையும் வெட்டுமாறு கட்டளையிட்டார். தந்தையின் கட்டளைப்படி நால்வரையும் வெட்டிய பிறகு பரசுராமர் தன் தந்தையின் திருவடிகளில் பணிந்தார். முனிவர் தன் மைந்தனின் தீரத்தைப் புகழ்ந்து "பரசுராமா நீதான் உத்தம புத்திரன் நீ என் கட்டளைப்படி செய்தாய் மகிழ்கிறேன் உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்றார்.

பரசுராமன், "தந்தையே! தந்தை சொல் மிக்க மந்திரமில்லை ஆகையால் தாங்கள் பணித்தவாறே செய்தேன். என் தாயும் சகோதரர்களும் உயிர் பெற்று எழும் வரம் வேண்டும். மேலும், அவர்களுக்கு ஏற்பட்டது அவர்கள் நினைவிற்கே வராமல் இருக்க வேண்டும்" என்று கேட்டு, வரம் பெற்றதால் தாயும் சகோதரர்களும் உயிர் பெற்று எழப் பெற்றனர். பின் ரேணுகையும் குமாரர்களும் ஜமதக்கினி முனிவரைப் பணிந்து எழுந்தார்கள். பரசுராமர் தன் தாயைச் சிரச்சேதம் செய்த பாவத்தைத் தீர்த்துக் கொள்வதற்குத் தந்தையிடம் விடைபெற்றுச் சென்றார். (பரசுராமர் சிரச்சேதம் செய்து, தந்தையிடம் வரம் பெற்றதால் உயிர்

பெற்ற தாயின் தலை மாறுபட்டு இருந்ததாகவும் பின் அது மாரியம்மன், மாகாளியம்மனாக மாறிவிட்டதாகவும் பல கதைகள் வழங்கப்படுகின்றன.) பரசுராமன் தீர்த்த யாத்திரை செய்யச் சென்ற செய்தியை அறிந்த கார்த்தவீரியனின் புதல்வர்கள் தங்கள் தகப்பனாரைக் கொன்ற பழியைத் தீர்க்க இதுதான் சமயமென்று சென்று ஜமதக்கினி முனிவரையும், ரேணுகையையும், மைந்தர்களையும் கொன்று விட்டார்கள். தீர்த்த யாத்திரை சென்று திரும்பி வந்த பரசுராமன் செய்தியறிந்து அடங்காத கோபம் கொண்டு க்ஷத்திரிய குலத்தையே கருவறுப்பதாகச் சபதம் செய்தார். கார்த்தவீரியார்ச்சுனன் மக்கள் அனைவரையும் கொன்றுவிட்டுத் திரும்பி வரும்போது நாரதர் எதிர்ப்பட்டுப் பரசுராமரை வாழ்த்திப் "பரசுராமா! நீ செய்த சபதம் அறிவேன், கங்கணதாரனாக இருக்கும் க்ஷத்திரியர்களை மட்டும் நீ அணுகாதே " என்று கூறிச் சென்றார். பின் இருபத்தேழு தலைமுறை க்ஷத்திரியர்களைக் கருவறுத்தார். இராமாவதார காலத்தில் பரசுராமரது சபதம் பங்கம் மாறாமல் தீர்க்கப்பட்டது. அன்று முதல் க்ஷத்திரிய வம்சத்தில் "பரசுராமர் பேர் விளங்க ரேணுகையைக் குலதெய்வமாகப் பூஜை செய்து வந்தார்கள். பண்டைய வழக்கப்படி நாமும் ரேணுகையைக் குலதேவதையாகப் பூசித்து வருகிறோம் " என்று கதை கூறக் கேட்ட ரங்கம்மா ஆனந்தப்பட்டு, தன் தந்தையிடம் "அப்பா நான் தங்களிடம் முக்கியமான செய்தியொன்று சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். நான் சொல்வதைத் தாங்கள் அவசியம் ஆலோசிக்க வேண்டும் " என்றாள்.

கொண்டம நாயுடு, "ரங்கம்மா என் செல்வமே! நீ என்ன விரும்பினாலும் சொல், அதைச் செய்ய நான் காத்திருக்கிறேன்" என்று சொன்னார். ரங்கம்மா, "அப்பா என் தாயார் பரலோகமடைந்து ஒன்பது ஆண்டுகள் முடிந்து விட்டன. குடும்பம் நடத்த யார் இருக்கிறார்கள்" குடித்தனம், கச்சேரி வேலைகளைக் கவனித்துத் தாங்கள் உடல் நலம் குன்றி விட்டால் என்ன செய்வது? வீட்டில் வேலைக்காரர்களை வைத்து எவ்வளவு செய்தாலும், என்ன பலன்? நமது வீட்டிற்கு வரும்

பந்துமித்திரர்களை தகுந்த முறையில் கவனித்து உபசரிக்க யார் இருக்கிறார்கள்? ஆகையால் தாங்கள் திருமணம் செய்து கொண்டால் நல்லது என்றாள்.

### *கொண்டம நாயுடு - கோனம்மா திருமணம்*

கொண்டம நாயுடு, "ரங்கம்மா நீ என்ன சொல்லப் போகிறாய் என்று எண்ணினேன், இரண்டாவது தாரம் மணம் செய்து கொண்டால், அதனால் துன்பமேயன்றி இன்பமில்லை, மேலும் தாயில்லாக் குழந்தையாகிய உன்னை நான் துன்பத்துக்கு உள்ளாக்க வேண்டிவரும். நீ சிறு குழந்தை ஆகையால் உனக்கு உலக அனுபவம் போதாது. மறுமணம் செய்து கொண்டு நான் சுகப்படுவதைவிட உன் வாழ்வே எனக்கு ஆனந்தம் தரவல்லது. இரண்டாம் தாரம் மணம் செய்து கொண்ட குடும்பங்களில் எவ்வளவு சண்டை சச்சரவுகள் நடக்கின்றன என்பதை நீ அறிந்து கொள்ளவில்லை" என்றார்.

ரங்கம்மா "அப்பா நீங்கள் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது, பெண்கள் அனைவருமா சண்டை சச்சரவு செய்து குடும்பத்தைக் கெடுப்பார்கள்? எங்காவது ஒரு சிலர் நீங்கள் நினைக்கும்படியாக இருப்பார்கள். கணவனே கண் கண்ட தெய்வம் என்று நம் தேசப் பெண்கள் இருப்பதில்லையா? குஷ்டரோகம் பிடித்த கணவனைக் கல்யாணம் செய்த நளாயினி, அவர் விரும்பியபடியே தாசிக்குப் பணி விடை செய்து, அவள் அனுமதி பெற்றுக் கணவனைக் கூடையில் வைத்துத் தலையில் சுமந்து செல்ல வழியில் கழுமரத்தில் தொங்கிய ஒரு முனிவனின் காலில் கூடை பட அம்முனிவர் வலி தாங்கமுடியாமல் பெண்ணே! சூரிய உதயமாகும்போது உன் மாங்கல்யம் அறுந்து விழும் என்று சாபம் கொடுக்க, கணவனைச் சுமந்து கொண்டு நளாயினி சர்வ வல்லமையுள்ள சூரியனை உதிக்காமல் செய்துவிடவில்லையா! அப்பா, மேலும் கற்பைச் சோதிக்க வந்த மும்மூர்த்திகளைக் குழந்தைகளாக்கி அனுசூயா

தேவி தொட்டிலில் வைத்துத் தாலாட்டவில்லையா! கணவனைக் கள்வன் என்று பொய்க்குற்றம் சாற்றிப் படுகொலை செய்த பாண்டியனைப் பழிவாங்கி மதுரை மாநகரத்தை எரித்து வானுலகம் புகுந்த கண்ணகி பிறந்த நம் நாட்டில், நல்ல குடும்பத்தில் பிறந்த பெண்கள் இல்லாமலா போய்விட்டார்கள்? மேலும் நீங்கள் கிராம அதிகாரம் பெற்றிருக்கின்றீர்கள், தங்களுக்குப் பிறகு நம் குலம் விளங்க வேண்டாமா! நம்பூரார் வீட்டின் பேர் விளங்க வேண்டாமா? ஆகையால் நீங்கள் கல்யாணம் செய்து கொள்வதுதான் நல்லது" என்று சொன்ன ரங்கம்மாளை கொண்டமநாயுடு அன்புடன் தழுவி, "அம்மா நீ இவ்வளவு சாதுரியமாகப் பிற்கால வாழ்வைப் பற்றிப் பேச எங்கு கற்றுக் கொண்டாய்! என் கண்ணே! கர்மவினை யாரை விட்டது! விதிவழியேதான் அனைத்தும் நடக்கும். உன்னை மகிழ்ச்சிப்படுத்த உன் அன்பிற்காக திருமணம் செய்து கொள்ளச் சம்மதிக்கிறேன்" என்றார்.

அதைக் கேட்ட ரங்கம்மா ஆனந்தங்கொண்டாள். மறுநாட்காலையில் கொண்டம நாயுடு கச்சேரிக்குச் சென்ற பிறகு ரங்கம்மாள் தன் சிறிய தகப்பனார் வெங்கிடாத்திரி நாயுடு வீட்டிற்குச் சென்று தன் தந்தையாரின் திருமண விஷயமாகப் பேசினாள். அவர் மூலமாக மற்ற சிறிய தகப்பனார்களுக்கும் பந்துக்களுக்கும் ஆட்களை அனுப்ப ஏற்பாடு செய்தாள். வெங்கிடாத்திரி நாயுடுவை உடன் அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றாள். அன்று மாலை வேளையில் ரங்கம்மாளின் பாட்டனார் உட்பட்ல குலசேகர நாயுடு, கஸ்தூரி நாயுடு, தோணாதல கிருஷ்ணம நாயுடு, ஆதூரி அக்கம நாயுடு, ராமி நாயுடு, பேபட்ல ரங்கப்ப நாயுடு முதலிய பெரியோர்களும் சிறிய தந்தை தாய்மார்களும் சுமங்கலிப்பெண்களும் வீட்டுக்கு வந்தார்கள்.

கொண்டம நாயுடு கச்சேரி வேலைகளையும், குடித்தன வேலைகளையும் முடித்துக் கொண்டு வீட்டிற்கு வந்தார். வீட்டிற்குத் தன் சகோதரர்களும், பந்துக்களும் வந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்து

அனைவரையும் நலம் விசாரித்து உபசரித்தார். எல்லோரும் விருந்துண்ட பிறகு கூடத்தில் அமர்ந்து கல்யாண விஷயமாக ஆலோசித்தார்கள். அப்போது பேபட்ல ரங்கப்ப நாயுடு "அய்யா பெரியோர்களே ஊஞ்சப்பாளையம் துக்கின்னார் நாரப்ப நாயுடுவை நீங்கள் அறியாதவர்கள் அல்ல, நல்ல செல்வாக்குள்ளவர், அவருக்கு கோனம்மா என்ற பெண்ணும், பேர நாயுடு என்ற பையனும் உள்ளனர். ஊஞ்சப்பாளையத்தில் துக்கின்னார் நாரப்ப நாயுடுவும் அவள் மனைவி ஏலம்மாளும், நாரப்பநாயுடுவின் தம்பி துரைகிருஷ்ணம நாயுடுவும் அவர் மனைவி லட்சுமி அம்மாளும் மிகுந்த செல்வாக்குடையவர்கள். நாரப்ப நாயுடு பன்னிரெண்டு கிராமங்களுடைய பெருந்துறைக்கு மணியக்காரராக உள்ளார். கோனம்மா நல்ல அழகி நல்ல குணமுடையவள். உங்கள் குடும்பத்திற்கேற்ற பெண் துக்கின்னார் குலத்துக்கும் நம்பூரார் குலத்துக்கும் நல்ல பொருத்தம், நல்ல சம்பந்தம்" என்றார். அது கேட்ட மற்ற பெரியோர்கள் சம்மதம் தெரிவிக்க மறுநாட்காலையில் ஊஞ்சப்பாளையத்திற்கு மனுவாடச் செல்வதென்று தீர்மானித்தார்கள். மறுநாட்காலையில் நம்பூரார் வெங்கிடாத்திரி நாயுடு தன்னுடன் நால்வரைக் கூட்டிக் கொண்டு ஊஞ்சப்பாளையத்திற்கு மனுவாடச் சென்றார்கள்.

இவர்கள் வந்ததைக் கண்ட துக்கின்னார் நாரப்ப நாயுடு வரவேற்று உபசரித்து, ஆசனமளித்துப் பெரியோர்கள் ஐவரும் வந்த காரியம் யாது என விசாரித்தார். வந்த காரியத்தைச் சொல்ல நாரப்ப நாயுடு வீட்டிற்குள் சென்று மனைவி எல்லம்மாளுடன் ஆலோசித்தார், பின் தன் சகோதரர் துரை கிருஷ்ணம நாயுடுவை வரவழைத்து விவரங்களைக் கூறினார், எல்லோருடைய சம்மதத்தையும் அறிந்து கூடத்திற்கு வந்து பெரியோர்களிடம் பெண் கொடுக்க தங்களுக்குச் சம்மதமென்று நல்ல வார்த்தை கொடுத்து அனுப்பினார்.

பிறகு ஒரு நல்ல நாள் பார்த்துப் பெரியோர்களையும், சுமங்கலிகளையும் அனுப்பி நிச்சயதாம்பூலம் செய்து நாள் குறித்து நெல்லும், நெய்யும் அளந்து ஒலி செலுத்தினர். பின் திருமண தாம்பூலத்துடன் பந்துக்களை அழைத்தனர். குறித்த நல்ல நாளில் வீடுகளை அலங்கரித்தனர். சுபதினத்தில் நம்பூரார் கொண்டம நாயுடுவுக்கு நலங்கு வைத்து, தோரணம் அரிவேனை சீர்களும் செய்தனர். நெகசீர் (அதாவது கால்ல கோள்லு) சந்தன நலங்கு வைத்துப் பின் மாப்பிள்ளையை அலங்கரித்துப் பெண் வீட்டுக்குப் புறப்படும்போது குத்துவிளக்கு முன் தம் குலத்தார் அனைவரும் ராஜுமொக்கு செய்து சகல பந்துக்களும் புடைசூழ மேள தாள வாத்தியங்கள் முழங்க மாப்பிள்ளையை ஊர்வலமாக அழைத்துக்கொண்டு ஊஞ்சப்பாளையம் சென்று சேர்ந்தனர்.

துக்கின்னார் குலச் சுமங்கலிப் பெண்கள் மஞ்சள் குங்குமத்துடன் வரவேற்புக்குரிய பொருள்களோடு சென்று மாப்பிள்ளையையும் உறவினர்களையும் வரவேற்றனர். பின் துக்கின்னார் பெரியவர்கள் மாப்பிள்ளையை எதிர் கொண்டழைத்து மாலையிட்டு கங்கண மோதிரங்கள் அணிவித்து அழைத்துக் கொண்டு போய் விடுதி வீட்டில் தங்க வைத்தனர். கோனம்மாளை நன்கு அலங்கரித்து நலங்குவைத்து முறைப்படி மற்ற சீர்வரிசைகளைச் செய்தனர். மறுநாட்காலையில் மாப்பிள்ளையையும் பெண்ணையும் சிறப்பாக அலங்கரித்து மணப்பந்தலுக்கு அழைத்து வந்தனர். மேள தாள வாத்தியங்கள் முழங்கின, புரோகிதர் புண்யார்ச்சனை, யாக பூஜைகள் செய்து கங்கணதாரணம் செய்து சகல வாத்தியம் முழங்க அனைவரும் அட்சதை கொண்டு ஆசீர்வதிக்க, நம்பூரார் கொண்டம நாயுடு கோனம்மாளுக்கு திருமாங்கல்யதாரணம் செய்தார். திருமணத்திற்கு வந்த பந்துமித்திரருக்கு துக்கின்னார் நாரப்ப நாயுடு விருந்து வைத்துத் தாம்பூலம் கொடுத்து அனுப்பினார்.

திருமணம் முடிந்த ஆறாவது மாதம் கோனம்மா சகல சீர் வரிசைகளுடன் கம்பளியம்பட்டிக்கு வந்து கொண்டம நாயுடு

வீட்டில் நல்லறமாகிய இல்லறம் நடத்தினாள். புதுமணப்பெண் கோனம்மா வந்த அன்று கொண்டம நாயுடு காலையில் எழுந்து நீராடி ரங்கம்மாளுடன் பூஜை செய்து, உணவு உண்டு ரங்கம்மாளுடன் கூடத்திலிருந்த ஊஞ்சலில் அமர்ந்தார். கோனம்மா வெற்றிலைப்பாக்குத் தட்டுடன் கூடத்திற்கு வந்து ஊஞ்சல் பலகை மேல் தட்டை வைத்துவிட்டு அருகில் நின்றாள். கொண்டம நாயுடு “கோனம்மா இந்தக் குழந்தை ரங்கம்மா என் செல்வம், என் கண்மணி இன்று முதல் உன் குழந்தை. இவள் பிறந்த ஆறாவது மாதம் இவளைப் பெற்ற தாய் பரமபதமடைந்தாள். அன்று முதல் இக்குழந்தையை என் உயிர் போலப் பாதுகாத்து வருகிறேன். இவள் ஒரு தெய்வீகப் பிறவி, இச்சிறு வயதிலேயே இவள் நிறைந்த தெய்வ பக்தி உடையவளாயிருக்கிறாள். குழந்தையின் பிடிவாதத்தால்தான் நான் மறுமணத்திற்கு ஒப்புக்கொண்டேன். கொஞ்சம் பிடிவாத குணமுடையவள். நல்லதைச் சொன்னால் உணர்ந்து அதன்படி நடப்பாள். நீ பெற்ற குழந்தையைப் போல் பாதுகாத்து வரவேண்டும்” என்று சொல்லக் கோனம்மா ஏதோ சொல்ல வாய் திறக்கும் முன் ரங்கம்மா ஊஞ்சல் பலகையை விட்டிறங்கி கோனம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டு “அப்பா தாய்க்குப் பதில் தாயாக அம்மா இருக்கிறாள் எனக்கென்ன குறை நீங்கள் இனி கவலைப்பட வேண்டியதில்லை” என்று கோனம்மாளின் தாடையைத் தடவி “இனிமேல் நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை” என்று சொன்னாள். கோனம்மா ரங்கம்மாளை அன்புடன் தழுவி உச்சி முகர்ந்து முத்தமிட்டு உள்ளே அழைத்துச் சென்றாள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த கொண்டம நாயுடு மனம் மகிழ்ந்து இனிமேல் குழந்தை ரங்கம்மாளுக்கு ஒரு குறையும் இல்லையென்று தீர்மானித்து ரேணுகையை வணங்கிக் கச்சேரி வீட்டிற்குச் சென்றார். செல்வமும், அதிகாரமும், உற்றார் உறவினர் நன்மதிப்பும் பெற்ற நம்பூரார் கொண்டம நாயுடுவின் குடும்பம் நிறை இன்பத்துடன் வாழ்ந்து வந்தது. ரங்கம்மா கோனம்மாவின் மனம் கோணாது நடந்து வந்தாள். வழக்கம் போல் ரங்கம்மா காலையில் எழுந்து ரேணுகை,

அங்காள தேவதைகளுக்குப் பூஜை செய்து தன்னைத் தேடி வரும் பொது மக்களுக்கு உபசாரம் செய்து அனேக புராணக் கதைகளைப் படித்துச்சொல்லி அனைவராலும் நன்கு மதிக்கப்பட்டு வந்தாள். ரேணுகையின் அருளால் கோனம்மா திருமணமான ஒரு வருடத்திற்குப் பிறகு கருத்தரித்தாள். துக்கின்னார் நாரப்ப நாயுடு உறவினர்களுடன் வந்து எட்டாவது மாதம் சீமந்தம் செய்து கோனம்மாளை ஊஞ்சப்பாளையத்திற்கு அழைத்துச் சென்றார்.

## *ஐயப்ப நாயுடு - லட்சுமி ஜனனம்*

கோனம்மா ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தைக்கு சகல சீர்வரிசைகளும் செய்து ஐயப்ப நாயுடு என்று பெயர் வைத்தார்கள். சில நாட்களுக்குப் பிறகு துக்கின்னார் நாரப்ப நாயுடு சகல சீதனங்களுடன் கோனம்மாளையும் குழந்தையையும் கம்பளியம்பட்டிக்கு அனுப்பினார். கம்பளியம்பட்டியில் குடும்பம் இனிது நடந்து வரும்போது கோனம்மா மற்றொரு பெண் குழந்தையைப் பெற்றாள். அந்தக் குழந்தைக்கு லட்சுமி என்று பெயர் வைத்து ஐயப்பனையும், லட்சுமியையும் வளர்த்து வந்தனர். குழந்தைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தனர். ரங்கம்மா அதிகாலையில் எழுந்து நீராடி பூஜைகளை முடித்துக் கொண்டு குழந்தைகளை எழுப்பிக் குளிப்பாட்டி ஆடைகள் அணிவித்து பூஜையறைக்கு அழைத்துச் சென்று தீர்த்தப் பிரசாதம் கொடுத்து காலை உணவு ஊட்டி குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டி அன்புடன் பேசிச் சிறிய தாயார் சொற்கேட்டு அதன்படி நடந்து வந்தாள்.

## கோனம்மாவின் துவேஷம் ஆரம்பம்

இரவு நெடுநேரம் வரை தந்தையிடம் புராணக் கதைகளை கேட்ட ரங்கம்மா ஒரு நாள் காலையில் அதிக நேரம் வரைக்கும் தூங்கிவிட்டாள். சூரிய உதயத்திற்குப் பின் எழுந்தவள் அவசர அவசரமாக நீராடி பூஜை அறைக்குள் சென்று பூஜை செய்து

கொண்டிருக்கும்போது ஐயப்பனும் குழந்தை லட்சுமியும் மெதுவாக அழ ஆரம்பித்தனர். சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்த கோனம்மாள் குழந்தைகளின் அழுகையொலி கேட்டு ரங்கம்மாளைக் கூப்பிட்டாள். பதில் இல்லாததால் பூஜை அறைக்கு வந்து தியானத்தில் இருந்த ரங்கம்மாளை தியானம் கலையும்படி "என்ன ரங்கம்மா உன் பாட்டில் நீ அறையில் உட்கார்ந்து பூஜை செய்து கொண்டிருக்கிறாய். நான் வீட்டுக்காரியங்கள் செய்வதா? குழந்தைகளைப் பார்ப்பதா? அதோ பார் ஐயப்பனும் லட்சுமியும் அழுகிறார்கள். அடுப்பில் சாதம் இருக்கிறது, பூஜை என்ன வேண்டியிருக்கிறது? காலையில் எழுந்து வீட்டு வேலைகளை செய்யாமல் இருந்தால் யார் இதையெல்லாம் செய்வது"? என்று கடிந்து கொண்டாள். கோனம்மாவின் குரலைக் கேட்ட ரங்கம்மா நிஷ்டை கலைந்து வெளியே வந்து குழந்தைகளை எடுத்து அழுகையை நிறுத்தி வழக்கம்போல் குழந்தைகளை கவனித்தாள். பூஜை அறையில் வந்து கடிந்து பேசிய வார்த்தைகளை நினைத்து வருந்தினாள். நாட்கள் செல்லச் செல்ல கோனம்மா ரங்கம்மாளைக் காலையில் செய்யும் பூஜையை நிறுத்திவிட வேண்டும் என்று வற்புறுத்தி வந்தாள். ரங்கம்மா கோனம்மாவிடம் எதிர்த்துப் பேசாமல் சில நாட்கள் நடந்து வந்தாள். கோனம்மா, ரங்கம்மாளை கடிந்து கொள்வது சாதாரணமாகிவிட்டது.

ஒரு நாள் கோனம்மா, ரங்கம்மாளை "நீ இனி மேல் வீட்டில் பூஜை செய்வதை நிறுத்திவிட வேண்டும். குடும்பத்துப் பெண்கள் காலையில் எழுந்து வீட்டு வேலைகளை கவனிப்பதுதான் நல்லது. வெளியே சென்ற ஐயப்பனைக் காணவில்லை. நீ சென்று அவனை அழைத்துக் கொண்டு வா" என்று அனுப்பினாள். சாயங்கால வேளையில் ஐயப்பனை அழைத்துவரச் சென்ற ரங்கம்மா தன் சிற்றன்னை சில நாட்களாகக் கடிந்து கொள்வதையும், காலைப்பூஜையை நிறுத்திவிடுமாறு சொல்வதையும் மனதில் நினைத்து ஆறாத்துயர் கொண்டாள். அங்காள தேவதை கோயில் வழியில் வரும்போது தன் சிற்றன்னை சொன்னதை

அம்பிகையின் முன் நின்று "பரமேஸ்வரி நான் என்ன செய்வேன்? சில நாட்களாக என் சிறிய தாயார் தங்களுக்கு பூஜை செய்வதைத் தடுக்கிறாள். மேலும் என்னை அடிக்கடி கடிந்து கொள்கிறாள். நான் என்ன செய்வேன்! தாயே என்னை ஆதரிப்பாய்! உனையன்றி எனக்கு யார் துணை" என்று கதறியழுது தியானத்தில் ஆழ்ந்தாள். அன்று சாயங்கால வேளையில் வீட்டுக்கு வந்த கொண்டம நாயுடு ரங்கம்மாளைக் காணாமல், கோனம்மாளை "ரங்கம்மா எங்கே" என்று கேட்டார். அப்போது கோனம்மா "வெளியே சென்ற ஐயப்பனை அழைத்து வரச் சென்றவள் இன்னும் வந்து சேரவில்லை" என்றாள். அது கேட்ட கொண்டம நாயுடு ரங்கம்மாளைப் பல இடங்களில் தேடித் தேடிக் கடைசியில் அங்காள தேவதையின் கோயிலில் தியானத்தில் இருந்த ரங்கம்மாளைத் தட்டி எழுப்பி வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார். கோனம்மா ரங்கம்மாளை, "ஏண்டி ரங்கம்மா, நீ என்ன இரண்டு தினங்களாக வீட்டில் ஒரு மாதிரியாக நடந்து கொள்கிறாய். ஐயப்பனை அழைத்துக் கொண்டுவரப் போனவள் எங்கே போனாய்? அப்பா வந்து உன்னை அழைத்துக் கொண்டு வந்தாரே? எங்கிருந்தாய் சொல்" என்றாள். ரங்கம்மா பதில் பேசாது தலை குனிந்து கொண்டு நின்றாள். நான் கேட்டது காது கேட்கவில்லையா? நாளை முதல் நீ காலையில் எழுந்து வீட்டுக் காரியங்களைச் செய்ய வேண்டும். காலையில் பூஜைகள் செய்து கொண்டிருந்தால் குடும்பம் எப்படி முன்னுக்கு வரும்? என்று சிடு சிடுத்துப் பேசினாள். இதைக் கேட்ட ரங்கம்மா "அம்மா ஏன் இப்படி கோபித்துக் கொள்கிறீர்கள். நான் என்ன குற்றம் செய்தேன். நீங்கள் சொன்ன எந்த வேலையை நான் செய்யவில்லை, உங்கள் குழந்தையல்லவா நான். என் மீது குற்றமிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று பணிவாகச் சொன்ன வார்த்தையைக் கேட்ட கோனம்மா, "ஆமாமடி, நம்பூரார் பெண்களுக்கு சாமார்த்தியமாகப் பேசித் தப்பித்துக் கொள்ளப் பழகியா கொடுக்க வேண்டும். போ லட்சுமி தொட்டிலில் அழுகிறாள். தொட்டிலை ஆட்டி அவளைத் தூங்கவை" என்று அதட்டினாள், ரங்கம்மா பேசாமல் சென்று தொட்டிலை ஆட்டி நின்றாள்.

சில நாட்களில் மேலும் மனம் மாறுபட்ட கோனம்மா ரங்கம்மாளை திட்டினார். கோனம்மாளின் கண்டிப்பான வார்த்தைகளைக் கேட்ட ரங்கம்மா காலையில் கடமையாகச் செய்து வந்த பூசையை நிறுத்திக் கொண்டு வீட்டு வேலைகளைச் செய்து வந்தாள். வேலைகளைச் செய்யும்போது ரேணுகையைத் தியானித்தபடியே தன்னை மறந்துவிடுவாள். கோனம்மா ரங்கம்மா செய்யும் வேலைகளில் குற்றம் கண்டுபிடித்து கடிந்து கொள்ள தொடங்கினாள். அம்மா நீ பெண்ணாகப் பிறந்து வீட்டு வேலைகளைச் சரிவரச் செய்யாவிட்டால் என்ன செய்வது, வீட்டைப் பெருக்கினால் மூலைகளில் குப்பை அப்படியே இருக்கிறது, பாத்திரம் கழுவினால் சுத்தமாக இல்லை, வீட்டில் நல்ல தண்ணீர் இல்லை சீக்கிரம் போய் ஒரு குடம் தண்ணீர் கொண்டு வா என்று பெரிய குடம் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள். குடத்தை வாங்கிக் கொண்ட ரங்கம்மா நேராக அங்காள தேவதை கோவிலுக்குச் சென்று குடத்தை வைத்து விட்டு முழங்கால் மண்டியிட்டு “தாயே அம்பிகையே காரணமில்லாமல் என் சிறிய தாயார் கோபித்துக் கொள்ளுகிறார், நான் என்ன செய்வேன்? நான் காலையில் எழுந்து உங்களை வணங்குவது என் சிறிய தாயாருக்கு பிடிக்கவில்லை. என் மேல் அடிக்கடி குற்றம் சுமத்துகிறாள், கண்டிக்கிறாள், இதை அப்பாவிடம் சொல்லலாமென்றாலோ அது மேலும் விபரீதமாக மாறும் நான் என்ன செய்வேன், பழக்கமில்லா வேலைகளைச் செய்யச் சொல்லுகிறார். அதில் குற்றம் கண்டுபிடித்துத் தாறுமாறாக வைகிறார். தாயே தயாபரீ ஆதரிப்பாய்” என்று கண்மூடித் தியானித்தாள்.

அப்போது கோவில் மணிகள் கண கண வென்று ஒலிக்க ஜோதிமயமாய் அங்காளம்மன் தோன்றி “குழந்தாய்! ரங்கம்மா! பயப்படாதே! நீ பூவுலகில் பிறந்த காரியம் இன்னும் முடிவு பெறவில்லை. நான் எச்சமயத்திலும் உனக்குத் துணையாக இருந்து காப்பாற்றுவேன்” என்று சொல்லி மறைந்தாள். ரங்கம்மா பேரானந்தம் கொண்டு அம்மனுக்கு வணக்கம் செலுத்திவிட்டுக் குடத்தை எடுத்துக்

கொண்டு சென்று நடைக் கிணற்றில் இறங்கித் தண்ணீர் மொண்டு, குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துப் பாரமாக இருந்ததால் தள்ளாடி தள்ளாடி நடந்து வீடு சென்று சேர்ந்து வாயிற்படி ஏறும்போது கால் இடறிக் குடத்தை கீழே போட்டு விழுந்து விட்டாள். வீட்டிற்குள் இருந்த கோனம்மா குடம் விழுந்த சப்தத்தைக் கேட்டு வெளியே வந்து பார்த்தாள். வாயிற்படியில் குடத்தைக் கீழே போட்டு விட்டு நின்ற ரங்கம்மாளைப் பார்த்துக் கண்களில் நெருப்புப் பொறி பறக்க "என்ன இது? தண்ணீர் கொண்டு வரப் போனவள் இவ்வளவு நேரம் வரை என்ன செய்தாய்? குடத்தை ஏன் கீழே போட்டு உடைத்தாய்? அந்தக் குடம் நன்றாக இருப்பது உனக்குப் பிடிக்கவில்லையா? ஏன் குடத்தை கீழே போட்டு உடைத்து விட்டாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று தலைமுடியை பிடித்து இழுத்து முகத்தை இடித்துப் பலவாறு பேசினாள். ரங்கம்மா பொறுமையாக "அம்மா நான் என்ன செய்வேன், குடம் அதிக பாரமாக இருந்ததால் வாயிற்படி ஏறமுடியாமல் கால்தவறி விட்டது. இதற்காக நீங்கள் கோபிக்க வேண்டாம் அம்மா இது ஒரு பெரிய குற்றமா? குடத்திற்கு பதில் வேண்டுமானால் குடம் வாங்கி விடலாம். அம்மா தங்கள் வாயிலிருந்து கடினமான வார்த்தைகள் வரலாமா? இதற்காக என் தலைமுடியை பிடித்து இழுத்து முகத்தில் இடிக்கலாமா? சேய் செய்யும் குற்றத்தை தாய் மன்னிக்கலாகாதா!" என்று சொல்லிவிட்டுக் கண்ணீரும் கம்பலையுமாய் நின்றாள். அப்போது கோனம்மா "என் குடத்தைப் போட்டு உடைத்ததுமல்லாமல் என்னை வாயாடி என்றும் சொல்லுகிறாள். தெய்வமே! இது என்ன அநியாயம், இவள் செய்த குற்றத்தை கேட்கவும் கூடாதா?" என்று பலவாறாகப் பேசிக் கொண்டிருந்த சமயம் ரங்கம்மா வீட்டிற்குள்ளே சென்றாள். ரங்கம்மாளின் தலை முடியைப் பிடித்து இழுத்ததால் தலை முடி அவிழ்ந்து தொங்கியது. நீண்டு சுருண்டு முழங்கால் வரை தொங்கிய கூந்தலைக் கண்ட கோனம்மா பொறாமை கொண்டு இவளது தலைமுடியை எப்படியாவது குறைத்துவிட வழி தேட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

வீட்டிற்குள் சென்ற ரங்கம்மா கவலையை அடக்கிக் கொண்டு விளக்கேற்றிவிட்டுக் குழந்தைகளுக்கு உணவூட்டிப் படுக்க வைத்து விட்டுத் தானும் படுத்துக் கொண்டாள். வழக்கம்போல் கொண்டம நாயுடு தன் வேலைகளை முடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார். வழக்கத்துக்கு மாறாகக் கோனம்மாள் எதிர் கொண்டு சென்று தண்ணீர் கொடுத்து உபசரித்தாள். ரங்கம்மாளைக் காணாது ரங்கம்மாளும் குழந்தைகளும் எங்கே?" என்று கேட்டார். "அய்யா இன்று வெள்ளிக்கிழமை எண்ணெய் தேய்த்து நீராட்டியதால் பகலில் குழந்தைகள் தூங்கவில்லை, ஆகையால் விளக்கேற்றியதும் உணவுண்டு உறங்கி விட்டனர், தூங்கினவர்களை எழுப்பக்கூடாது" என்று சமாதான வார்த்தைகள் சொல்லி கொண்டம நாயுடுவை உபசரித்தாள்.

மற்றொரு நாள் கொண்டம நாயுடு பெருந்துறை ஜமாபந்திக்குச் சென்றார். வரும்போது லட்சுமிக்கு நல்ல பட்டுப் பாவாடைகளும், ஐயப்பனுக்குச் சொக்காய்களும், ரங்கம்மாளுக்கு வெல்வெட்டால் ஆன பாவாடையும் வாங்கிக் கொண்டு வந்து கோனம்மாளிடம் கொடுத்தார். ரங்கம்மாளுக்கு வெல்வெட்டாலான பாவாடையை வாங்கி வந்ததை பார்த்த கோனம்மா அவள் தகப்பனார் குழந்தைகளுக்குப் பாகுபாடு செய்து வருவதால்தான் ரங்கம்மா அளவுக்கு மீறிப் போய் விடுகிறாள், இருக்கட்டும் இந்த பாவாடை எடுத்து வைத்து லட்சுமி பெரியவளான பிறகு கொடுக்கிறேன் என்று மறைத்து வைத்து விட்டாள்.

ஒரு நாள் வெள்ளிக்கிழமை ரங்கம்மாளைக் கூப்பிட்டு, "ரங்கம்மா இன்று வெள்ளிக் கிழமை. ஆகையால் நாம் ரேணுகா பூஜை செய்து விடுவோம். நீ சீக்கிரமாக எண்ணெய் ஸ்நானம் செய்து கொள். குழந்தைகளுக்கு ஜலதோசம் கண்டுள்ளதால் எண்ணெய் ஸ்நானம் வேண்டாம்" என்று சொல்லி எதனையோ கலந்து காய்ச்சின எண்ணெயைக் கொடுத்து அனுப்பினாள். அதை அறியாத ரங்கம்மா

இன்று நமது சிற்றன்னை நம்முடன் மிகவும் அன்புடன் பேசுகிறாள். ரேணுகா பூஜை செய்யப் போகிறோம் என்று வேறு கூறுகிறாள் என்று மனம் மகிழந்து கோனம்மா முன் கூட்டியே காய்ச்சி வைத்திருந்த எண்ணையைத் தலையில் தேய்த்து நீராடினாள். அன்று முதல் ரங்கம்மாளின் தலைமுடி கொஞ்சம் கொஞ்சமாக உதிர ஆரம்பித்தது.

ரங்கம்மாளுக்கு வயது பதினான்கு நிரம்பியது, நல்ல நேரத்தில் புஷ்பவதியானாள். இதையறிந்த உட்பட்ல குலசேகர நாயுடுவும், தாய்மாமன் கிருஷ்ணமநாயுடுவும் தங்கள் பந்துமித்திரரோடு வந்து குடிசை கட்டி நீராட்டி ரங்கம்மாளுக்கு ஆடை ஆபரணங்கள் சீர் வரிசைகள் செய்து ஆசிர்வதித்துச் சென்றார்கள். உறவினர்கள் கொண்டு வந்து வைத்து விட்டுப் போன தின்பண்டங்களையெல்லாம் கோனம்மா எடுத்து வைத்துக் கொண்டு ரங்கம்மாளுக்கு கொடுக்கவில்லை.

## *ஸ்ரீ ரங்கம்மாள் திருக்கல்யாணம்*

ரங்கம்மாளைத் திருமணம் பேச உறவினர்கள் அடிக்கடி வருவார்கள். மணம் பேச வந்தவர்களிடம் கோனம்மா ரங்கம்மாளைத் தன் தமையனுக்கு மணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தால் வந்தவர்களிடம், மறுப்பு தெரிவித்து திருப்பி அனுப்பி விட்டார். தன் தம்பி பேர நாயுடுவுக்கு எப்படியாவது ரங்கம்மாளை மணம் முடித்து வைக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டு சமயம் நோக்கிக் கொண்டிருந்தாள்.

நாரப்ப நாயுடு மகன் பேர நாயுடுவுக்கு வயது இருபத்திரண்டு நிரம்பி விட்டது. இன்னும் திருமணமாகவில்லை. கொஞ்சம் கோபம் உள்ளவன். கள்ளங்கபடமறியாதவன், எப்போதும் தோட்டத்தில் வேலை செய்து கொண்டுதான் இருப்பான். பேர நாயுடு தோட்டத்தில் வேலை செய்பவன் அவன்தான் மாதாரி சென்னான். அந்தக் காலத்து வழக்கப்படி பேர நாயுடு முழங்காலுக்கு மேல்

கோவணம் போட்டு வேட்டி கட்டியிருப்பார், தலையில் தலைப்பாகை கட்டியிருப்பார், தாடி மீசைகளுடனும் இருப்பார், மாதாரி சென்னானுடன் சேர்ந்து கவலை இறைப்பார், மற்றுமுள்ள தோட்ட வேலைகளையெல்லாம் செய்வார்.

இந்தப் பேர நாயுடுவுக்கு ரங்கம்மாளை மணம் முடித்து வைக்க எண்ணிய கோனம்மா ஊஞ்சப்பாளையத்திற்கு வந்து தன் பெற்றோருடன் பேசினாள். “அப்பா நமது பேர நாயுடுவுக்கு வயதாயிற்று”, நல்ல இடம் பார்த்து மணம் செய்து வைக்க வேண்டும், நம் குடும்ப கௌரவத்திற்கு ஏற்ற இடத்தில் பெண் பார்க்கலாம்.

ரங்கம்மாளைத் திருமணம் செய்து வைத்து விட்டால் நான் அவனைக் கவனித்துக் கொள்வேன். அதைக் கேட்ட ஏலம்மா, “அம்மா, உங்கள் நம்பூரார் பெண்கள் அழகுள்ளவர்கள், உங்கள் ரங்கம்மா உங்களுக்கு செல்லக் குழந்தை, தினந்தோறும் பூஜை செய்து வருகிறாள், குடும்பப் பொறுப்புக்குத் தகுதியானவள், அவளை என் மகனுக்கு மணம் செய்யலாம் என்றாள். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த நாரப்ப நாயுடு தனது தம்பி துரைகிருஷ்ணம நாயுடுவையும் மைத்துனன் ஆதூரி ராமி நாயுடுவையும் வரவழைத்து கோனம்மாளுடனும் ஆலோசித்துப் பேரநாயுடுவுக்கு நம்பூரார் கொண்டம நாயுடு வீட்டில் பெண் கேட்பது என்று தீர்மானம் செய்தார்கள். மற்றொரு நல்ல நாள் காலையில் துக்கின்னார் நாரப்ப நாயுடு, காகல்ல பாபி நாயுடு, நீர்கொண்டார் சின்னம நாயுடு, ஆதூரி அக்கம நாயுடு, பாபட்ல ரங்கப்ப நாயுடு ஆகிய ஐந்து பேரும் கம்பளியம்பட்டிக்கு நம்பூரார் கொண்டம நாயுடு வீட்டிற்குச் சென்றார்கள். தன் தந்தையுடன் ஏனைய பெரியோர்களும் வருவதைக் கண்ட கோனம்மாள் கூடத்தில் வரவேற்று பட்டு ஜமக்காளங்களை விரித்து அமர்த்தி உபசரித்துத் தண்ணீரும், வெள்ளித் தட்டுகளில் தாம்பூலமும் வைத்தாள். அப்போது கொண்டம நாயுடுவும் வந்து வரவேற்று நலம் விசாரித்து “பெரியோர்களே இன்று அதிகாலையில்

நீங்கள் ஐந்து பேரும் வந்திருப்பதை நோக்கினால் ஏதோ சிறப்பான காரியம் இருக்கும் என்று தெரிகிறது" என்றார். அப்போது ஆதூரி ராமி நாயுடு "அய்யா உங்கள் மைத்துனன் பேரநாயுடுவுக்கு உங்கள் ரங்கம்மாளைப் பெண் பேச வந்தோம்" என்றார். "ஐயா பெரியோர்களே! நீங்கள் திடீரென்று இப்புதிய கருத்தை சொல்லுவதால் இதை நான் ஆலோசித்துத்தான் சொல்ல வேண்டும்" என்று வீட்டிற்குள் சென்று கோனம்மாளிடம் கருத்துக் கேட்டார். கோனம்மாள் "நம் பெண்ணுக்கு திருமண வயதாகிவிட்டது. நம்மிடம் செல்லமாக வளர்ந்தவள், பக்தியோடு தினமும் பூஜைகள் செய்பவள், வீட்டு வேலைகள் செய்கிறாள்.

நம் குடும்பத்துக்குத் தகுந்த மாப்பிள்ளை வேண்டும், நம் குழந்தை தவறு செய்தாலும் நம்மவர்கள் ஆனதால் அதைப் பொருட்படுத்தமாட்டார்கள், குற்றங்குறைகள் நமக்குள்ளே அடங்கிவிடும். என் தமையனார்க்கு நல்ல செல்வமும், அழகும் தரமும் உள்ளது. ஆதலால் நீங்கள் ஒன்றும் யோசனை செய்யாமல் நல்ல வார்த்தை கொடுத்து அனுப்புங்கள் என்றாள். கொண்டம நாயுடு கூடத்திற்கு வந்து "அய்யா பெருமாள் கோவிலில் பூ வைத்துக் கேட்டு நிச்சயம் செய்து கொள்வோம்" என்று சொல்லிக் கொண்டையம்பாளையம் பெருமாள் கோவிலுக்குச் சென்றனர்.

பெருமாளை ஆராதனை செய்து பூ வைத்துக் கேட்க அவர்கள் கோரியபடியே வெள்ளைப் பூ கொடுக்க அனைவரும் பேரானந்தமடைந்து பேரநாயுடுவுக்கும் ரங்கம்மாளுக்கும் திருமணம் செய்வதென்று தீர்மானித்துக் கம்பளியம்பட்டிக்கு மீண்டும் சென்று நல்ல வார்த்தை பெற்று விருந்துண்டு விடை பெற்றுச் சென்றார்கள்.

### *கார்த்திகை ஜோதி முடுப்பு மற்றும் நல்ல வார்த்தை*

கார்த்திகை ஜோதி அன்று நடக்கும் பேரநாயுடு ரங்கம்மாள்

திருக்கல்யாணத்திற்கு முதல் நாள் மாடுகட்டிபாளையம் துக்கின்னார் வீட்டில் பெருமாள் தாயார் வைத்து பூஜை செய்து முடுப்பு மூட்டை வெள்ளை துண்டில் தயார் செய்வார்கள். அதில் கல்கண்டு, எலுமிச்சை, மஞ்சள் கொம்பு, சந்தன வில்லை, போங்கு நூல், குங்குமம் வெற்றிலை, பாக்கு, பூ மற்றும் ஒதிரூபாய் வைத்து இருப்பார்கள். மற்றும் தட்டங்களில் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, கல்கண்டு, மிட்டாய் எடுத்து கொண்டு மாடுகட்டி பாளையம் நம்பூரார் வீட்டிற்கு செல்வார்கள்.

நம்பூரார் வீட்டில் பெருமாள் தாயார் வைத்து தட்டங்களில் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, எலுமிச்சை, கல்கண்டு மற்றும் பலகாரம் வைத்து இருப்பார்கள். துக்கின்னார் பெரியவர்கள் அங்கு சென்று பெருமாள் முன்பு மூட்டையை வைத்து வணங்கி விட்டு அங்குள்ள பெண் மக்களிடம் பால் பால் ஆக உந்தாமா? என்று கேட்பார்கள் அதற்கு அவர்கள் பண்டு பண்டு ஆக உந்திபா என்பார்கள். (நல்ல காரியம் ஆக வந்துள்ளோம் ஏதாவது தடை உள்ளதா என்று மறைமுகமாக கேட்பது) எல்லோரும் அமர்ந்த பிறகு துக்கின்னார் பெரியவர்கள் தாங்கள் கொண்டு வந்த முடுப்பு மூட்டையை அவிழ்த்து வைப்பார்கள். பின்பு பெரியவர்கள் வெற்றிலை, பாக்கு 5 எடை வைப்பார்கள். அவை முறையே ஏலினவாடு ஏடுகொண்டலவாடுக்கு ஒன்று, மற்ற தெரிந்த தெய்வங்கள் தெரியாத தேவதைகளுக்கு ஒன்று பலபத்ர ராஜுக்கு ஒன்று, ராஜிலு பூசாரிக்கு ஒன்று பெத்தலு பேரண்டாலுக்கு ஒன்று ஆகும். அதை அங்குள்ள பெண்களுக்கு கொடுப்பார்கள்.

பிறகு எல்லோரும் சந்தனம், குங்குமம் இட்டு கொள்வார்கள். துக்கின்னார் நம்பூரார் பெரியவர்களிடம் எங்கள் பேரநாயுடுவிற்கு உங்கள் பெண் ரங்கம்மாளை திருமணம் செய்ய அனுமதி கேட்பார்கள், அதற்கு நம்புரார் பெரியவர்கள் பெண் கொடுக்க சம்மதம் என்பார்கள். துக்கின்னார், நம்பூரார் எல்லோரும் ஒரு தடவை எழுந்து உட்காருவார்கள் (முன்பு காலத்தில் பெண் கேட்பது ஒரு நாளும்,

நல்ல வார்த்தை திருமண முடிவு செய்தல் மற்றொரு நாளும் இருந்தது, தற்பொழுது இரண்டும் ஒரே நாளில் நடப்பதால் பெரியவர்கள் எழுந்து உட்காருகிறார்கள்) துக்கின்னார் பெரியவர்கள் நம்பூரார் பெரியவர்களிடம் திருமணத்திற்கு தினம் கேட்பார்கள். அவர்கள் (கார்த்திகை ஜோதி அன்று) கார்த்திகை மாதம் ரோகிணி நாள் காலை நல்ல நேரம் சொல்வார்கள், சம்மதமாக துக்கின்னார் பெரியவர்கள் பெரியவர்கள் கொண்டு வந்த முடுப்பு மூட்டையில் உள்ள ஒதி பணத்துடன் நம்பூரார் பணம் வைத்து, திருமணத்தை கோவிலில் வைத்து கொள்ளலாம் என்று முடிவு செய்வார்கள். எல்லோரும் வெற்றிலை பாக்கு கொடுத்து உறுதி செய்து கொள்வார்கள் கல்யாண வார்த்தை நல்ல முறையில் நடந்து முடிந்ததற்கு அடையாளமாக கல்கண்டு, பலகாரம் சாப்பிட்டு மகிழ்வார்கள்.

முடுப்பு மூட்டை கோவில் அலுவலகத்தில் சமர்பித்து அதில் உள்ள ஒதி பணம் கோவிலுக்கு கொடுக்கப்படும். கார்த்திகை ஜோதியில் நடக்கும் திருமண முடுப்பு மற்றும் பேரநாயுடு ரங்கம்மாள் திருக்கல்யாணம் ஆகியன கண் கொள்ளா காட்சிகள் ஆகும்.

நம்பூரார் கொண்டம நாயுடு வீட்டில் பெண் பேசி வந்த நாரப்ப நாயுடு தன் பந்துக்களுக்கு இந்த மங்களகரமான செய்தியை சொல்லியனுப்பினார். கம்மகுலப் பெரியவர்களை வரவழைத்து நிச்சய தாம்பூலம் செய்ய முதலில் பெரியவர்களை அனுப்பி பின் சுமங்கலிகளை அனுப்பி நல்ல வார்த்தை பெற்று வந்து பின் அன்று சாயங்காலம் உற்றார் உறவினர்கள் சுமங்கலிகள் நிச்சய தாம்பூலம் எடுத்துக் கொள்ள உப்பட்லு செய்து கம்பளியம்பட்டி கொண்டம நாயுடு வீட்டிற்குச் சென்று நிச்சய தாம்பூலம் செய்து திரும்பினார்கள். பின் ஒன்பதாவது நாள் குறிப்பு செய்து ஒலி செய்து நெல்லும் நெய்யும் அளந்து விருந்துண்டு சென்றார்கள். திருமணத் தாம்பூலம் கொடுத்துத் திருமணத்திற்கு அழைக்க மாப்பிள்ளை பெண் வீட்டார்கள் ஆட்களை

அனுப்பினார்கள்.

திருமணத்திற்கு முன் பேர நாயுடுவும் மாதாரி சென்னானும் கவலை இறைத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது மாதாரி சென்னி "சாமி, உங்களுக்குக் கல்யாணமாச்சே! நீங்கள் வீட்டுக்குப் போகாமே தோட்டத்திலே இருந்தா எப்படிசாமி?".கம்பளியம்பட்டி ரங்கம்மா நல்ல அழகுள்ளவங்கோ, படிச்சவங்கோ, பெரிய இடத்துப் பொண்ணுங்கோ, நீங்க ரங்கம்மாளைக் கண்ணாலஞ் செய்து கொண்டு சுகமா இருக்கலாமுங்கோ, "நீங்க போங்க சாமி! தோட்டத்து வேலையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்", என்றான். பேரநாயுடு வீட்டிற்கு சென்றார். கம்பளியம்பட்டியிலும் ஊஞ்சப்பாளையத்திலும் திருமண வீடுகளைப் பச்சைப் பந்தல்களால் அலங்காரம் செய்து வாழை, கமுகு, மாவிலைத் தோரணங்கள் கட்டினார்கள், வழியெங்கும் தோரணங்கள் கட்டி அலங்கரித்தனர்.

தாய்மாமன் ஆதூரி ராமி நாயுடு, தானூரி சின்னம நாயுடு ஆகிய இருவரும் பேர நாயுடுவை முகஷவரம் செய்ய அழைத்துக் கொண்டு சென்றார்கள். *(முற்காலத்தில் கல்யாணம் அன்றுதான் முதன் முதலில் முகஷவரம் செய்வார்கள்)*.

ராமி நாயுடு "மாப்பிள்ளே கல்யாணம் செய்து கொள்ளும் மாப்பிள்ளைக்கு முகஷவரம் செய்ய வேண்டும்" என்று சொல்லி சவரம் செய்தார்கள். பின்னர் தாய் மாமன் தலைப்பாகை கட்டும் சீர் செய்து அழைத்து வந்து நல்ல நேரத்தில் வாத்தியங்கள் முழங்க புரோகிதர்கள் புண்யார்ஜனை செய்து நலங்கு வைத்தார்கள். பெரியோர்களும் சுமங்கலிகளும் நலங்கு வைத்து ஆசீர்வாதம் செய்தனர். மாப்பிள்ளை பெண் வீட்டிற்கு புறப்படு முன் மாப்பிள்ளையை அலங்கரித்தார்கள். தோ தாரணத்தடியில் நிறுத்தி தாயாதிகளாகிய ஆண், பெண் அனைவரும் வரிசையாக நின்று தீப தரிசனம் (ராஜுமொக்கு) செய்து மாப்பிள்ளையை வழி அனுப்பினார்கள். மாப்பிள்ளை ஊர்வலத்துக்கு குதிரையை

அலங்கரித்து நிறுத்தியிருந்தார்கள். மாப்பிள்ளை குதிரை மேல் அமர்ந்து ஊர்வலம் சென்றார். அப்போது அங்கு வந்த ஏலம்மா மாப்பிள்ளைக்கு திருஷ்டி கழித்து சென்றார். மேளதாள வாத்தியங்கள் முழங்க நாதசுர இசை ஒலிக்க பேரிடி போல் கதனை வெடிகள் வெடித்து ஆகாயத்தைப் பிளக்க, ஆகாய பானங்கள் மத்தாப்பு ஒளி வீச பந்துமித்திரர்களும், சுமங்கலிப் பெண்களும் புடை சூழ ஊர்வலம் கம்பளியம்பட்டி விநாயகர் கோவிலை அடைந்தது. மாப்பிள்ளையைக் குதிரையை விட்டிறக்கி விநாயகர் கோவில் மேடையில் அமர்த்தினர். பெண் வீட்டாருக்கு மாப்பிள்ளை ஊர் தலை வாசலில் வந்திருக்கிறார் என்று சொல்லி வர வாத்தியம் அனுப்பினர். அதை அறிந்த நம்பூரார் சுமங்கலிப் பெண்கள் மாப்பிள்ளை வீட்டாரை வரவேற்க மஞ்சள் குங்குமம், பூச்செண்டுகள், சந்தானம், பன்னீர், வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழம், கல்கண்டு மற்றும் திண்பண்டங்கள் எல்லாம் தட்டுகளில் வைத்து எடுத்துக் கொண்டு சென்று வரவேற்று நல்வரவு கூறிச் சென்றனர். பின் மாப்பிள்ளை ஊர்வலம் புறப்பட்டது. நம்பூரார் குலப் பெரியவர்களும் காணியாள கந்தசாமிக்கவுண்டரும் மேள தாளங்களுடன் வந்து, தோரணத்தடியில் கொண்டம நாயுடு மாப்பிள்ளைக்கு வரவேற்பு மாலை அணிவித்து கங்கண மோதிரங்கள் போட்டு நல்வரவு கூறிச் சென்றனர். மாப்பிள்ளை விடுதி வீடு வந்து சேர்ந்தார்.

பெண்ணுக்கு நலங்கு வைக்கும் நேரம் ஆகிவிட்டதால் பெரியவர்கள் நலங்கு கொண்டு சென்றார்கள். திருமணப் பெண் ரங்கம்மாளை நீராட்டி வளையல் சீர் செய்து தாய்மாமன் உட்பட்ல கிருஷ்ணம நாயுடு சீர் கொண்டு வந்த பிறகு நம்பூரார் குல சுமங்கலிகள் பள்ளம் குத்து விளக்குகள் எடுத்துவர தோழிப் பெண்கள் ரங்கம்மாளை அழைத்து வந்து மணவறையில் பீடத்தின் மேல் உட்கார வைத்தனர். மேளதாள வாத்தியங்கள் முழங்கின. புரோகிதர்கள் புண்ணியார்ச்சனை செய்து தீர்த்தம் கொடுத்துபின் நலங்கு வைத்தார்கள். துக்கின்னார் நம்பூரார் குலப் பெரியவர்களும் சுமங்கலிகளும் நலங்கு வைத்து ஆசீர்வதித்தார்கள்.

நலங்கு முடித்த பிறகு மணப் பெண்ணின் முறைமைப் பெண்கள் பரிகாசம் செய்தார்கள். அதற்கு ரங்கம்மா கம்மகுலப் பெண்கள் தாய் தந்தையர்கள் தேர்ந்தெடுக்கும் மாப்பிள்ளையைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அன்று எழுதியதை திரும்பமாற்றி எழுதுவது இல்லை. இன்னார்க்கு இன்னார் என்று விதிக்கப்பட்டிருந்தால் அது மாறாது. "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்ற பழமொழியை மறந்து விட முடியாது. நளாயினி புருஷன் அழகைக் கண்டா மணம் புரிந்து கொண்டாள்? எல்லாம் ரேணுகையின் செயல், பெருமாள் பூ கொடுத்துதான் எங்கள் திருமணம் நடக்கிறது. உங்களுக்கென்ன பேச்சு, கல்யாண வேலைகளைப் பாருங்கள்" என்றாள் ரங்கம்மா.

பின்னர், கல்யாணச் சீர்களான, கோலப்பானைச் சீர், காள்ள கோள்ளு, சந்தன நலங்கு முடிந்த பிறகு ரங்கம்மாளை முகூர்த்தத்திற்கு அலங்காரம் செய்தார்கள்.

நம்பூரார் மருமகப் பெண்கள் ரங்கம்மாளுக்கு சம்பங்கி எண்ணெய் பூசினர். தங்கச் சிக்கட்டையால் சிக்கெடுத்தனர். வெள்ளிச் சீப்பால் மெல்லெனச் சீவினர். தலையில் கொப்பு முடித்தனர். இரத்தினக் கம்மல் அணிவித்து முத்துச் சரங்கள் பூட்டினர். காசுமாலைகள், தங்கச் சங்கிலிகள் பதக்கங்கள், அட்டிகைகள், மோதிரங்கள், புல்லாக்குகள், சடை வில்லைகள், சூரிய சந்திர பிறைகள், வகிர்ச்சரங்கள், சுட்டிகள், தங்கவளையல்கள், காப்புகள், வங்கிகள், கடிகைகள், பாதசரங்கள் அணிவித்தனர். பட்டுச்சேலையும் ரவிக்கையும் அணிவித்தனர். பாசிகம் கட்டினர். புனுகு, ஜவ்வாது, அத்தர், பன்னீர் பூசினர். மல்லிகை, முல்லை மாலைகள் அணிவித்தனர். சடையில் பூச்சூட்டினர். பின் மணவறைக்கு அழைத்துச் சென்றனர். சுக்ரவாரம் சூரிய உதயம், சுக்ல பட்சம், அஸ்த நட்சத்திரமும்

அமிர்தயோகமும் சுக்ரகால ஓரையும் பொருந்திய நல்ல நேரத்தில் பிராமணர்கள் புண்யார்ச்சனை செய்து கங்கணம் கட்டி, பெற்றோருக்குப் பாத பூஜைகள் செய்து, கன்னிகாதானம் தாரை வார்த்துக் கொடுக்க, யக்ஞம் வளர்த்து, திருமாங்கல்ய பூஜை செய்து அனைவரும் திருமாங்கல்யத்தை தரிசனம் செய்து வணக்கம் செய்த பிறகு பேரநாயுடு ரங்கம்மாளுக்குத் திருமாங்கல்யதாரணம் செய்தார். சகல வாத்தியங்கள் முழங்கின பந்துக்கள் அனைவரும் அட்சதைகள் வாரி இறைத்து ஆசிர்வதித்தார்கள். அரிசி முழுக்காட்டி, மாலைகள் மாற்றி, அருந்ததி காட்டி, சூரிய தரிசனம் செய்து எதிரெதிர் அமர்ந்து பூச்செண்டுகளாடினர். முறைமைக்காரப் பெண்கள் லாலி மங்களங்கள் பாடினர், கேலிகள் செய்தனர்.

அங்கு பகலில் விருந்துண்டனர். சாயங்கால வேளையில் நீராட்டி, அலங்கரித்து ஆரத்திகள் எடுத்து இரவு விருந்துண்டு முத்துப் பல்லக்கை அலங்கரித்து பெண்ணின் தாயாதிகள் ராஜுமொக்கு செய்த பிறகு பல்லக்கில் மாப்பிள்ளையையும் பெண்ணையும் உட்கார வைத்து சகல வாத்தியங்களும் முழங்க ஊர்வலமாகச் சென்றனர். ரேணுகை அங்காளம்மன்களைத் தரிசனம் செய்த பிறகு ஊஞ்சப்பாளையம் விநாயகர் கோயிலைச் சென்றடைந்தனர்.

துக்கின்னார் பெண்களும் குழந்தைகளும் மஞ்சள், குங்குமம், பழங்கள், தேங்காய்கள், பூவகைகள், பட்சணங்கள் நிறைந்திருக்கும் தட்டங்களைக் கொண்டு வந்து மாப்பிள்ளையையும் பெண்ணையும் வரவேற்றனர். பின்னர் ஊர்வலம் ஊஞ்சப்பாளையம் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று தோரணத்தின் கீழ் பெண்ணும் மாப்பிள்ளையும் நிறுத்தப்படடனர். மாமி ஏலம்மா மற்றமிரு பெண்களுடன் வந்து வரவேற்று பாலும் சர்க்கரையும் கொடுத்து திருஷ்டி கழித்துக் காசுமாலை அணிவித்து ஆரத்திகள் எடுத்தனர். மாப்பிள்ளையும் பெண்ணும் கிரகப் பிரவேசமானார்கள். பின் குழி மூடுதல், கங்கணம் அவிழ்த்தல் ஆகிய சீர்கள் நடந்தேறின. பின் சம்பந்தி போஜனம் நடந்தது. மறுநாள் ஏழை எளியவர்களுக்கு விருந்தளித்தனர்.

பேர நாயுடு நம்பூரார் கொண்டம நாயுடு வீட்டில் மருகலம் சாப்பிட்டு வந்தார். மாப்பிள்ளை பேர நாயுடு தினந்தோறும் காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டு ஊஞ்சப்பாளையம் தோட்டத்திற்குச் சென்று வேலை செய்து இரவு கம்பளியம்பட்டி சென்று சேருவார். கோனம்மா தம்பியை உணவளித்து உபசரிப்பாள். இப்படி மூன்று மாதம் சென்றது. ரங்கம்மா மாப்பிள்ளைக்குச் சாதம் பறிமாற நல்ல நாள் குறித்தனர். அன்று கொண்டையம்பாளையம் பெருமாள் கோவிலுக்குச் சென்று திருமஞ்சன அலங்கார அர்ச்சனை ஆராதனைகள் செய்து தரிசனம் செய்துவிட்டு வந்தனர். வீடு திரும்பிய பின் அன்றிரவு மாப்பிள்ளையும் அவர் தாய்மாமன் ஆதூரி ராமிநாயுடுவும் ரங்கம்மாளின் சிறிய தகப்பனார் வெங்கடாத்திரி நாயுடுவும் ஆகிய மூவரும் விருந்திற்கு உட்கார்ந்தார்கள்.

அன்று ரங்கம்மா மாப்பிள்ளை பேர நாயுடுவுக்கு முதன்முறையாக உப்பட்டு வைத்து அறுசுவை உணவு பரிமாறினாள். பேர நாயுடு ரங்கம்மாளை நேரில் பார்த்து சாப்பிட்ட வண்ணம் இருந்தார். விருந்து முடிந்து அனைவரும் பேர நாயுடுவை விட்டுச் சென்றார்கள்.

## *விதியின் விளையாட்டு ஆரம்பம்*

அதிக இருட்டாயிருந்தபடியால் பேர நாயுடு வெளியே போக முடியாமல் தனக்கென்று ஏற்படாகியிருந்த வீட்டில் போய்ப்படுத்துக் கொண்டார். ரங்கம்மா இன்று எப்படியும் கணவருடன் பேசலாம் என்ற ஆனந்தத்துடன் சீக்கிரமாக வேலைகளை முடித்துக்கொண்டு பாலும், பழமும், வெற்றிலையும் பாக்கும், தண்ணீரும் எடுத்துக் கொண்டு வீட்டிற்குள் சென்றாள்.

உணவு பரிமாறிய ரங்கம்மாவை பார்த்து பேரநாயுடு தனது மனைவி ரேணுகா தேவி போல் தெய்வ அம்சமாக இருப்பதை உணர்ந்து ரங்கம்மாளை ரேணுகா போல் நினைத்தார். ஆதலால் அவருக்கு மனநிலை

மாற ஆரம்பித்தது, உடல் நிலையும் மாறி குளிர் காய்ச்சலால் உடம்பு நடுங்க ஆரம்பித்தது. வீட்டிற்குள் சென்ற ரங்கம்மா கையில் கொண்டு சென்ற தட்டைக் கீழே வைத்து விட்டுக் கொஞ்ச நேரம் நின்று பார்த்தாள். பேர நாயுடு திரும்பியும் கூடப் பார்க்காமல் படுத்திருப்பதைப் பார்த்து அருகில் சென்று பார்த்தாள். தூக்கமோ அல்லது உண்ட களைப்போ என்று எண்ணிப்பார்த்தாள். குளிர் காய்ச்சலால் நடுங்குவது போல நடுங்கிக் கொண்டிருந்தார். இவர் ஏன் இப்படி நடுங்குகிறார்? என்ன செய்வது? இதை யாரிடம் போய்ச் சொல்லுவது? இவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று யோசித்து "அய்யா இதோ பாருங்கள், ஏன் உங்கள் உடம்பு இப்படி நடுங்குகிறது? என்னைப் பாருங்கள்" என்றாள். நடுங்கிக் கொண்டிருந்த பேர நாயுடு ரங்கம்மாவின் பேச்சைக் கேட்டதும் போர்வையை இழுத்து முக்காடு போட்டுக் கொண்டார். ரங்கம்மா இதைப் பார்த்து செய்வதறியாமல் தாயே ரேணுகா! இப்படி நடக்கும் என்று நான் எண்ணவே இல்லையே! நான் என்ன செய்வேன்! இவர் ஏன் என்னைக் கண்டதும் இப்படி நடுங்கிறார் தாயே! தயாபரி! நீதான் கதி என்று ரேணுகையை வணங்கிவிட்டு இனி என்ன செய்வதென்றறியாமல் பேசாமல் திரும்பிப் போய்ப் படுத்துக் கொண்டாள். மறுநாள் காலையில் எழுந்து ஊஞ்சப்பாளையம் சென்ற பேர நாயுடு மறுபடியும், கம்பளியம்பட்டிக்கு வரவில்லை.

பேர நாயுடு வராமல் இருப்பதன் காரணம் அறியாத கோனம்மாள் ரங்கம்மா பேரில் மறுபடியும் துவேஷம் கொள்ளத் தொடங்கினாள். "மாப்பிள்ளை ஊஞ்சப்பாளையம் போனவன் திரும்பி வரவில்லை. என்ன நடந்தது? பாவம் அவனுக்கு ஒன்றும் தெரியாது, நீ அவனை ஏதாவது சொல்லியிருப்பாய். இல்லாவிட்டால் அவன் ஏன் இங்கு வராமல் இருக்கிறான்? உண்மையைச் சொல்" என்றாள். ரங்கம்மா அம்மா எனக்கு ஒன்றும் தெரியாது. அன்று இரவு படுக்கையில் குளிர்காய்ச்சலால் நடுங்குவது போல் நடுங்கிக் கொண்டிருந்தார். நான் பலவாறு கேட்டும் என்னிடம் பேசவில்லை. மேலும் போர்வையை இழுத்து முக்காடு போட்டுச் சுவரின் பக்கம் திரும்பிப்படுத்துக் கொண்டார்.

நான் என்ன செய்வதென்றறியாது திரும்பிவிட்டேன். இதைத் தவிர வேறொன்றும் எனக்குத் தெரியாது என்றாள். கொண்டம நாயுடு ரங்கம்மாளிடம் விவரம் அறிந்து கோனம்மாளை ஊஞ்சப்பாளையம் சென்று மாப்பிள்ளையை அழைத்து வரும்படி கூறினார்.

கோனம்மா ஊஞ்சப்பாளையம் சென்றாள். தந்தை நாரப்ப நாயுடுவையும் தாய் ஏலம்மாளையும் கண்டு நடந்ததைச் சொன்னாள். தோட்டத்திலிருந்த பேர நாயுடுவை அழைத்து வரச் சொல்லி "தம்பி! நீ ஏன் கம்பளியம்பட்டிக்கு வராமல் இங்கேயே இருந்துவிட்டாய். உன்னை ரங்கம்மா ஏதாவது சொன்னாளா"? என கேட்க அருகிலிருந்த ஏலம்மா "அவள் சொல்லாமலா இருப்பாள்? எனக்கு முன் கூட்டியே தெரியுமே நம்பூரார் பெண்கள் கெட்டிக்காரர்கள் என்று நீயும் உன் அப்பாவும் கேட்டீர்களா? பாவம் சூதுவாது அறியாத என் மகன் அவளைக் கண்டாலே பயப்படுகிறான். என் மகனைக் கண்டால் அவளுக்குப் பிடிக்கவில்லைபோல் தெரிகிறது" என்று தொடர்பில்லாமல் பேசினாள். இதைக் கேட்ட கோனம்மாள், "அம்மா பொறுங்கள் அவசரப்படாதீர்கள்" என்று சொல்லித் தம்பியை பார்த்துத் "தம்பி! நீ ஏன் கம்பளியம்பட்டிக்கு வரவில்லை ரங்கம்மா உன்னை ஏதாவது சொன்னாளா?" என்றாள். பேர நாயுடு "இல்லையக்கா எனக்குத் தோட்டத்தில் வேலை இருந்தது. அங்கு எப்படி வருவது என்று நான் இருந்து விட்டேன்" என்றான்.

கோனம்மாள் "தம்பி! வேலை இருக்கத்தான் செய்யும். கல்யாணமான மாப்பிள்ளை மருகலம் சாப்பிடக் கம்பளியம்பட்டிக்கு வராமல் இருந்துவிட்டால் எங்கள் மதிப்பு குறைந்துவிடாதா? மற்றவர்கள் என்ன சொல்லுவார்கள் மேலும் உன் மாமா கோபித்துக் கொள்ளுவார். நான் இருக்கும்போது உனக்கென்ன குறை. எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று சமாதானம் சொல்லித் தம்பியைக் கம்பளியம்பட்டிக்கு அழைத்து வந்தாள்.

வந்தாலும், பேர நாயுடுவும் இரவில் கம்பளியம்பட்டியில்

தங்குவதில்லை. ரங்கம்மா வழக்கம் போல் எழுந்து நீராடி ரேணுகை பூஜை முடித்துவிட்டு வீட்டு வேலைகளைச் செய்து வந்தாள். பேர நாயுடுவைத் தன்னுடன் பேச வைக்கவேண்டும் என்று தன்னால் இயன்ற வரை முயன்றாள். ரங்கம்மாளைக் கண்டாலே பேர நாயுடு அப்பால் சென்று விடுவார். வீட்டிற்கு வரும்போது அக்காளைக் கூப்பிட்டபடி வருவார். கோனம்மா உடன் இருந்து கொண்டு ரங்கம்மாளை சோறு பரிமாறச் சொல்லுவாள். ரங்கம்மாளும் தன் நாயகனைத் தன்பால் திருப்பத் தன்னால் இயன்றதையெல்லாம் செய்து பார்த்தாள். பேரநாயுடு ஒவ்வொரு முறையும் தன் மனைவி ரங்கம்மாவை பார்க்கும் போது தனது மனநிலை மாறுவதை உணர்ந்தார். ஒரு நாள் சிறு கற்கள் கலந்த சோறு பரிமாறினாள், உப்பில்லாமல் குழம்பு ஊற்றினாள். இலையில் உப்பு வைக்காமலே தயிர் ஊற்றினாள். எதற்கும் அவர் அசைவதாக பேசுவதாகத் தெரியவில்லை.

இப்படி நடந்துவரும்போது ஒரு நாள் தானூரி சின்னமநாயுடு வீட்டிற்குக் கோனம்மா போகவேண்டி வந்ததால் கோனம்மாள் ரங்கம்மாளை அழைத்து, “மாப்பிள்ளை மத்தியானம் சாப்பாட்டிற்கு வருவார். நீ நன்றாக உபசரித்து அனுப்பு” என்று சொல்லிவிட்டுச் சென்றாள். தன் கணவனை எப்படியாவது திருப்தி செய்து பேச வைத்துவிடலாம் என்று மனம் மகிழ்ந்து நல்லபடியாகச் சமைத்தாள். கம்மவார் பலகாரமான “உப்பட்டு” தயார் செய்தாள். நடுப்பகலில் மாப்பிள்ளை வந்து அக்கா! அக்கா! என்று அழைத்தார். நாயகன் வரவை எதிர்நோக்கியிருந்த ரங்கம்மா தண்ணீர் செம்புடன் சென்று “அக்கா அவர்கள் தானூரியார் வீட்டுக்குப் போயிருக்கிறார்கள். இதோ தண்ணீர், கைகால்கள் சுத்தம் செய்து கொண்டு வாருங்கள். சாப்பிடலாம்” என்றாள். மாப்பிள்ளை கைகால்கள் கழுவிக் கொண்டு வீட்டிற்குள் சென்றார். ரங்கம்மா முக்காலி எடுத்துப் போட்டு தலைவாழை இலை விரித்து தண்ணீர் வைத்துவிட்டு, “உட்காருங்கள் சோறு பரிமாறுகிறேன்” என்றாள்.

ரங்கம்மா ரேணுகா தேவி போல் தெய்வீகமாக இருப்பதை உணர்ந்ததால் பேர நாயுடு சாப்பிட உட்கார்ந்தார், ரங்கம்மாவை பார்த்த பேரநாயுடு மனநிலை மாறுவதை உணர்ந்தார், ரங்கம்மா உப்பு வைத்து உப்பட்டு வைத்து பழங்கள் உரித்து வைத்து நெய்யும் வார்த்து, “சாப்பிடுங்கள்” என்று சொன்னாள். பேர நாயுடு தலை குனிந்தபடியே பிசைந்தார். பேர நாயுடுவைப் பார்த்து “அய்யா, ஏன் சாப்பிடாமல் இருக்கிறீர்கள், சாப்பிட முடியுமானால் சாப்பிடுங்கள். இல்லாவிட்டால் அதை ஒருபுறம் ஒதுக்கிவிடுங்கள். நான் சோறு கொண்டு வருகிறேன், என்று உள்ளே போனாள். அதற்கு மேல் அங்கு இருக்க முடியாத மனநிலையில் பேரநாயுடு எழுந்து கொல்லைப் பக்கம் போய் விட்டார். ரங்கம்மா மாப்பிள்ளையைக் காணாமல் திகைத்து “ரேணுகா தேவியே இதுவெல்லாம் உன் திருவிளையாடலா? ஏன் என்னை இப்படி சோதிக்கிறாய்? இது தர்மமா”? என்று அழுது கலங்கினாள். வெளியே சென்ற கோனம்மா அப்போது வந்து ரங்கம்மா அழுது கொண்டு நிற்பதைப் பார்த்து “ஏன் அழுகிறாய்? மாப்பிள்ளை வந்தானா? சோறு பரிமாறினாயா?” என்று கேட்டாள். அதற்கு ரங்கம்மா “அம்மா என் தலைவிதியை என் துர்பாக்கியத்தை என்னவென்று சொல்லுவேன்” என்று நடந்ததை எல்லாம் சொன்னாள். அது கேட்ட கோனம்மா அவனை நீ ஏதாவது சொல்லாமலா அவன் சென்றான்? என்று கண்டித்துப் பேசினாள். ரங்கம்மா பதில் பேசாமல் நின்றாள்.

கச்சேரி வேலை முடித்துக் கொண்டு கொண்டம நாயுடு வீட்டிற்கு வந்தபோது ரங்கம்மாளையும் குழந்தைகளையும் காணாது கோனம்மாளைக் கூப்பிட்டுக் கேட்டார். “இன்று மாப்பிள்ளை வந்தாரா” என்று கேட்க, கோனம்மாள் “மாப்பிள்ளை ஊஞ்சப்பாளையம் போய்விட்டார் ஏன் போனார்? என்று ரங்கம்மாளிடம் கேளுங்கள்” என்று சொன்னாள். கொண்டம நாயுடு ரங்கம்மாளை அருகில் அழைத்து “அம்மா என்ன விவரம்? மாப்பிள்ளை ஏன் ஊஞ்சப்பாளையம்

போனார்?" என்று கேட்டார். ரங்கம்மா நடந்தவற்றை சொல்லக் கேட்டு அம்மா, விதி யாரை விட்டது. தேவர்களாயினும் அவதார புருஷர்களாயினும் விதி வழியே தான் நடக்கும்.

"வாழ்வினை நுதவிய மங்கலத்து நாள்
தாழ்வினை யதுவரச் சீரை சாத்தினான்
சூழ்வினை நான்முகத் தொருவற் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ" (கம்பர்)

"கவலைப்படாதே பொறுமையுடன் இரு. ரேணுகை திருவருள் செய்வார்" என்று சமாதானப்படுத்தினார்.

"கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லால் அறியாக் குலமகள் போல்"
(குலசேகர் ஆழ்வார்)

கம்பளியம்பட்டியில் இருந்து சென்ற பேர நாயுடு ஊஞ்சப்பாளையம் சென்று சேர்ந்தார். பேர நாயுடுவைக் கண்ட ஏலம்மா "மகனே! வெயிலில் வியர்வை வடிய ஏன் வந்தாய்? நீ கம்பளியம்பட்டிக்குப் போகவில்லையா?" என்றாள். அதற்குப் பேர நாயுடு "அம்மா நான் இனிமேல் கம்பளியம்பட்டிக்குப் போக மாட்டேன். இன்று அக்கா அங்கில்லை. ரங்கம்மா தான் இருந்தாள். ரங்கம்மாவை என் மனைவியாக பார்க்கவே என்னால் முடியவில்லை அம்மா, ரங்கம்மா நன்றாக ஆடை ஆபரணங்கள் அலங்காரம் செய்துகொண்டு தலையில் பூ வைத்துக்கொண்டு ரேணுகா தேவி போல் உள்ளாள். என்னைக் கண்டு சிரிக்கிறாள். செம்பில் தண்ணீர் கொண்டு வந்து வைத்துவிட்டு சாப்பிட அழைத்தாள். வீட்டிற்குள் சென்றேன், இலைபோட்டு உட்காரச் சொன்னாள் உட்கார்ந்தேன். என் மனநிலையும் உடல்நிலையும் மாறியதை உணர்ந்து நான் வந்து விட்டேன்". என்று சொன்னார்.

சில நாட்களுக்குப் பிறகு கொண்டம நாயுடு கோனம்மாளை

அழைத்து "ரங்கம்மாளுக்கும் மாப்பிள்ளைக்கும் முற்பிறவி தோஷம் இருப்பதால் அவர்கள் மண வாழ்க்கை தடைபடுகிறது. அவர்களைத் திருவரங்கம் அழைத்துச் சென்று காவேரி கொள்ளிட நதிகளில் நீராடி பூஜை செய்தால் நல்லது" என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் நீ ஊஞ்சப்பாளையம் சென்று உன் தாய் தந்தையரிடமும் விவரமாகச் சொல்லி மாப்பிள்ளையை அழைத்துக் கொண்டு வரும்படி அனுப்பினார்.

மறுநாள் கோனம்மா சென்று தன் பெற்றோர்களைப் பார்த்தாள். "அப்பா நமது பேர நாயுடு ஏன் இப்படி நடந்து கொள்கிறான் என்று தெரியவில்லை. நமது வீட்டில் மணம் செய்து வைத்து கொள்ளலாம் என்று நினைத்து அவளுக்கு வந்த மாப்பிள்ளைகளையெல்லாம் தவறவிட்டேன். ரங்கம்மாளைப் போல் அழகு வாய்ந்த பெண் இந்த பிராந்தியத்திலேயே இல்லை. தம்பி நீ ஏதாவது சொல்லி அவள் உன் வார்த்தையைக் கேட்கவில்லையா வேறு குடும்பத்தில் பெண் கொண்டால் உன் குணமறிந்து நடக்கமாட்டார்கள் என்று எண்ணினேன், பாதகமில்லை காலம் மாறும்போது உன் மனநிலை எல்லாம் சரியாகப் போகும். உன்னையும் ரங்கம்மாளையும் திருவரங்கம் அழைத்துச் சென்று முற்பிறவி தோஷ பூஜை செய்ய வேண்டுமாம். உன் மாமனார் உன்னை அழைத்துக் கொண்டு வரச்சொன்னார், புறப்படு" என்றாள். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பேரநாயுடு "அக்கா, நான் வரவில்லை, எனக்குத் தோட்டத்தில் வேலையிருக்கிறது" என்று சொல்லிவிட்டு தோட்டத்திற்குப் புறப்பட்டு விட்டார். நாரப்ப நாயுடு மட்டும் தான் திருவரங்கம் வருவதாக ஒப்புக்கொண்டு கோனம்மாளை அனுப்பினார்.

## *திருவரங்க யாத்திரை*

பின்னர் நம்பூரார் கொண்டம நாயுடு, வெங்கடாத்திரி நாயுடு, உப்பட்ல குலசேகர நாயுடு, துக்கின்னார் நாரப்ப நாயுடு, ஆதூரி ராமி நாயுடு, கோனம்மா, ரங்கம்மா, ஐயப்பன், குழந்தை லட்சுமி

ஆகியோரையும் இன்னும் சிலரையும் அழைத்துக் கொண்டு வண்டிகளில் திருவரங்கத்துக்குப் புறப்பட்டார்கள். இரண்டு நாட்கள் பயணம் செய்து திருவரங்கம் சென்று ஸ்ரீ இராமனுஜ கூடத்தில் தங்கினர். மறுநாள் வெள்ளிக் கிழமை சூரியோதயத்திற்கு முன் எழுந்தனர். அம்மா மண்டபம் படித்துறைக்குச் சென்று காவிரியில் நீராடி வந்து திருவரங்கம் பெரிய கோயில் கோபுரத்தரிசனம் செய்து, கருடாழ்வாரைத் தரிசித்து திருவரங்கநாதர் மூலஸ்தானத்திலுள்ள கோபுர தரிசனம் செய்து பின் திருவரங்கனைத் தரிசித்துத் பிரசாதம் பெற்று சடாரி சூட்டப் பெற்றனர். பின் கிளிமண்டபம், மூன்று வாசல் ஐந்துகுரி தரிசித்து திருவரங்க நாயகியைத் தரிசனம் செய்ய சந்தன குங்குமங்கள் பெற்று மகிழ்ந்து சந்தர புஷ்கரணியையும் ஆயிரங்கால் மண்டபத்தையும் பார்த்து விட்டு திருமடத்திற்குச் சென்றனர். அங்கு அன்னதானங்கள் நடத்திவிட்டு அன்று இரவு தங்கினர். மறு நாள் சனிக்கிழமை அதிகாலையில் கொள்ளிடம் சென்று நீராடி நவக்கிரக பூஜை செய்து தீர்த்தப்பிரசாதம் பெற்று வந்தனர். அன்று இரவு திருவரங்கநாதனின் முத்தங்கி சேவையைத் தரிசனம் செய்தனர்.

மறுநாள் ஜம்புகேசுரம் சென்று வழிபட்டு பின் திருச்சிராப்பள்ளிக்குச் சென்றனர். அங்குதாயுமானவரையும், உச்சிப்பிள்ளையாரையும் தரிசித்தார்கள். பின் கடைவீதியில் வேடிக்கை பார்த்துக் கொண்டு சென்றனர். கொண்டம நாயுடு ஐயப்பனுக்கும் லட்சுமிக்கும் நல்ல பட்டுப் பாவாடைகளும் சொக்காய்களும் வாங்கிக் கொடுத்து ரங்கம்மாளையும் விரும்பியதை வாங்கிக்கொள்ளுமாறு சொன்னார். ரங்கம்மா பாத்திரக் கடைக்குள் சென்று தந்தத்தால் செய்யப்பட்ட நல்ல வேலைப்பாடமைந்த விநாயகர் விக்கிரகத்தையும் நாக சர்பத்தின் தலைமேல் வைத்த தீபக்கம்பத்தையும், தூபக்கிண்ணி, கற்பூரத்தட்டு, ஒற்றைத் தீபம், தீர்த்தப் பஞ்ச பாத்திரம், மணி முதலிய பூஜைக்கு வேண்டிய சாமான்களையும் வாங்கிக் கொண்டாள். வழியில் செல்லும்போது மக்கள் ஓரிடத்தில் கூட்டமாக இருந்தனர்.

அங்கு ரங்கம்மா லட்சுமியுடன் சென்றாள். அங்கே ஒருவன் வீரணம் வாசிக்க மற்றொருவன் பொம்மைகள் காட்டிக் கதைகள் சொல்லிக் கொண்டிருந்தான். பொம்மலாட்டக்காரன், "அதோ பாருங்கள் ராஜகுமாரி எவ்வளவு அழகாக இருக்கிறாள். அதோ மந்திரி குமாரன் காதலிக்கிறான். ராஜகுமாரி அவனை வெறுக்கிறாள். நான் கேட்கும் மூன்று வினாக்களுக்கு விடை அளிப்போரைத் தான் மணந்து கொள்ளுவேன்" என்று சொல்லுகிறாள். அந்தக் கேள்விகள் இன்னதென்றறிந்து மந்திரி குமாரன் காட்டுக்குச் சென்று ஆடு மேய்க்கும் ஓர் இடையனை அழைத்துக் கொண்டு வந்து அவனுக்கு நல்ல ஆடையணிகளை அணிவித்து ராஜகுமாரிக்குத் தன் கைவிரல்களால் குறிகாட்டச் சொல்லிக் கொடுத்து அரச சபையில் இடையன் காட்டிய கைக்குறிகளுக்கு விளக்கம் சொல்லி இராஜகுமாரி இந்த இடையனுக்கு பல அரசர்கள் முன்னிலையில் மாலை அணிவிக்கச் செய்து, திருமணம் நடத்தி வைத்து இராஜ குமாரியைப் பழித்துக் காட்ட இராஜ குமாரி மௌனமாக இருந்து பின் பதிவிரததர்மத்தால் தன் கணவனைப் பல வழிகளில் திருத்திப் பின் காளி தேவியின் பக்தியைச் சொல்லிக் கொடுத்துக் காளி தேவியின் முன் இருவரும் முழங்கால் மண்டியிட்டுத் தேவியை வேண்டினார்கள்" என்றான்.

இந்த ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ரங்கம்மா தன்னை மறந்து நின்றாள். கடைவீதியில் பின்னால் ஐயப்பனுடன் வந்து கொண்டிருந்த கொண்டம நாயுடு ரங்கம்மாளைக் காணாமல் தேடி வந்து கூட்டத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ரங்கம்மா அருகில் சென்று "அம்மா ரங்கம்மா என்ன செய்கிறாய்? உனக்காக எல்லோரும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் ஊருக்குப் புறப்பட நேரமாயிற்று"என்றார். அதைச் செவியுற்ற ரங்கம்மா, "அப்பா அதோ பாருங்கள் அந்தப் பொம்மலாட்டத்தில் மந்திரி மகன் தன் இஷ்டப்படி நடக்க முடியாது என்று சொன்ன ராஜகுமாரியைப் பழி வாங்க எண்ணி ஓர் ஆட்டிடையனுக்கு மணம் செய்து வைக்கிறார்கள். துயர் அடைந்த ராஜகுமாரி தன் கற்புத்தன்மையால் கணவனுக்குப் பலவாறு

பக்தியை ஊட்டி, அதோ பாருங்கள் அப்பா இருவரும் தேவியின் முன் முழங்கால் மண்டியிட்டுத் தியானம் செய்கிறார்கள் இது ஏறக்குறைய என் கதை போல இருக்கிறது. இதன் முடிவை நீங்களும் பாருங்கள்" என்று சொல்லக் கொண்டம நாயுடுவும் இந்த பொம்மலாட்டத்தைப் பார்த்தார். அப்போது தேவி இருவருடைய பக்திக்கும் இரங்கிக் காட்சி கொடுத்து அருளி இடையன் வாயைத் திறக்கச் சொல்லித் தங்க எழுத்தாணியால் நாவில் எழுதி, "இனி நீ வாயைத் திறந்து பாடினால் அது கவியாகும், பேசினால் அது வேத மொழியாகும்" என்று கூறி மறைந்தாள்.

ஞானக்கண் பெற்ற ஆட்டையன் "காளிதாசன்" என அழைக்கப்பட்டான். இதைப் பார்த்த கொண்டம நாயுடு, ரங்கம்மாளிடம் "இந்த பொம்மலாட்டக்காரன் மிகவும் நன்றாகப் பொம்மைகளை ஆட்டிக் கதை சொல்லுகிறான். இவனை நமது ஊருக்கு அழைத்துப்போவோம், பொம்மைகளை ஆட்டிக் கதை சொன்னால் எல்லோரும் ஆனந்தப்படுவார்கள். நீ விரும்பினால் அவனைக் கூட்டிக் கொண்டு வருகிறேன்" என்று பொம்மலாட்டக்காரனிடம் சென்று பேசினார்.

"அப்பா நீ எந்த ஊர்? உன் பெயரென்ன? என்னென்ன கதைகளைச் சொல்லிப் பொம்மைகளை ஆட்டுவாய்" என்று கேட்டார். அதற்கு அவன் "என் ஊர் மாயனூர், கொல்ல வம்சத்தைச் சேர்ந்தவர்கள். இது பரம்பரைத் தொழில் தாய் தந்தையர்கள் சிறு வயதில் காலமாகிவிட்டார்கள் நாங்கள் இருவரும் இத்தொழிலை நடத்தி வாழ்ந்து வருகிறோம் எங்களுக்கு இராமாயணம், பாரதம், காளிதாசன், சாவித்திரி, நளதமயந்தி, ரேணுகை முதலிய கதைகள் தெரியும் என் பெயர் ரங்கராசு, என் சகோதரன் பெயர் கங்கராசு" என்று கூறினான்.

அது கேட்ட கொண்டம நாயுடு "ரங்கராசு என் மகள் ரங்கம்மாள்

இந்த பொம்மலாட்டத்தின் மேல் அதிக ஆசை கொள்வதால் நீங்கள் எங்களுடன் எங்கள் ஊருக்கு வந்தால் உங்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கிறோம். அங்கு உங்கள் கதைக்கும் ஆட்டத்துக்கும் நல்ல வரும்பிடி கிடைக்கும்" என்றார். அப்போது ரங்கராசு "அய்யா நீங்கள் சொல்லுகிறபடி அங்கு நாங்கள் வந்த பிறகு நடக்காவிட்டால் என்ன செய்வது" என்றான். கொண்டம நாயுடு அப்பா நீ அப்படி நினைக்காதே. நாங்கள் கம்மகுலத்துவர்கள். நம்பூரார் வம்சம் ஏருட்ல கோத்திரத்தில் பிறந்த நாங்கள் ஒரு போதும் நம்பினவர்களை மோசம் செய்யமாட்டோம், பொய் பேச மாட்டோம், கொடுத்த வார்த்தை தவறியவர்களுடைய குடும்பம் விருத்தியாகாது, வேளாண்மை பலன் தராது. உங்களை நான் மட்டுமன்று கம்மகுலம் உள்ள அளவும் காப்பாற்றுவோம் என்று உறுதிமொழி கூறிப் புனுகு கொல்ல ரங்கராசு, கங்கராசு ஆகிய இருவரையும் அவர்களுடைய வீரணம் பொம்மைகளோடு அழைத்துக் கொண்டு வந்தார். மறுநாள் புறப்பட்டு இரண்டு நாட்களில் கம்பளியம்பட்டிக்கு வந்து சேர்ந்தார்கள்.

திருவரங்க யாத்திரை சென்று வந்ததன் பொருட்டுப் பந்துக்களை அழைத்துப் பெருமாளுக்கு அபிஷேக ஆராதனை செய்து பிரசாதங்கள் கொடுத்துப் பின் விருந்திட்டுத் திருமண் கொடுத்துக் கொண்டம நாயுடு எல்லோரையும் அனுப்பினார். எல்லோரும் ரங்கம்மாளுக்கு ஆசீர்வாதம் செய்தனர். அப்போது ரங்கராசு ரேணுகையின் கதைகளைச் சொல்லி பொம்மைகளை ஆட்டினான். வீரண வாத்தியத்தை முழக்கினார்கள். கதையையும் ஆட்டத்தையும் வாத்தியத்தையும் பார்த்த பெரியவர்கள் ரங்கராசுவுக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டிவிட்டுச் சென்றனர்.

அன்று முதல் புனுகு கொல்ல ரங்கராசு கம்மகுலத்தவர்கள் வாழும் பல ஊர்களுக்கும் சென்று பொம்மலாட்டம் காட்டி வீரணம் வாசித்து வந்தான். கொண்டம நாயுடு தான் சொன்னபடியே ரங்கராசுக்கு குடியிருக்க வீடும் விவசாயம் செய்ய நிலமும் கொடுத்துக்

கோயில்களில் வீரணம் வாசிக்க ஏற்பாடு செய்தார்.

திருவரங்க யாத்திரை சென்று வந்த பிறகு ரங்கம்மா நாள் தோறும் ரேணுகை, அங்காள தேவதைகளுக்குப் பூஜைசெய்து வழிபட்டுத் “தாயே என்னையேன் சோதிக்கிறீர்கள் என் கணவர் என்னுடன் பேசும்படியாக நான் எவ்வளவு முயன்றும் முடியவில்லை, என்னைக் கண்ணெடுத்தே பார்க்கமாட்டேன் என்கிறார் காரணம் தெரியவில்லை. அவர் என்னுடன் சேர்ந்து வாழ்வு நடத்த நீ திருவருள் செய்யலாகாதா?” என்று முறையிட்டு வந்தாள்.

சில தினங்களுக்குப் பிறகு துக்கின்னார் நாரப்ப நாயுடு தன் சகோதரர் கிருஷ்ணமநாயுடுவை அழைத்து ரங்கம்மாளை ஊஞ்சப்பாளையம் அழைத்துவர வேண்டி ஆலோசனை செய்தார். முடிவில் துரைகிருஷ்ணம நாயுடுவை அனுப்பி ரங்கம்மாளை அழைத்துக்கொண்டு வர ஏற்பாடு செய்தார். அவரும் கம்பளியம்பட்டிக்குச் சென்று கொண்டம நாயுடுவிடமும் கோனம்மமாளிடமும் பேசி, ரங்கம்மாளை குடித்தனம் நடத்த ஊஞ்சப்பாளையம் அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள்.

கொண்டம நாயுடு “அம்மா நீ இனிமேல் ஊஞ்சப்பாளையம் சென்று குடித்தனம் நடத்த வேண்டும். உனது மாமனாரிடமிருந்து அழைப்பு வந்திருக்கிறது. நீ அங்கு சென்று மாமன் மாமி சொன்னபடி நடந்து மாப்பிள்ளையை நல்வழிப்படுத்திக் கொள்வாயாக. மேலும் நீ எல்லாம் தெரிந்தவள். பிறந்த இடத்திற்கும் புகுந்த இடத்திற்கும் புகழ் பெருக நடந்து கொள்” என்று புத்திமதிகள் கூறிச் சகல சீர் வரிசைகளுடன் ரங்கம்மாளை ஊஞ்சப்பாளையம் அனுப்பி வைத்தார்.

ஊஞ்சப்பாளையம் சென்று சேர்ந்த ரங்கம்மா தன் மாமனாருக்கும் மாமியாருக்கும் பாதங்களில் நமஸ்காரம் செய்துவிட்டு வீட்டிற்குள்

சென்றாள். அன்று முதல் ரங்கம்மா நாள்தோறும் அதிகாலையில் எழுந்து நீராடி ரேணுகை பூஜை செய்து முடித்துவிட்டு வீட்டு வேலைகளை ஒழுங்காகச் செய்தாள். மாமியார் சொல் கேட்டு அதன்படி நடந்து வந்தாள். இருந்தாலும் தான் ஊஞ்சப்பாளையம் வந்து பதினைந்து நாட்களாகியும் தன் கணவரைப் பார்க்க முடியவில்லையே, அவர் வீட்டுக்கு வரவில்லையே என்று வருந்தினாள். இதை யாரிடம் சொல்வது, என்ன செய்வது என்று எண்ணி மனம் நொந்து ரேணுகை நோன்பிருப்பது என்று தீர்மானம் செய்து கொண்டாள். அன்று மாமியார் ஏலம்மா தோட்டத்திற்குச் சோறு கொண்டு போய் விட்டாள். அது நல்ல சமயமென்று பூஜையறையில் அமர்ந்து பூஜை செய்தாள். "ரேணுகா அம்மையே! இந்தப் பிறவியில் ஏன் எனக்குக் குடும்ப வாழ்க்கை இல்லாமல் செய்கிறாய். அதையாவது என்னிடம் சொல்லிவிட்டால் நான் நிம்மதியாக இருப்பேன்" என்று பலவாறு வாய்விட்டுக் கதறி அழுது பின் தன்னை மறந்து அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

## *ஏலம்மா துவேஷம்*

தோட்டத்திற்கு சோறு கொண்டு போன ஏலம்மா திரும்பி வந்தாள். கதவுகள் திறந்து வைத்திருந்தன. ரங்கம்மாளைக் கூப்பிட்டுப் பார்த்தாள். பதில் இல்லை. பூஜையறையில் கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் இருந்த ரங்கம்மா அருகில் சென்று பார்த்தாள், ஆடாமல் அசையாமல் இருந்த ரங்கம்மாளைத் தட்டி எழுப்பி "என்னடியம்மா நன்றாக இருக்கிறது உன் வேலை, கதவுகளையெல்லாம் திறந்து போட்டுவிட்டுப் பட்டப்பகலில் பூஜையறையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாய். நீ பூஜை செய்துதான் அவனை வீட்டிற்குக்கூட வராமல் செய்து விட்டாயா? குடும்பப் பெண்களுக்குப் பூஜை என்ன வேண்டியிருக்கிறது? எழுந்து போ அப்பால், நாளை முதல் நீ வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு தோட்டத்திற்கு சோறு கொண்டுபோக வேண்டும்" என்று சொன்னாள். ரங்கம்மாள் மறு மொழி பேசாமல் மனம் கலங்கி எழுந்து அப்பால் சென்றாள். மறுநாள் அதிகவேகமாக வீட்டு வேலைகளைச் செய்து

முடித்து மாமனாருக்கும் மாமியாருக்கும் உணவு பரிமாறிவிட்டு தன் கணவன் பேர நாயுடுவுக்கு உணவைக் கூடையில் வைத்துத் தலைமேல் வைத்துக் கொண்டு தோட்டத்திற்குச் சென்றாள்.

தோட்டத்துக் கிணற்றில் பேர நாயுடுவும் மாதாரி சின்னானும் கவலை இறைத்துக் கொண்டிருந்தார்கள். ரங்கம்மாள் கூடையைத் தலையில் வைத்துக் கொண்டு வருவதைப் பார்த்த பேர நாயுடு “அடே சின்னா, ரங்கம்மா சாப்பாட்டுக் கூடையுடன் வருகிறாள். அம்மா எங்கே போனார்களோ தெரியவில்லை, அவளைக் கண்டாலே எனக்கு ரேணுகா தேவி போல் இருக்கிறாள். நான் பெரிய வாய்க்காலில் தண்ணீர் எவ்வளவு பாய்கிறது என்று பார்த்துவிட்டு வருகிறேன். ரங்கம்மா இங்கு வந்தால் சாப்பாட்டைச் சாளையில் வைத்துவிட்டு வீட்டிற்குப் போகச் சொல்லி அனுப்பிவிடு” என்று சொல்லிவிட்டு விருவிரு என்று பெரிய வாய்க்காலின் வழியே சென்றார். சாப்பாட்டுக் கூடையை தலைமேல் வைத்துக் கொண்டு இன்றைக்கு எப்படியும் கணவருடன் பேசலாம் என்ற மகிழ்ச்சியோடு தோட்டத்துக் கிணற்றருகில் வந்து கவலை இறைத்துக் கொண்டிருந்த மாதாரியிடம், “சின்னப் பண்ணாடி எங்கே?” என்று கேட்டாள்.

மாதாரி, “சாமி அவுங்கோ இப்போதுதானுங்கோ சோளக்காட்டில் தண்ணீர் பார்க்கப் போனாங்கோ. சாப்பாட்டுக் கூடையை சாளையில் வைத்துவிட்டு உங்களைப் போகச் சொன்னாங்கோ” என்றான். அதைக் கேட்ட ரங்கம்மா, “மாதாரி நான் அங்கேயே சென்று உணவு பரிமாறிவிட்டு வருகிறேன்”, என்று சாப்பாட்டுக் கூடையுடன் பெரிய வாய்க்கால் வழியே சென்றாள். பெரிய வாய்க்கால் வழியே ரங்கம்மா வருவதை தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த பேர நாயுடு, நான் சாப்பாட்டுக் கூடையைச் சாளையில் வைத்துவிட்டுப் போகச் சொல்லி வந்தேன், ரங்கம்மா இங்கு வருகிறாளே, ரேணுகா தேவியே சாப்பாடு கூடையுடன் வருவது போல் தெரிந்தது. ரங்கம்மாளைப் பார்த்து, “உன்னை யார் இங்கே வரச் சொன்னது? சாப்பாட்டைச்

சாளையில் வைத்துவிட்டுப் போகும்படி மாதாரி சொல்லவில்லையா? என்று கோபத்தோடு சொன்ன கணவனைப் பார்த்து "அய்யா! நீங்கள் ஏன் இப்படி கோபித்துக் கொள்கிறீர்கள். உங்களுக்கு நான் என்ன குற்றம் செய்து விட்டேன். நான் ஊஞ்சப்பாளையம் வந்து பதினாறு நாட்கள் ஆகிவிட்டன. நீங்கள் வீட்டிற்கு வரவே இல்லை. பெண்களுக்கு கணவனைவிட யார் இருக்கிறார்கள், வாருங்கள் சோறு பரிமாறுகிறேன், சாயங்காலம் வீட்டிற்கு வாருங்கள் கல்யாணம் ஆனதுமுதல் நீங்கள் என்னையேன் வெறுக்கிறீர்கள்?" என்றாள்.

"வாளால் அறுத்து சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் (குலசேகர் ஆழ்வார்)

கண்ணீர் விட்டுக் கொண்டு சாளைக்கு வந்து சாப்பாட்டுக் கூடையைச் சாளையில் வைத்துவிட்டு ரேணுகையைத் தியானித்தபடி தலைவிரி கோலத்துடன் அலங்கோலமாக கண் கலங்கி வீடு வந்து சேர்ந்தாள்.

வீட்டில் தயிர் கடைந்து கொண்டிருந்த ஏலம்மா அலங்கோலமாக வந்த ரங்கம்மாளைப் பார்த்தாள். "ஏண்டி இப்படி வருகிறாய்? சாப்பாடு கொண்டு போனவள் எங்கு போனாய்? சாப்பாட்டுக் கூடை எங்கே! என் மகன் சாப்பிட்டானா? உன் மேல் ரத்தம் வழிகிறதே என்னடி பேசாமல் நிற்கிறாய்? பதில் சொல்லடி" என்று தயிர் மத்தால் இடித்தாள். மத்தினால் இடிக்கப்பட்ட ரங்கம்மா உணர்வடைந்து "அம்மா நான் என்ன செய்வேன் தோட்டத்திற்கு சாப்பாடு கொண்டு போனேன். அவர் அங்கு இல்லை, சாப்பாட்டுக்கூடையை சாளையில் வைத்து விட்டுப் போகும்படி மாதாரி சின்னான் சொன்னான். அதன்படி சாப்பாட்டை சாளையில் வைத்துவிட்டு வந்தேன். வரும்வழியில் நம் தோட்டத்து கால்வாய் அருகில் தொக்கடத்தின் மேல் ஒரு நாகப்பாம்பு இருப்பதைப் பார்க்காமல் அருகே சென்று விட்டேன். அந்த பாம்பு கோபத்தோடு சீறிக் கொண்டு வந்தது. நான் தப்பித்துக் கொள்ள வேண்டி முட்புதர்களுக்குள் புகுந்து ஓடி வந்தேன். முட்கள்

பட்டுக் காயங்கள் ஆகி ரத்தம் வந்து விட்டது" என்றாள். அது கேட்ட ஏலம்மா "ஏண்டி பாம்பு துரத்தி புதரில் புகுந்து வந்தேன் என்று என்னை ஏமாற்றவா பார்க்கிறாய். எங்கோ விழுந்து எழுந்து வந்து பொய் சொல்லுகிறாய், உண்மையைச் சொல். நீ ஊஞ்சப்பாளையம் வந்தது முதல் பேரையன் நீ இருக்கிறாய் என்று வீட்டிற்கு வருவதில்லை, உன்னையாவது அவனிடம் அனுப்பிக் குடும்பம் நடத்த வகைசெய்யலாமென்று அனுப்பினால் நீ இந்தக் கோலத்துடன் வந்திருக்கிறாய். ஏன் மௌனம் சாதிக்கிறாய்? நீ சொல்வது உண்மையானால் எனக்கு அந்தப் பாம்பைக் காட்டு. இல்லாவிட்டால் நான் நம்பமாட்டேன்" என்று கண்களில் தீப்பொறி பறக்க உரக்கக் கூறினாள்.

## *ரேணுகா காட்சி அளித்தல்*

சிறிது நேரம் யோசனை செய்த ரங்கம்மா "அம்மா கோபம் வேண்டாம் வாருங்கள். அந்தப் பாம்பைக் காட்டுகிறேன்" என்று ஏலம்மாளை அழைத்துக் கொண்டு வீதி வழியே செல்கையில் அக்கம்பக்கத்தார்கள் அனைவரும் அவர்களைத் தொடர்ந்து சென்றார்கள். போகும்போது ரங்கம்மா தனக்குள்ளாக "தாயே ரேணுகா ஆபத்து காலத்தில் காப்பாற்றுவாய் தாயே. இப்பூலக வாழ்க்கை கடந்து செல்ல எனக்கு வழிகாட்டுவாய், இன்று எனக்கு அருள் புரிந்து என் மேல் ஏற்பட்டுள்ள சந்தேகத்தைப் போக்குவாய் ரேணுகா பராசக்தி, பரஞ்சோதி, ஜமதக்கினிப்பிரியே" என்று தியானம் செய்து கொண்டே சென்றாள். தொக்கடத்தருகில் சென்று "அதோ பாருங்கள் அந்தப் பாம்பு இன்னமும் அங்கேயே தான் இருக்கிறது என்று துக்கின்னார் ஏலம்மாளுக்கு காட்டினாள். புதரினில் இருந்த பாம்பு தன் படத்தை விரித்துக் கொண்டும் சீறிக்கொண்டும் தொக்கடத்தின் மேல் வந்து நாலாப்பக்கமும் திரும்பி ஏலம்மா இருந்த திசையில் நாவை நீட்டிக் கொக்கரித்தது, அதைக் கண்டு ஏலம்மா பயந்து ஓடினாள். வேடிக்கை பார்க்க வந்தவர்களும் ஒருவர் பின் ஒருவராக ஓடித் தூரத்தில் நின்று

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்தப் பாம்பு தன் படத்தைச் சுறுக்கிக் கொண்டு நினைவிழந்து நிற்கும் ரங்கம்மாளுக்கு அருகில் வந்து வலமாக சுற்றி புதருக்குள் ஓடி மறைந்தது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஏலம்மா, ரங்கம்மாளை பாம்பு கடித்துச் சென்றுவிட்டது என்று தீர்மானித்து மெதுவாக பயந்து பயந்து புதரைப் பார்த்தபடியே ரங்கம்மா அருகில் சென்று "ரங்கம்மா ஏன் இப்படி நிற்கிறாய், அந்தப் பாம்பு உன்னைக் கடித்துவிட்டதா? நீ சொன்னது பொய் என்றல்லவா நினைத்துவிட்டேன். வா வீட்டிற்கு போவோம்" என்று ரங்கம்மாளை அழைத்துக் கொண்டு வீடு சென்று சேர்ந்தாள். வேடிக்கை பார்க்க வந்தவர்களால் அங்கு நடந்த செய்தி ஊர் முழுவதும் பரவிற்று. ஊரார் ரங்கம்மாளின் தெய்வீக சக்தியை புகழ்ந்து பேசினார்கள். தெய்வ கன்னிகை ரங்கம்மாள் போன்ற ஒரு பெண் வீட்டில் இருந்தால் லட்சுமி கடாட்சம் உண்டாகும். கோபக்கார ஏலம்மாளிடம் இவள் எப்படி குடித்தனம் நடத்துவாளோ? பின்னால் தான் எல்லாம் தெரியும் என்று பலவாறு புகழ்ந்து பேசினர்.

ரங்கம்மா ஏலம்மாளுக்கு பாம்பைக் (ரேணுகாவை) காட்டிவிட்டு வீட்டுக்கு வந்து உடல்வலியால் பேசாமல் படுத்துக் கொண்டாள். (கம்ம குல தெய்வ கோவில்களில் தேவரு இல்லு என்று ரேணுகாவிற்கு தனி கோவில் இருக்கும். ஆனால் ரங்கம்மாவிற்கு ரேணுகா தொக்கடாவில் காட்சி தந்ததால் நமது கோவிலில் தேவரு இல்லு என்று தனியாக இல்லை) துக்கின்னார் நாரப்ப நாயுடு கச்சேரியிலிருந்து வீட்டிற்கு வரும்போது வழியில் அன்று நடந்த நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டு வியந்து வீட்டிற்கு வேகமாக சென்று ஏலம்மாளை அழைத்து விவரம் தெரிந்து கொண்டார். பின் ரங்கம்மாளிடம் சென்று "இனி மேல் தனியாக தோட்டத்திற்கு செல்லக் கூடாது, வீட்டு வேலைகளை செய்து கொண்டு வீட்டிலேயே இரு" என்று ஆறுதல் கூறினார்.

மறுநாட்காலையில் வழக்கம்போல மாதாரி வீட்டிற்கு வந்தான். அப்போது ஏலம்மா "அடே சென்னி! நேற்று ரங்கம்மா தோட்டத்திற்கு

சோறு கொண்டு வந்தாளே, அதை நமது சின்னப்பண்ணாடி சாப்பிட்டானா" என்று கேட்டாள். மாதாரி, அம்மா அதை எப்படிச் சொல்றதுங்கோ! கம்பளியம்பட்டி அம்மா கூடையுடன் வருவதைப் பார்த்து நமது சின்னப்பண்ணாடி அவள் வந்தா சாப்பாட்டுக் கூடையை சாளையில் வைத்துவிட்டுப் போகச் சொல் என்று என்னிடம் சொல்லிவிட்டு சோளக்காட்டு பெரிய வாயக்கால் வழியே போனாங்கோ, அம்மா வந்து கேட்டாங்கோ, சின்னப்பண்ணாடி சாளையில் கூடையை வைத்துவிட்டு உங்களை வீட்டுக்குப் போகச் சொன்னாங்கோ என்று சொன்னேனுங்கோ, ரங்கம்மா, அடே சென்னி! நானே அங்கேபோய் என் கையால் அவருக்குச் சாப்பாடு கொடுக்கிறேன் என்று பெரிய வாய்க்கால் வழியே போனாங்கோ. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வந்து கூடையைச் சாளையில் வைத்துவிட்டு வந்துட்டாங்கோ. அதுக்குப்பிறகு சின்னப்பண்ணாடி வந்தாங்கோ! என்று சொன்னாள்.

இதைக் கேட்ட ஏலம்மா ரங்கம்மாளைக் கூப்பிட்டு "ரங்கம்மா நேற்று நீ என்னிடம் பொய் சொல்லி ஏமாற்றிவிட்டாயே? நீ பாம்பு துரத்தி வந்தது, புதருக்குள் ஓடியதால் காயங்கள் பட்டன என்று சொன்னதும் அல்லாமல் மந்திரம் போட்டு பாம்பையும் காட்டினாய். நீ ஒரு குடும்பப் பெண்ணா? உன்னை நான் வீட்டில் வைத்துக் கொண்டு எப்படிக் குடித்தனம் நடத்துவேன். நீ தினந்தோறும் பூஜை செய்து கொண்டிருக்கிறாய். பேரையன் நீ வீட்டில் இருக்கும் வரை வீட்டிற்கு வருவதில்லை என்று சொல்லுகிறான். நான் எப்படியாவது அவன் மனத்தை மாற்று என்று தோட்டத்திற்கு சோறு கொண்டு போகச் சொன்னேன். போன இடத்தில் என்ன பேசி வந்தாய்? இதோ பார், நீ செய்யும் பூஜையெல்லாம் நிறுத்தி விடு, வீட்டு வேலைகளை ஒழுங்காகச் செய் போ. இந்தக் குடத்தை எடுத்துக் கொண்டு போய் நல்ல தண்ணீர் கொண்டு வா" என்று அனுப்பினாள்.

குடத்தை எடுத்துக் கொண்ட ரங்கம்மா தன் விதியை நினைத்து வருந்தி, வாழ்க்கையை எண்ணி ஏங்கி, மனம் நொந்தவளாய் ரேணுகையை துதித்தவாறு கிணற்றில் இறங்கிக் குளித்தாள் அருள் நிலை பெற்றாள், ஆடிப்பாடினாள், கிணற்றை விட்டு மேலே ஏறி வந்து விநாயகரை வணங்கினாள். உணர்விழந்து மரத்தின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு கிலாரித்து கைதட்டிப் பாடினாள். பலதடவை கிணற்றில் இறங்கிக் குளித்துவிட்டு மரத்தின் மேல் ஏறினாள். ஏலம்மா மருமகளுக்கு பிசாசு பிடித்துக் கொண்டு விட்டது என்று சிலர் கூடி வேடிக்கை பார்த்தார்கள். சில குழந்தைகள் ஓடிச் சென்று ஏலம்மாளை அழைத்து வந்து காட்டினார்கள். ஊரில் இருந்தோர் அனைவரும் கிணற்றருகே கூடிவிட்டார்கள்.

## *ரேணுகாவின் அருளை ரங்கம்மா வெளிபடுத்துதல்*

துக்கின்னார் நாரப்ப நாயுடு பெருந்துறையில் கச்சேரி வேலைகளை முடித்துக் கொண்டு குதிரை மேல் ஏறி ஊஞ்சப்பாளையம் வந்து கொண்டிருந்தார். ஊர்ப் புறத்தே நல்ல தண்ணீர் கிணற்றருகே வெள்ளை வேலாமரத்தருகே மக்கள் கூட்டமாக இருப்பதைப் பார்த்துக் குதிரையை விட்டிறங்கி அங்கு என்ன கூட்டம்?" என்று விசாரித்தார். அங்குள்ளோரில் ஒருவன், "அய்யா, உங்கள் மருமகள் வெள்ளை வேலாமரத்தின் மேல் ஏறிக் கொண்டு பாடுகிறாள், ஆடுகிறாள்" என்றான். அதைக் கேட்ட நாரப்ப நாயுடு தாங்காத வேதனையோடு மரத்தருகே சென்று பார்த்து "ரங்கம்மா இறங்கி வா" என்றார்.

இதைக் கேட்ட ரங்கம்மா "ஏன் மாமா என்னைக் கூப்பிடுகிறீர்கள். நான் உலகில் பிறந்த காரியம் இன்னமும் கொஞ்சம் பாக்கி இருக்கிறது. அதையும் நீங்கள் கூடிய சீக்கிரம் தெரிந்து கொள்வீர்கள். நான் யார்? எனக்கு என்ன சக்தி இருக்கிறது என்பதை நீங்கள் அறிய வேண்டுமானால் தங்கள் அங்கவஸ்திரத்தைக் கீழே விரியுங்கள்"

என்றாள். பக்கத்திலிருந்தவர்கள் தூண்டுதலால் துக்கின்னார் நாரப்ப நாயுடு அங்கவஸ்திரத்தைக் கீழே விரித்தார். மரத்தின் மேல் இருந்து ரேணுகை (எல்லம்மா) அருளால் மல்லி, முல்லை, அரளி, கஸ்தூரி மஞ்சள், எலுமிச்சை ஆகியவை குபு குபு என்று பொழிந்தன. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் இதைக் கண்டு பெருவியப்புக் கொண்டனர். அதன் பின் ரங்கம்மா "மாமா இந்தப் பிரசாதத்தை எடுத்து அனைவருக்கும் கொடுங்கள்" என்றாள். இதையெல்லாம் பார்த்த நாரப்பநாயுடு வியந்து, "ரங்கம்மா இதுவரை உனது மகிமை எனக்குத் தெரியவில்லை. போதும் எல்லாம் இப்போது அறிந்து கொண்டேன், கீழே இறங்கி வா" என்றார். மரத்தின் மேலிருந்த ரங்கம்மா கீழே இறங்கினாள். நாரப்ப நாயுடுவின் பாதங்களை வணங்கினாள் தலைகுனிந்து நின்றாள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஏலம்மா அடக்க முடியாத கோபங்கொண்டு பற்களை நற நறவென்று கடித்து முகத்தைச் சுழித்துக் கொண்டு அங்கு நின்றாள். அதன் பிறகு நாரப்ப நாயுடு ரங்கம்மாளைப் பார்த்து "அம்மா! ரங்கம்மா நீ இனிமேல் வீட்டைவிட்டு வெளியே எங்கும் போகாதே. உன் விருப்பம்போல் பூஜைகள் செய்து விட்டு வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொள்" என்றார். இதை அருகிலிருந்து கேட்ட ஏலம்மா "இவள் வீட்டில் இருக்கும் வரைக்கும் பேரையன் வீட்டிற்கு வருவதில்லை என்று சொல்கிறான். நீங்களோ இவளை வீட்டில் பூஜைகள் செய்து கொண்டிருக்கச் சொல்கிறீர்கள். இன்று முதல் நீங்களும் உங்கள் மருமகளும் இந்த வீட்டில் இருந்து கொண்டு குடித்தனம் நடத்திக் கொள்ளுங்கள், நான் என் மகனை அழைத்துக் கொண்டு பிறந்த வீட்டிற்குப் போய்விடுகிறேன்" என்று பேசினாள்.

இதைக் கேட்ட ரங்கம்மா அத்தையின் பேச்சால் மனமுடைந்து "மாமா! என்னால் உங்கள் குமாரனும், அத்தையும் இந்த வீட்டை விட்டுப் போக வேண்டாம். இனிமேல் இந்தப் பிறவியில் எனக்கு இல்வாழ்க்கை கிடையாது. நான் இனிமேல் ஊஞ்சப்பாளையத்தில் இருக்கக் கூடாது.

நான் கம்பளியம்பட்டிக்குப் போக உத்தரவு கொடுங்கள். குடும்ப வாழ்க்கை நடத்த நான் கூடிய வரை முயன்றும் விதி வசத்தால் பலன் கிடைக்கவில்லை. நான் என் ஆவி இருக்கும் வரைக்கும் பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் பழிவராமல் நடந்துகொள்வேன். மாமா தாங்கள் தாமதம் செய்யாமல் எனக்கு தாம்பூலம் கொடுத்தனுப்புங்கள்" என்று பலவாறு சொல்லித் துக்கின்னார் நாரப்ப நாயுடுவிடம் தாம்பூலம் பெற்றுக் கொண்டு நாரப்ப நாயுடுவையும் ஏலம்மாவையும் வணங்கி விடைபெற்றாள்.

## *ரங்கம்மா கம்பளியம்பட்டி திரும்புதல்*

அப்போது நாரப்ப நாயுடு "அம்மா ரங்கம்மா நீ துணையின்றி செல்லலாகாது வண்டியில் ஏறிக் கொண்டு ஊருக்குச் செல். துணையின்றி சென்றால் உன் தந்தை என்ன நினைத்துக்கொள்வார்?" என்று கூறினார். அதற்கு ரங்கம்மாள், "மாமா நான் துணையோடு சென்றாலே அங்கு உங்களை பலவாறு பேசுவார்கள். எனக்குத் திருடர் பயமோ, நாசகாரர் பயமோ இல்லை என் அன்னை ரேணுகை எனக்குத் துணையாக இருந்து காப்பாற்றுவாள்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள். கம்பளியம்பட்டி இட்டேரி வழியில் செல்லுகையில் ரங்கம்மாவின் மேல் வெயில் படவில்லை, காலில் முள் தைக்கவில்லை. மெல்ல நடந்து வரும்போது ஒரு பெரிய கற்பாறையின் மீது அமர்ந்தாள். துக்கின்னாருடைய வெற்றிலை பாக்கை நம்பூரார் நகரத்திற்குக் கொண்டு போகக்கூடாது என்று எண்ணி, தான் கொணர்ந்த வெற்றிலை பாக்கை மென்று ரேணுகையை நினைத்துக் கொண்டு ஐந்து உருண்டைகளாக துப்பினாள். "ஏருட்ல கோத்திரம் நம்பூரார் வீட்டில் பிறந்து பீமார்ப்ப கோத்திரம் துக்கின்னார் வீட்டில் புகுந்து இல்வாழ்க்கை வாழக் கதியில்லாத எனக்குத் துக்கின்னார் கொடுத்த வெற்றிலை பாக்கை மென்று துப்பிய இந்த உருண்டைகள், துக்கின்னார் கண்களுக்குத் தாம்பூல உருண்டைகளாகத் தெரியக்கூடாது. வேறு எவருக்கானாலும் இவை

ஐந்து கற்களாகத் தெரியட்டும்” என்று சொல்லிப் பேசிக் கொண்டு மெதுவாக நகர்ந்தாள். உப்பாற்றின் அருகே சென்று “ரேணுகா தேவி நான் பிறந்த வீட்டிற்குச் செல்வதற்கு நீராட வேண்டும், உப்பாற்றில் தண்ணீர் பொங்க வேண்டும்” என்று தோத்திரம் செய்த போது நீர் பொங்கிப் பாய்ந்தது. அதைக் கண்டு ரங்கம்மா உளம் மிக மகிழ்ந்து குதூகலமாக மேலெழுந்து மகிழ்ந்து குதித்துக் கூத்தாடி நீராடி விட்டு ஆரவாரித்து ஆடிக் கொண்டும் பாடிக்கொண்டும் கம்பளியம்பட்டிக்குச் சென்று சேர்ந்தாள். கம்பளியம்பட்டிக் குழந்தைகள் இதனைக் கண்டு ஆச்சர்யப்பட்டு ஓடிச் சென்று கோனம்மாளிடம், “கோனம்மா உங்கள் ரங்கம்மா, ஆடிக் கொண்டும் பாடிக்கொண்டும், கூவிக் கொண்டும் கிலாரித்துக் கொண்டும் ஊர்த் தலைவாயிலில் இருக்கிறாள், வந்து பாருங்கள்” என்று சொன்னார்கள். அதைக் கேட்ட கோனம்மா ஆச்சர்யப்பட்டு விரைவாக நடந்து சென்று தன் மகள் ரங்கம்மாவைக் கண்டு “ரங்கம்மா இது என்ன கோலம்! இந்தக் கடும் வெயிலில் எவர் துணையுமில்லாமல் வந்தகாரணமென்ன? சொல்லம்மா, வீட்டிற்கு சீக்கிரம் நட நட” என்று சொல்லி ரங்கம்மாளை வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்தாள்.

மாலையில் கொண்டம நாயுடுவும் வீடு வந்தபோது ரங்கம்மா வீட்டிலிருப்பதை அறிந்து ரங்கம்மாளை அழைத்து நலங்கள் விசாரிக்க ரங்கம்மா தன் தந்தையாரிடமும் சிறிய தாயாரிடமும் ஊஞ்சப்பாளையம் சென்றது முதல் இங்கு வந்தது வரை நடந்தவற்றை எல்லாம் சொன்னாள், கொண்டம நாயுடு இரக்கத்தோடு கேட்டு ரங்கம்மாளுக்கு ஆறுதல் வார்த்தைகள் பகர்ந்தார். “ரங்கம்மா விதியை வெல்ல யாராலும் முடியாது.

“அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன ஆவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னை யொருவர் கடவுரைந்த
பழுதாற் பயனென்ன நன்மையும் தீமையும் பங்கயத்தோன்
எழுதாப்படி வருமோ சலியா திரு என் ஏழை நெஞ்சே”

“என்று பட்டினத்தடிகள் தன் மனத்துக் கூறுவது போல நீயும் உன் விதியின் வலிமையை எண்ணி வருவதை அனுபவிக்க வேண்டியதுதான். அவரவர் வினையளவுக்கே அவரவர் யோகம், அதனால் யாருக்கும் எவரும் துணையாக இருந்து நல்லது செய்ய முடியாது. நீயும் கணவனும் நேர்படினும் விதியின் பயனே பயன்! என்று ஔவையாரும் கூறுகிறார். கற்பகமரத்தடியில் சென்றவன் எட்டிப் பழத்தை விரும்பினானாயின் அது அவன் முற்பிறப்பில் செய்த வினையே. எல்லாம் எனையாளும் ஈசன் செயல் என்று எண்ணுக! வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்த வரிது” என்பது திருவள்ளுவ நாயனார் கூறும் பேருண்மை. ஆகையால் இல் வாழ்வில் இன்பம் கிட்டவில்லை என்று மனம் கலங்காது மனம் அமைதியுறுக, கவலை நீங்கி ஐயப்பனுடனும் லட்சுமியுடனும் இரு. ஆக வேண்டியதை பின்னால் நான் கவனித்துக் கொள்கிறேன்” என்றார்.

அன்று முதல் ரங்கம்மா அதிகாலையில் எழுந்து வீட்டுவேலைகளைக் கவனமாகச் செய்து குழந்தைகளை நல்ல முறையில் கவனித்துக் கொண்டு வந்தாள். தாயார் கோனம்மாவின் மனம் கோணாமல் நடந்து வந்தாள். ரங்கம்மா தன் விதியைப் பற்றிச் சில நாள் சிந்தித்துக் கடைசியில் பக்தியில் ஈடுபட்டு பொது மக்களுக்கு நற்போதனைகளையும், புராண இதிகாசங்களையும் எடுத்துச் சொல்லி அவர்களின் அன்புக்குப் பாத்திரமானாள். ரேணுகையின் அருளால் திருமணத்திற்கு முன் செய்தது போலக் குழந்தைகள், மாடு, கன்றுகளுக்கு வரும் வியாதிகளைக் கஸ்தூரி மஞ்சள், அரளிக் கொம்பால் மந்திரித்துக் குணப்படுத்தி நல்ல பெயரும் புகழும் பெற்றாள்.

இவ்வாறிருக்கும் போது ஒரு நாள் ஊஞ்சப்பாளையம் தோட்டத்தில் பேர நாயுடுவும் மாதாரி சென்னியும் கவலை இறைத்துக் கொண்டிருந்தனர். சென்னி, பேர நாயுடுவிடம், “சாமி! நம்ம செவலை மாடு இரண்டு நாட்களாக சரியாகத் தீவனம் உண்பதில்லை தண்ணீரும்

குடிப்பதில்லை, பாலும் கறக்கறது இல்லை. கம்பளியம்பட்டிக்குக் கொண்டு போய் அந்த அம்மா அவங்ககிட்டே காட்டி மந்திரித்து வந்தா நல்லாப் போயிடுங்கோ” என்றான்.

பேரநாயுடு “அது யாருடா அந்த அம்மா” என்றார். மாதாரி “சாமி நம்ம ரங்கம்மா பண்ணாடிச்சி தானுங்கோ” என்றான்.

பேர நாயுடு, “ஏண்டா சென்னி, ரங்கம்மா பேச்சே பேசாதே என்று சொன்னால் நீ கேட்பதில்லை. ரங்கம்மா கம்பளியம்பட்டிக்கு போய் விட்டாள். என் மாமனார் சொன்னது போல் முற்பிறவி தோஷம் ஏதோ இருக்கிறது என்றார்” வேதனையுடன்!

## *பேரநாயுடு இயற்கை எய்தல்*

ஒரு நாள் தோட்டத்துக களத்தில் கம்பு தாம்படித்துத் தூற்றிக் கொண்டிருந்தான் மாதாரி சென்னி. கம்பு தாம்படித்துத் தூற்றுவதால் அன்று துக்கின்னார் நாரப்ப நாயுடுவும் வந்து களத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார். பேர நாயுடு கிணற்று மேட்டில் உட்கார்ந்து கொண்டு சாட்டை வார் திரித்துக் கொண்டிருந்தார்.

அப்போது மாதாரி சென்னி சமயம் பார்த்து நல்ல கம்பு நான்கு கூடைகள் எடுத்துக் கொண்டு போய்த் தூற்றின பொட்டில் போட்டு மூடினான். இதைப் பேர நாயுடு தூரத்தில் இருந்து பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது பார்க்காதவரைப் போல இருந்தார்.

களத்து வேலை முடிந்தது, நாரப்ப நாயுடு சென்னிக்கு படி அளந்து கொடுத்தார். கொடுத்தபோது சென்னி, “சாமி நீங்க கொடுத்த படி என் குடும்பத்திற்கு போதாதுங்கோ, குழந்தை குட்டிக்காரனுங்கோ, தோட்டத்திலே எல்லா வேலையும்

செய்யரேனுங்கோ" என்று நாரப்ப நாயுடுவிடம் வாதாடிக் கொண்டிருந்தபோது, பேர நாயுடு சாட்டைவார் எடுத்துக் கொண்டு வந்து "ஏண்டா சென்னி, படி போதாது என்று அப்பாவிடம் வாதாமா செய்கிறாய். இதோ இந்தப் பொட்டுக்குள் கொட்டி வைத்திருக்கும் கம்பு யாருக்கு? அடே திருட்டுப் பயலே நீ வர வர அதிகமாகக் கெட்டு விட்டாய் உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று கையில் இருந்த சாட்டை கொண்டு இரத்தம் பீரிடும் வரையில் அடித்தார் அடிதாங்க முடியாமல் மாதாரி கோவென்று அழுதான் அப்போது நாரப்பநாயுடு பேர நாயுடுவைச் சமாதானப்படுத்திச் சென்னியைக் கூப்பிட்டுப் புத்தி சொல்லி மறுபடியும் இரண்டு கூடை கம்பு கொடுத்தனுப்பினார். பேர நாயுடு அடித்த அடி பொறுக்க முடியாமல் வீடு சென்ற மாதாரி பேர நாயுடுவைப் பழி வாங்கத் தீர்மானித்தான். மறு நாள் காலையில் எழுந்து பெருந்துறைக்கு அருகில் இருக்கும் மலையபாளையம் சென்று சூனிய மந்திரம் கருப்பவலையனிடம் சென்று அவனுக்கு வேண்டிய பணம் புதுத்துணி, சாராயம், கோழியெல்லாம் கொடுத்து பேர நாயுடுவின் மேல் சூனியம் ஏவ ஏற்பாடு செய்து விட்டு வீடு வந்து சேர்ந்தான். விதியின் சதியால் சூனியம் பேரநாயுடுவின் பேரில் வேலை செய்யத் தொடங்கியது. குளிர் காய்ச்சல் வந்து உடல் முழுவதும் கொப்புளங்கள் எழுந்து தாறுமாறாக உளறிக் கொண்டிருந்தார்.

அப்போது மாதாரி சென்னி ஒன்றும் அறியாதவன் போல் தோட்டத்திற்கு வந்தான். தோட்டத்துச் சாலைத் திண்ணையில் தாறுமாறாக உளறிக் கொண்டிருந்த பேர நாயுடு அருகில் சென்று மிகவும் இரக்கமுடையவன் போல் பாசாங்கு செய்து "அய்யா ஏன் இப்படித் துடிக்கறீங்கோ, உங்கள் உடம்புக்கு என்ன சாமி?" என்று கேட்டான். பேர நாயுடு கண் திறந்து பார்த்து, "அடே சென்னி உடல் வலி தாங்க முடியவில்லை, உடல் முழுவதும் எரிகிறது. சீக்கிரமாக வீட்டிற்குச் சென்று அப்பாவையும் அம்மாவையும் அழைத்துக் கொண்டு வா" என்றார். மாதாரி உடனே வீட்டிற்குச் சென்று அவர்களை அழைத்து வந்தான். குளிர் காய்ச்சலாலும்

கொப்புளங்களாலும் துன்பப்படும் பேர நாயுடுவைப் பார்த்து மனம் நொந்து பேர நாயுடுவை வண்டியில் வைத்து அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். நல்ல வைத்தியர்களை வரவழைத்து மருந்துகள் கொடுத்தும் வேதனை அதிகமாகி அலறித் துடித்து குருவாரம் அதிகாலையில் அஸ்த நட்சத்திரத்தில் பேர நாயுடு வைகுண்ட பிராப்தி அடைந்தார். பேர நாயுடு வைகுண்ட பிராப்தி அடைந்த செய்தி கேட்டுக் கம்மகுலப் பெரியவர்கள் பந்து மித்திரர்கள் ஊஞ்சப்பாளையம் துக்கின்னார் நாரப்ப நாயுடு வீட்டிற்கு வந்தனர். மரணச் செய்தி சொல்ல மாதாரிகளைப் பன்னிரெண்டு கிராமங்களுக்கு அனுப்பிக் கம்பளியம்பட்டிக்கு நம்பூரார் கொண்டம நாயுடுவுக்கும், கோனம்மாளுக்கும், ரங்கம்மாளுக்கும் இத் துக்கச் செய்தியை சொல்ல மாதாரி சென்னியை அனுப்பினார்கள்.

அன்று காலை ரங்கம்மா ரேணுகை பூஜை செய்யப் பூஜையறைக்குள் சென்றாள். எரிந்து கொண்டிருந்த விளக்கு திடீரென அணைந்தது. அது கண்ட ரங்கம்மாளின் உடல் சிலிர்த்தது தன்னை மறந்தாள். மாங்கல்யம் இழக்கும் நாள் வந்து விட்டது என்று அறிந்து கொண்டாள், கண்ணீர் வடித்தாள்.

ரேணுகையை வேண்டினாள். அப்போது ரேணுகை பிரசன்னமாகி, பேரநாயுடு மற்றும் ரங்கம்மாள் முற்பிறவி வாழ்க்கையை சொல்லி "ரங்கம்மா நீ பூவுலகில் வந்து பிறந்த காரியம் முடிவு பெறும் நாள் வந்து விட்டது. தைரியமாக இரு. நான் உன்னை ஆதரிப்பேன். நீ இனிச் செய்ய வேண்டியதைச் செய்" என்று கூறி மறைந்தாள். தன் முற்பிறவி வாழ்க்கையை உணர்ந்த ரங்கம்மா, தன் கணவர் பேரநாயுடு மீது அளவற்ற அன்பு கொண்டார்.

அதன் பிறகு ரங்கம்மா பூஜை அறையை விட்டு வெளியே வந்து தன் சிறிய தாயார் கோனம்மாளை அழைத்து, "அம்மா, நான் இன்று பூஜை செய்யச் சென்ற போது விளக்கு அணைந்துவிட்டது. ஏதோ விபரீதமான செய்தி வரும் என்று அறிகிறேன்" என்று சொல்லி வாய்

மூடுமுன் மாதாரி சென்னி "அம்மா கோனம்மா! அனபாலு சேதி" என்று சப்தமிட்டான். உடனே கோனம்மா வந்து மாதாரி சென்னியிடம் "என்னடா மாதாரி அனபாலு என்றாயே விவரமாகச் சொல்" என்றாள். அப்போது மாதாரி "அம்மா! பேர நாயுடு இன்று விடியற்காலையில் பரகதியடைந்தார்" என்று சொல்லக் கேட்டுக் கோனம்மா அலறி அடித்துக் கொண்டு உள்ளே சென்று ரங்கம்மாளைக் கட்டித் தழுவி, "ரங்கம்மா உன் விதி இப்படியா ஆகவேண்டும். நீ சொன்னது சரியாக முடிந்தது. என் தம்பி உன் கணவன் பரலோகம் அடைந்ததாக அனபாலு வந்திருக்கிறது" என்று அழ ஆரம்பித்தாள். கணவன் இறந்தான் என்ற செய்தி கேட்ட ரங்கம்மா ஆறாத் துயர் கொண்டாலும் துயரைத் தன்னுள் அடக்கிக் கொண்டு கோனம்மாளைச் சமாதானப்படுத்தி, "தாயே! விதி யாரை விட்டது, அன்றெழுதியவன் அழித்தெழுதப் போவதில்லை நடக்க இருப்பது நடந்தே தீரும். மேலே நடக்க வேண்டியதைச் செய்யுங்கள். முதலில் அப்பாவுக்கும் சிறிய தகப்பனார் வீடுகளுக்கும் செய்தியனுப்பி விட்டு இங்கு வந்துள்ள மாதாரி சென்னிக்குப் புதுச் சட்டி உடைத்து அந்த ஓட்டில் பாலும் சோறும் போட்டுக் கொடுங்கள்.

உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைத்தவன் அவன். நீங்கள் கொடுக்கும் பாலும் சோறும் உண்டு, உப்பாறு செல்வதற்குள் அவன் மாண்டு போவான். சூதுவாது அறியாத என் கணவர் இவன் செய்த குற்றத்தைத் தண்டிக்க, இவன் சூனியம் செய்து அவரைப் பரகதியடையச் செய்திருக்கிறான்" என்றாள். இந்தச் சமயத்தில் கொண்டமநாயுடுவும், சகோதரர்களும், மற்ற பந்துக்களும் அங்கு கூடிவிட்டார்கள்.

கோனம்மா, ரங்கம்மா சொன்னபடியே புதுச் சட்டி ஓட்டில் பாலும் சோறும் நிரப்பி மாதாரி சென்னிக்குக் கொடுத்தாள். ரங்கம்மா அதன் பிறகு "எனக்குப் பிறந்த வீட்டுச் சாப்பாடு கொடுங்கள்" என்று சொல்லி, நீராடி ஆடை ஆபரணங்களால் அலங்காரம் செய்து கொண்டு கூந்தலை வாரி முடித்துப் பூ வைத்துக் கொண்டு, நெற்றியில் குங்குமம் அணிந்து கொண்டு கொண்டம நாயுடுவும் பந்துக்களும்

உடன் வர அனைவரும் ஊஞ்சப்பாளையம் புறப்பட்டார்கள். ரங்கம்மா தன் பந்துக்களுடன் வருகிறாள் என்பதை அறிந்த ஊரார் அனைவரும் வீதிகளில் கூட்டம் கூட்டமாக ரங்கம்மாளைப் பார்ப்பதற்காக நின்று கொண்டிருந்தார்கள். அப்போது ரங்கம்மா தன் பந்து மித்திரர்களுடன் நல்ல ஆடையாபரண அலங்காரங்களுடன் கூப்பிய கரத்துடன் கண்களில் நீர் வழிய வந்து கொண்டிருந்தாள். இந்தச் செய்தியறிந்த ஏலம்மா வெளியே வந்து, என் மகனுடைய முகத்தைப் பார்க்க விடமாட்டேன் என்று தலைவாசற்படியில் வந்து நின்று கொண்டிருந்த ஏலம்மாளின் பாதங்களைத் தொட்டு கும்பிட்டுவிட்டு வீட்டிற்குள் சென்று கணவனின் முகதரிசனம் செய்து சாஷ்டாங்கமாக விழுந்து இருகரங்களாலும் கால்களைப் பிடித்து வணங்கித் தன் மடியில் வைத்துக் கொண்டு தான் கொண்டு வந்த மல்லி, அரளிப் பூக்களை எடுத்துக் கணவன் மேல் தூவி கண் கலங்கி மௌனமாக அப்பால் சென்று உட்கார்ந்து கொண்டாள். துக்கம் விசாரிக்க வந்தவர்களிடம் ரங்கம்மா பேசாமல் ரேணுகை தியானத்தில் இருந்தாள். அப்போது அங்கு வந்த சிலர் “உப்பாறு மணலில் அனபாலு செய்தி சொன்னப் போன மாதாரி சென்னி விழுந்து மாண்டான்” எனப்பேசிக் கொண்டார்கள். சிலர் பேர நாயுடுவின் பேரில் இருந்த அன்பால் உயிர்விட்டிருப்பான் என்றும் சிலர் பேர நாயுடுவுக்குச் சூனியம் ஏவியதை அறிந்து ரங்கம்மா கொடுத்த சாபத்தால் அவன் மரணம் அடைந்தான் என்றும் பலவாறு பேசிக் கொண்டார்கள்.

பலர் பலவிதமாகப் பேசியதைச் செவியுற்ற ரங்கம்மா தனக்குள்ளாக அன்று என்னுடைய தாய்மாமன் நான் தனித்திருந்த சமயம் என்னைப் பெண்டாள வந்து நான் சொன்ன புத்திமதிகளைக் கேட்காமல் என்னை நெருங்கி வந்த போது ரேணுகையின் அருளால் கண் தெரியாது கீழே விழுந்து தவித்து பின் எழுந்து ஓடினான். மறுநாள் அரிமரி கொப்புளங்கள்தோன்றி இறந்தான். இன்று என் கணவருக்கு சூனியம் வைத்த மாதாரி உப்பாற்றில் விழுந்து உயிர் துறந்தான் என்று எண்ணிக் கொண்டாள்.

அப்போது வெளித் தாழ்வாரத்தில் பெரியவர்கள் பேர நாயுடுவை அடக்கம் செய்யக் குழி வெட்ட ஆட்களை அனுப்ப ஏற்பாடு செய்த கொண்டிருந்ததைக் கேட்டு ரங்கம்மா, அங்கு சென்று மாமனாரைப் பார்த்து "மாமா நமது குல வழக்கப்படி என் கணவரைப் பூமியில் அடக்கம் செய்துவிடாதீர்கள். கட்டைகள் அடுக்கித் தீ மூட்டி அவரைத் தகனம் செய்ய வேண்டும். மேலும் மாடு கட்டும் பட்டியருகில் தகனம் செய்ய வேண்டும். களங்களமில்லாதவர், கள்ளங்கபடமறியாதவர், குடும்ப வாழ்க்கையே இல்லாதவராகிய என் கணவரைத் தகனம் செய்ய வேண்டும்" என்றாள். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஏலம்மா அங்கு வந்து "அய்யா! என்ன தைரியம் இவளுக்கு! புருஷன் செத்து நடுவீட்டில் கிடத்தப்பட்டிருக்கும்போது இங்கு ஆண்கள் மத்தியில் வந்து, புருஷனைத் தகனம் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறாள். மாட்டுப்பட்டியருகில் தகனம் செய்தால் அதற்குப் பின் அந்த பூமி விளையாது, எருமை மாடுகள் புகை பட்டுச் சரியாகப் பால்கறக்காது. மேலும் கட்டை முட்டிகளுக்குச் செலவு எவ்வளவு ஆகும்? அவள் எது வேண்டுமானாலும் சொல்லுவாள், கணவன் செத்த கவலை அவளுக்கேது? நமது குல வழக்கப்படி பேரையனை சுடுகாட்டில் புதைக்க வேண்டும்" என்றாள். இதையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த துக்கின்னார் துரை கிருஷ்ணம நாயுடு அண்ணன் நாரப்ப நாயுடுவிடம் வந்து "அண்ணா, ரங்கம்மா சொன்னபடியே செய்து விடுவோம். ரங்கம்மா ஒரு தெய்வீகப் பிறவி என்பது உங்களுக்குத் தெரியும், ரங்கம்மாளை நாம் அறியாதவர்களா? பதிவிரதா ரத்தினமாகிய ரங்கம்மாளின் பெருமையை இந்த பகுதியில் அறியாதவர்கள் இல்லை. பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் அபவாதம் வராமல் கணவன் முகதரிசனமே இல்லாது கன்னியாகவே காலங்கழிக்கும் உத்தமி, வினைப்பயனால் இவ்வுலகில் பிறந்த பெண் அவள். உங்கள் பூமியில் தகனம் செய்யாதீர்கள். அதன் அருகில் எனக்குச் சொந்தமான பூமியில் தகனம் செய்துவிடலாம்" என்று சொன்னார். பின்னர் தேர்கட்டி அலங்கரித்துப் பிரதேத்தை எடுத்து வந்து முகக்ஷவரம் செய்து, தாயாதிகள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டி,

புதுவேட்டி கட்டி, அங்கவஸ்திரம் போட்டு, திருமண் வைத்து, தலைப்பாகை கட்டி, மாலைகள் போட்டு, கதம்ப களப தூபங்கள் போட்டு, தேரில் வைத்து இறுதி வணக்கம் மரியாதைகள் செய்து தாரை தப்பட்டை முழக்கத்துடன் மாடுகட்டும் பட்டிக்கு அருகிலுள்ள ஆலமரத்திற்கு அப்பால் துக்கின்னார் துரை கிருஷ்ணம நாயுடு பூமியில் கட்டை முட்டிகள் சந்தனக் கட்டைகள் அடுக்கிப் பிரேதத்திற்கு வாய்க்கரிசி வைத்து துக்கின்னார் பேர நாயுடுவின் சடலத்தை வைத்து மூடி ரங்கம்மாள் குடமுடைத்துக் கொள்ளி வைக்க தீ மூட்டினார்கள்.

பின் அனைவரும் கை நீட்டி அனபாலு தீர்த்து ஊர்ப்புறத்தே வந்து தாயாதிகள் அனைவரும் நீராடினர். வீட்டிற்குச் சென்று தீப தரிசனம் செய்த பிறகு சம்பந்திகள் கொண்டு வந்து ஊற்றின சோற்றுக் கரைசலைக் குடித்தார்கள். பின் கொண்டம நாயுடு நாரப்ப நாயுடுவிடம் சென்று "மாமா ரங்கம்மாளுக்கு உடல் நலம் சரியில்லை, அவளைக் அழைத்துக் கொண்டு கம்பளியம்பட்டிக்குப் போக அனுமதி கொடுங்கள்" என்றார். அதுகேட்ட நாரப்பநாயுடு "அய்யா, கருமாதி காரியங்கள் செய்யாமல் நீங்கள் ரங்கம்மாளை அழைத்துக் கொண்டு போனால் அனபாலு விசாரிக்க வரும் பந்துக்கள் ரங்கம்மா எங்கே என்றால் என்ன சொல்லுவது? நாளை காலையில் அஸ்தி எடுத்துக் காடாற்றி விடலாம், நீங்களும் இருங்கள்" என்றார். அதைக் கேட்ட ரங்கம்மா மாமனாரை வணங்கி, "மாமா நாளை அஸ்தி எடுத்துக் காடாற்றலாம். ஆனால் கருமாதி காரியங்கள், 10,11,12-வது நாட்களில் வைத்துக் கொள்ளுங்கள்"! என்று சொன்னாள். மறுநாள் காலையில் அஸ்தி எடுத்துக் காடாற்றி அங்கு செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து பின் அஸ்தி கலசத்தை எடுத்துக் கொண்டு ரங்கம்மா மாமனாரிடம் விடைபெற்றுக் கொண்டு பந்துக்களுடன் கம்பளியம்பட்டி வந்து சேர்ந்தாள்.

### *ரங்கம்மா ரேணுகை - அங்காளம்மன் அருளால் அக்னிப் பிரவேசம்*

அன்றிரவு ரங்கம்மா அஸ்தி கலசம் வைத்துப் பூஜை செய்து ரேணுகா, அங்காள தேவதைகளை வேண்டினாள். ரங்கம்மாளின் வேண்டுதலுக்கிறங்கி ரேணுகை அங்காளம்மன் பிரசன்னமாகி, "ரங்கம்மா, நீ பயப்படாதே உன் வினை முடிந்தது. இனிப் பூவுலக வாழ்க்கையை நீ முடிக்க வேண்டிய நாள் வந்துவிட்டது. நீ சீக்கிரமாக அக்னி குண்டம் மூட்டி உன் கணவரின் அஸ்தி கலசத்துடன் அக்னியில் குதித்துத் தேவ கன்னிகையாக எம்மோடு வந்து சேருவாயாக" என்று சொல்லி மறைந்தார்கள். ரங்கம்மா ஆனந்தமடைந்து தந்தையாரிடம் சென்று, "அப்பா நீங்கள் எனக்குச் செய்ய வேண்டியதொன்றுண்டு, என்னைப் பெற்றுச் செல்லமாக சீராட்டிப் பாராட்டி வளர்த்து, திருமணமும் செய்து, என் வாழ்வைக் காண நீங்கள் ஆவலோடிருந்தீர்கள் அது ஈடேறவில்லை. கடைசியாக எனக்கு நீங்கள் செய்ய வேண்டியது இன்னமும் ஒன்றுண்டு, அதையும் தாங்கள் செய்து முடித்தால் என் ஜன்மம் சாபல்யமாகும். நான் ரேணுகையின் பாத தாமரைகளைச் சென்றடைவேன்" என்றாள்.

தன் அருமை மகளுக்கு நேர்ந்த வினையை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கும் கொண்டம நாயுடு "ரங்கம்மா நீ சொன்னது எனக்குப் புரியவில்லை. நீ எது வேண்டுமானாலும் கேள், நான் கொடுக்கத் தயாராய் இருக்கிறேன்" என்றார். அதற்கு ரங்கம்மா "அப்பா நான் சொல்வது ரேணுகையின் உத்தரவுப்படிதான், நான் மஞ்சள் குங்குமம் இழக்காமல் மாங்கல்யம் இழக்காமல் இப்பூலக வாழ்வைத்துறக்க வேண்டும், நான் பிறந்த வினை முடிந்தது, அன்னை ரேணுகை அங்காளம்மான் பிரசன்னமாகி என்னை அக்னிப் பிரவேசம் செய்யுமாறு உத்தரவு செய்து மறைந்தார்கள். ஆகையால், அப்பா, என்னுடைய கணவனைத் தகனம் செய்த இடத்திற்கு அருகில் உள்ள மாடு கட்டும் பட்டியில் (பின்பு மருவி மாடுகட்டிபாளையம் ஆனது) குண்டம் வெட்டித் தீ மூட்டிக் கொடுங்கள்" என்று வேண்டிக் கொண்டாள். அது கேட்ட

கொண்டம நாயுடு அம்மா ரங்கம்மா நீ அக்னிப் பிரவேசம் செய்வதை நான் பார்க்கவா வேண்டும்? அக்காட்சியை நான் எப்படிக் காண்பேன், எப்படிச் சகிப்பேன், வேண்டாம் அம்மா, கணவன் இறந்தாலும் இவ்வுலகில் எத்தனை பேர் உயிர் வாழவில்லை, நீ எதற்கும் பயப்பட வேண்டாம், உன் இஷ்டம் போல் உன் உயிர் உள்ளளவும் பூஜைகள் செய்து ஆண்டவனை வழிபட்டு பொதுமக்களுக்கு உபகாரியாக இருந்து வா, அக்னிக் குண்டத்தில் வீழ்வது தற்கொலைக்கு ஒப்பாகுமல்லவா?" என்றார். அதற்கு ரங்கம்மா, "அப்பா நமது நாட்டில் பெண்கள் உடன்கட்டை ஏறவில்லையா? கணவன் இறந்த பிறகு பெண்கள் நடைப்பிணங்களாகத் தானே வாழவேண்டும். அப்பா, ரேணுகையின் உத்தரவுப்படி நான் நடக்கத் தீர்மானித்து விட்டேன் "என்றாள்.

கொண்டம நாயுடு "ரங்கம்மா அக்னிப் பிரவேசம் செய்ய வேண்டுமானால் இந்த நாட்டு அரசன் உத்தரவு வேண்டும். அதை நாம் எப்படிப் பெறுவது? இந்த பிரதேசத்தை முகமதிய அரசன் ஆள்வதால் அவன் சம்மதித்து உத்தரவு கொடுப்பானா? அரசன் உத்தரவு இல்லாமல் நீ அக்னிப்பிரவேசமானால் அது என்னையல்லவா பாதிக்கும். வேண்டாம் நீ உயிருடன் அக்னியில் வீழ்ந்து சாம்பலாவதைப் பார்த்துக் கொண்டிருக்க என்னால் முடியாதம்மா" என்றார்.

ரங்கம்மா, "அப்பா தாய்க்குப் பதில் தாயாக இருந்து எனக்குச் சகலமும் செய்து ஆனந்தப்பட்ட தங்கள் மனம் நான் அக்னிப் பிரவேசம் செய்வேன் என்பதைக் கேட்டாலே என்ன பாடு படும் என்பதை நான் அறிவேன் விதி யாரை விட்டது? இது உங்களுக்குத் தெரியாதா? என் வினை-என் கர்மம் தீர்ந்து விட்டது. நீங்கள் ஒன்றும் ஆலோசிக்காமல் அரசன் உத்தரவு கிடைக்கும் குண்டம் வெட்ட ஏற்பாடு செய்யுங்கள். மேலும் என் கணவருக்கு 12வது நாள் கருமம் செய்யாமல் அவர் அஸ்தியுடன் நான் அக்னிப் பிரவேசமாக வேண்டும் என்று ரேணுகை அங்காளம்மன் சொல்லிச் சென்றார்கள்" என்றாள்.

கொண்டம நாயுடு மௌனமாக அப்பால் நகர்ந்தார். அன்று இரவு ரங்கம்மா ரேணுகையைக் கோரி, “தாயே, தயாபரீ, நான் அக்னிப் பிரவேசம் செய்ய அரசன் உத்தரவு கிடைக்க வேண்டும். நான் உன் பாதார விந்தம் சேர அருள் புரிவாய். அதற்கேற்ற மார்க்கமும் காட்டுவாய்” என்று தியானிக்க ரேணுகை அசரீரியாக, “ரங்கம்மா! உன் தகப்பனாரை அதிகாலையில் கச்சேரி வீட்டுக்குப் போகச் சொல். அங்கு அவருக்கு உத்தரவு கிடைக்கும்” என்று சொன்னாள். அது கேட்டு ரங்கம்மா மகிழ்வோடு தகப்பனாரிடம் சென்று “அப்பா நாளை அதிகாலையில் நீங்கள் கச்சேரி வீட்டிற்குச் செல்லுங்கள். அங்கு அரசன் உத்தரவு கிடைக்கும்” என்றாள்.

துலுக்கன்பாளையம் அரண்மனைத் தோட்டத்தில் இப்ராஹீம் என்னும் முகமதிய மன்னன் தன் இரு பத்தினிமாருடன் பூந்தோட்ட மண்டபத்தில் சென்று உட்கார்ந்து அங்குள்ள புல் தரை, வண்ண மலர்களைக் கண்டு ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தனர். அப்போது அரசனின் மூத்த மனைவி சலீம்பீபி அரசனைப் பார்த்து “அரசே! நாம் சகல செல்வங்களுடனும் இன்பமாக வாழ்ந்து வருகிறோம். இங்குள்ள மக்கள் அனைவரும் நம்மை மதித்துப் போற்றும்படி அறநெறி நின்று ஆட்சி புரிகின்றோம். இது போலவே நமக்குப்பிறகு இந்த ராஜ்ஜியத்தை ஆண்டுவர நமக்குக் குழந்தையில்லை. அன்னதானம் செய்து வந்தால் மக்கட்பேறு கிடைக்கும் என்று நம் வேதமாகிய குர்ஆனில் சொல்லியிருப்பதாகப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள் அல்லவா?” என்றாள். அது கேட்ட அரசன் “பீபி நீ சொல்வது சரியே, நானும் சில நாட்களாக அப்படித்தான் நினைத்து வருகிறேன். என்று சொல்லி இரவு அதிக நேரமாகிவிட்டதால் அரண்மனைக்குச் சென்று உணவுண்டு விட்டு படுக்கைக்குச் சென்றார்கள்.

அன்று இரவு உறங்கும் அரசன் கனவில், அந்த அறையில் இருந்த நிலைக்கண்ணாடியின் மேல் ஒரு நாகசர்ப்பம் தன் படத்தை

விரித்துக் கொண்டு கொக்கரித்து, “அரசனே நீயும் உன் மனைவியும் அரண்மனைத் தோட்டத்து மண்டபத்தில் இருந்து கொண்டு பேசியதை நான் அறிவேன். உங்கள் புத்திரப் பேறு இல்லாக் குறையைப் போக்கிக் கொள்ள யாத்திரை செய்யத் தீர்மானித்தீர்கள். உங்கள் குறையைத் தீர்த்து வைக்க நான் வந்திருக்கிறேன். நான் சொல்லுகிறபடி செய்தால் அடுத்த வருஷம் உன் அரண்மனையில் ஆண் குழந்தை தவழ்ந்து விளையாடும்” என்று சொல்லிற்று. இதைக் கேட்ட அரசன் பயந்து போய் சிலிர்க்க இதுவென்ன ஆச்சரியம்! பாம்பு பேசுகிறதே என்ன நேருமோ எது வருமோ என்று பயந்து அரசன் “பாம்பே! நான் என்ன செய்ய வேண்டும்? என்று சொல், நீ சொல்லுகிறபடி செய்கிறேன்” என்றான். அந்த சர்ப்பம், “அரசனே! பயப்படாதே! இந்த ராஜ்ஜியத்திலுள்ள கம்பளியம்பட்டி மணியம் கொண்டம நாயுடு மகள் ரங்கம்மா பதிவிரதா ரத்தினம், ஒரு தெய்வீகப் பிறவி கணவன் காலமானதால் அக்னிப் பிரவேசம் செய்யத் தீர்மானித்து விட்டாள். அவளுக்கு உன் முத்திரை வைத்த உத்திரவை எழுதிக் கொடுத்தால் நீ விரும்பிய புத்திரப் பேறு கிடைக்கும். தாமதம் செய்யாதே, நான் சொன்னபடி எழுதி இந்தக் கண்ணாடி அருகில் வைத்து விடு” என்று சொல்லிவிட்டுப் பாம்பு மறைந்து விட்டது. கனவு கண்ட அரசன் அலறி அடித்துக் கொண்டு எழுந்து அடுத்த அறையில் படுத்திருந்த தன் மனைவிமார்களிடம் சொல்லச் சென்றான். அவர்களும் இதே போலக் கனவு கண்டதாக ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டனர். கடைசியாகப் பாம்பு கனவில் சொல்லியவாறே கடிதம் எழுதி நிலைக் கண்ணாடி முன் வைத்துவிட்டு அல்லாவைத் தொழுது பின் மீண்டும் படுக்கைக்குச் சென்றார்கள்.

மறுநாள் கொண்டம நாயுடு ரங்கம்மா சொல்லியபடி அதிகாலையில் எழுந்து கச்சேரி வீட்டிற்குச் சென்றார். கொண்டம நாயுடுவின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த காவலன் கொண்டம நாயுடுவை வணங்கி “அய்யா! இன்று நள்ளிரவில் ஒருவர் வந்து என்னை எழுப்பி இந்த ஓலையைக் கொடுத்து இதைப்

பத்திரமாகத் தங்களிடம் கொடுக்கச் சொன்னார்" என்று ஓலையைக் கொடுக்க அதை வாங்கிப் பார்த்த கொண்டமநாயுடு அதில் அரசன் உத்தரவும் முத்திரையும் இருக்கக் கண்டு ரங்கம்மா சொன்னது சரியாக முடிந்தது என்று வியந்து மனதில் பற்பல எண்ணங்கள் தோன்ற இனிமேல் செய்ய வேண்டியதை எண்ணி வருந்திக் கலக்கத்துடன் வீடு சேர்ந்தார்.

அப்போது ரங்கம்மா எதிர்கொண்டு சென்று, "அப்பா உத்தரவு கிடைத்ததா? உங்கள் கண்களில் ஏன் நீர் ததும்புகின்றது? எல்லாம் அறிந்த நீங்கள் கவலைப்படலாமா? என்றைக்காவது ஒரு நாள் சாவது உறுதியப்பா, சாவு நம் பின்னால் வந்து கொண்டே இருக்கிறது".

"பெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு" என்பார் திருவள்ளுவர்
"இன்றைக் கிருப்போரை நாளைக்கிருப்பர் என்றிங்
கெண்ணவோ திடமில்லையே"

என்பது தாயுமானவரின் அருள்மொழி, "நெல்லறுக்கக் காலமுண்டு, மலர் கொய்யக் காலமுண்டு, மரமறுக்கக் காலமுண்டு, நம் வாழ்நாள் என்னும் புல்லறுக்க ஒரு காலமில்லை, யமன் நினைத்தபோது வருவான் காட்டிலுள்ள மரஞ்செடிகளை இத்தனை நாள் இருக்குமென்று கணித்துச் சொல்லமுடியும் நாம் கட்டியவீடு இத்தனை நாள் இருக்குமென்று சொல்லமுடியும் ஆனால் இந்த மெய்யென்னும் பொய்க்கூடு எத்தனை நாள் நிற்கும் எனப் புவியில் கூறுவதற்கு, யாராலும் முடியாது" என்று சொல்லி "நான் உயிர் மாய்த்துக் கொள்ளுவதை எண்ணி வருத்தப்பட வேண்டாம்" என்று கூறி ஓலைகளைத் தன் தந்தையிடம் வாங்கிப் படித்து ரேணுகையின் திருவருளை எண்ணி வியந்து போற்றினாள். பின் தன் தந்தையார்க்குப் பலவிதமான ஆறுதல் கூறித் தேற்றி அக்னிக் குண்டம் வெட்ட ஏற்பாடு செய்யுமாறு வேண்டினாள். அக்னிக் குண்டத்தின் அளவு கொடுக்க மாமா அவர்களுக்கு சொல்லி

அனுப்புமாறு, குண்டம் வெட்ட ரங்கபோயனை அழைத்து வருமாறும் தந்தையிடம் கூறினாள். பந்துக்களுக்கெல்லாம் செய்தி அனுப்பும்படி சொன்னாள். அவ்வாறே கொண்டம நாயுடு ஊஞ்சப் பாளையத்திற்கும், மற்ற பந்து ஜனங்களுக்கும், ரங்க போயனுக்கும் சொல்லி அழைத்துவர ஆட்களை அனுப்பினார்.

ஊஞ்சப்பாளையம் சென்ற ஆட்கள் துக்கின்னார் நாரப்ப நாயுடுவையும் துரை கிருஷ்ணம நாயுடுவையும் சந்தித்து "ரங்கம்மா குண்டம் இறங்கத் தீர்மானித்து விட்டாள். குண்டம் வெட்ட அளவு கொடுக்க உங்களைக் கொண்டம நாயுடு நாளை காலையில் மாடுகட்டிபாளையம் வரசொல்லி அனுப்பினார்" என்று சொல்லி விட்டு வந்தார்கள். ரங்கபோயனை அழைத்துவரச் சென்ற ஆட்கள் பள்ளிபாளையம் சென்று ரங்கபோயனிடம் நடந்ததை சொன்னார்கள். வயதான ரங்கபோயனுக்குக் கண் சரியாகத் தெரியாது. சில தினங்களுக்கு முன் அவன் குமாரர்கள் நால்வருக்கும் கண்ணில் கல்லடி பட்டுப் படுக்கையில் இருந்தனர். அந்த ஆட்களிடம் ரங்க போயன் நாங்கள் என்ன செய்வோம் எங்களால் எழுந்து வர முடியவில்லை. "நீங்கள் சென்று கொண்டம நாயுடுவிடம் சொல்லுங்கள்" என்று சொல்ல ஆட்கள் திரும்பி வந்து அவர்கள் நிலையைக் கொண்டம நாயுடுவிடம் கூறினர். அப்போது ரங்கம்மா "அப்பா நாளை காலையில் எப்படியும் குண்டம் வெட்டிவிடவேண்டும் தவறிவிடக்கூடாது" என்று கூறினாள்.

அன்று காலையில் பள்ளிபாளையம் போயர் தெருவில் வயோதிகப் பெண் ஒருத்தி, மஞ்சள் கயிற்றை மாலையாக அணிந்து கொண்டு, சங்குமணி வளையல்கள் ஒலிக்க, நெற்றியில் குங்குமப் பொட்டுகள் வைத்துக் கொண்டு தலையிலும் இடுப்பிலும் வேப்பிலை சுற்றிக் கட்டிக்கொண்டு, அக்கினிச் சட்டியைக் கையில் ஏந்திக் கொண்டு காலில் சலங்கைகள் கலீர் கலீர் என்று ஒலிக்க தம்பட்டம்,

உடுக்கை வாத்தியங்கள் முழங்க "தாயே! அங்காளம்மா, தரணியில் உன் மக்கள் பாவங்கள் தீர, ஏழைகள் பசி தீர அம்மா உன்பாதம் பணிகிறோம், தீராத பிணிகளைத் தீர்க்கும் இந்த வேப்ப இலை போகாத துன்பங்கள் இத்திருநீறால் போகும்" என்று பாடி ஆடிக்கொண்டு ரங்கபோயன் வீட்டுத் தலைவாயிலில் நின்று "ஜென்மத்தில் வந்த வினை கண்வலியுண்டாச்சு, கல்கொட்டிக் கண்வலியால் தவிக்கவுமே ஆச்சு, வினை தீரும் நன்னாளும் நெருங்கி வந்தாச்சு, கண்வலியைப் போக்கிடவே காணிக்கை கொடுப்பாய்! கட்டாயம் தீர்த்திடுவேன் காளியருள் உண்டு" என்று பாடிக்கொண்டு அக்னிச் சட்டியின் சாம்பலை எடுத்து வேப்பிலையில் வைத்து ரங்கபோயன் வீட்டிற்குள் வீசி வீதி வழியே நடந்து மறைந்தாள்.

அங்காள தேவதை மாறுவேடத்தில் வந்து வேப்பிலையில் சாம்பலை வீசியதும் ரங்கபோயனுக்கும் அவனுடைய மக்களுக்கும் கண் வலி நின்றுவிட்டது. கண் திறந்து பார்த்தார்கள். அங்கு வந்து பாடிய அம்மையாரைக் காணவில்லை. ரங்கபோயன் ஆச்சரியப்பட்ட மக்களிடம் "இப்போது உங்களுக்கும் எனக்கும் கண்வலி தீர்ந்ததும் கண் திறந்ததும் கம்மவார் குலம் கொண்டமநாயுடுவின் மகள் ரங்கம்மாளின் திருவருளாலேதான், இன்று காலையில் கொண்டம நாயுடுவிடம் ரங்கம்மாளுக்காக குண்டம் வெட்ட நம்மை அழைத்து வரும்படி ஆள் வந்தது. வந்த ஆளிடம் நம் மனக்குறையைச் சொல்லி அனுப்பினேன். இப்போது இந்த ரங்கம்மாளின் திருவருளினால் நாம் கண் வலி தீர்ந்து சுகமடைந்தோம். ஆகையால் குண்டம் வெட்டப் புறப்படுங்கள்" என்றான். ரங்கபோயனும் அவன் குமாரர்களும் கம்பளியம்பட்டிக்குச் சென்று கொண்டமநாயுடுவையும் ரங்கம்மாளையும் வணங்கி, "அய்யா! தாங்கள் சொல்லும் வேலையை செய்ய நாங்கள் தயாராக வந்துள்ளோம்" என்றார்கள். அதுகேட்ட கொண்டமநாயுடு "ரங்கபோயா நாளை அதிகாலையில் மாடுகட்டி பாளையத்துக்கு வந்து சேருங்கள்" என்று சொல்லியனுப்பினார்.

மறுநாள் துக்கின்னார் நாரப்ப நாயுடுவும், துரைகிருஷ்ணம நாயுடுவும் மற்ற குலத்தார்களும் காணியாள கந்தசாமிக் கவுண்டரும், நம்பூரார் குலச் சுமங்கலிப் பெண்கள் கோனம்மா முதலியவர்களும் மாடுகட்டும்பட்டி சென்று சேர்ந்தார்கள். ரங்கம்மா தன் பூஜை சாமன்களுடன் ரங்கராசு வீரணம் வாசிக்க அங்கு வந்து சேர்ந்தாள். அப்போது ரங்கம்மா மாமனார் நாரப்ப நாயுடுவை வணங்கி, மாமா அக்னிக்குண்டம் வெட்ட இருபத்து நான்கு முழ நீளமும், பன்னிரண்டு முழ அகலமும் இருக்கும்படி அளந்து வரை போட்டுக் கொடுங்கள் பின் தேங்காய் உடைத்துப் பூஜை போட்டுக் கொடுங்கள் என்று வேண்டிக் கொண்டாள். நாரப்ப நாயுடு அவ்வாறே அளந்து வரை போட்டுப் பூஜைசெய்து கொத்தாளம் கொண்டு மூன்றுமுறை கொத்தி ரங்கபோயனைப் பார்த்து “ரங்கபோயா காணிக்கை தேங்காய் பழம் எடுத்துக் கொண்டு குண்டம் போடு” என்று பணித்தார்.

ரங்கபோயன், “அய்யா, நான் காணிக்கையோ கூலியோ பெற்றுக் கொள்ள மாட்டேன். மாதக் கணக்காக கண்களில் கல்லடி பட்டுப் படாதபாடு பட்டுக்கொண்டிருந்தோம். நம்பூரார் கொண்டம நாயுடு நேற்று ஆள் அனுப்பியிருந்தார். வந்தவர்களிடம் கண் வலியால் மாதக் கணக்கில் படும் அவஸ்தையைச் சொல்லியனுப்பினோம். அதன்பின் அங்காளம்மன் வேடம் கொண்ட ஓர் அம்மையார் தலையிலும் இடுப்பிலும் வேப்பிலைக் கட்டிக் கொண்டு அக்னிச் சட்டியேந்திக் கொண்டு ஆடி, அகவல் பாடி என் வீட்டு வாசலில் வந்து நின்று, எங்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தைச் சொல்லி அக்னிச் சட்டியில் இருந்து சாம்பலை எடுத்து வேப்பிலைக் கொத்துடன் என் வீட்டிற்குள் வீசப்பளீர் என்று மின்னிற்று எங்கள் கண் வலி நின்று போயிற்று. கண் திறந்து பார்த்தோம். ஒருவரையும் காணவில்லை. இது எல்லாம் ரங்கம்மாளின் செயல் தான் என்று கம்பளியம்பட்டிக்கு ஓடிவந்து ரங்கம்மாளிடம் நடந்ததைச் சொல்ல, இந்த அம்மாள் ஆசீர்வதித்துக் குண்டம் வெட்ட வரச் சொன்னார்கள். அந்த அம்மாளுக்காக நாங்கள் எத்தகைய தியாகமும் செய்யத் தயாராக உள்ளோம்” என்று கூறினான்.

ரங்கபோயன் சொன்னதைக் கேட்ட அங்குள்ளோர் அனைவரும் ரங்கம்மாளின் தெய்வீக சக்தியைப் புகழ்ந்தனர். அப்போது கொண்டம நாயுடு ரங்கபோயனைப் பார்த்து, "உனக்கும் உன் மக்களுக்கும் நோய் நீங்கியது கேட்டு நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். நீ காணிக்கையும் கூலியும் வாங்கிக் கொள்ளாமல் வேலை செய்கிறோம் என்று சொல்லுகிறாய். கம்மகுலத்தவர்கள் உபயமாக யாரிடமும் ஒன்றும் பெற்றுக் கொள்ளக்கூடாது. நாங்கள் அதைத் தவறி நடந்துகொண்டால் குடும்பங்கள் விருத்தியடையாது. வேளாண்மை நல்ல பலன் தராது; ஆகையால் நீ கூலி வாங்கிக் கொள்ளாவிட்டாலும் காணிக்கை மட்டுமாவது எடுத்துக் கொண்டு குண்டம் வெட்டு" என்றார். ரங்கபோயன் அதன்பின் காணிக்கையை மட்டும் எடுத்துக் கொண்டு குண்டம் வெட்டினான்.

அப்போது ரங்கம்மா, "அய்யா பெரியோர்களே, நாளை வெள்ளிக்கிழமை சூரியோதயத்தில் குண்டத்தில் அக்னி மூட்ட வேண்டும். நாளைக்கு மூட்டும் அக்னியானது நான் புகுந்த துக்கின்னார் சுமங்கலிப் பெண்கள் மூவர் கொண்டு வந்து கொடுக்க அதை என்னுடைய மாமனார் வாங்கி நெருப்பு மூட்டிக் கொடுக்க வேண்டும் குண்டம் எட்டு நாள் எரிய வேண்டும். எட்டாவது நாள் அதிகாலையில் சூரியோதயத்தில் நான் தீக்குளிக்க வேண்டும்" என்று சொல்லிக் கைகூப்பி வணங்கினாள். ரங்கம்மாளின் வீரம், தீரம் தெய்வீக சிந்தனைகளைப் புகழ்ந்து அனைவரும்ஆசீர்வதித்துச் சென்றார்கள்.

அன்றிரவு துரை கிருஷ்ணம நாயுடு, நாரப்ப நாயுடு வீட்டிற்குச் சென்று "நாளை அதிகாலையில் குண்டத்திற்குச் செய்ய வேண்டிய பூஜை சாமான்களுடன் அக்னியும் கொண்டு போக ஏற்பாடு செய்யுங்கள்" என்றார். நாரப்ப நாயுடு மனைவி ஏலம்மாளை அழைத்து "நாளை அதிகாலையில் ரங்கம்மாவின் குண்டத்திற்கு அக்னி மூட்ட வேண்டியிருப்பதால் நீ மூன்று சுமங்கலிப்

பெண்களையும் அக்னியையும் தயார் செய்து கொள்” என்றார். அது கேட்ட ஏலம்மா சீறி எழுந்து கண்களில் தீப்பொறி பறக்க அடங்காக் கோபம் கொண்டு “என்ன சொன்னீர்கள்! என் மகன் செத்த துக்கம் தீரவில்லை. அவளா குண்டத்தில் விழுபவள்? அதிலும் பேரையன் பரலோகமடைந்து இன்னமும் கர்மமும் கூடத் தீரவில்லை. மாங்கல்யம், மஞ்சள், குங்குமம், பூ இழக்காமல் குண்டத்தீயில் மூழ்குவதாகச் சொல்வதெல்லாம் உண்மையல்ல. நமது கண்களை எல்லாம் கட்டிவிட்டு தீயில் குதிப்பதாகப் பாவனை காட்டி வெளியே வந்து அவள் விருப்பம் போல் நடக்க உங்களை ஆட்டி வைப்பாள். என் வீட்டு அக்னி அவளுக்கு ஆகாது, என் அடுப்பில் தீ எடுத்தால் சமையல் வேலை கெட்டுவிடும்” என்று தாறுமாறாக முறைதவறிப் பேசினாள்.

அது கேட்டு நாரப்ப நாயுடு கோபங்கொண்டு ஏதோ பேச எழுந்தார், அருகில் இருந்த துரை கிருஷ்ணம நாயுடு, “ரங்கம்மாளின் தெய்வீகத் தன்மையை அண்ணியார் இன்னும் அறிந்து கொள்ளவில்லை. ரங்கபோயனும் அவன் குமாரர்களும் மாதக்கணக்கில் கண்ணிழந்து தவித்து வருந்தி ரங்கம்மாளின் அருளால் கண்குணமடைந்து குண்டம் வெட்ட வந்த கதையை நாம் நேரில் கேட்கவில்லையா? நீங்கள் அண்ணியார் மீது கோபங்கொண்டு பயனில்லை. நாளை அதிகாலையில் என் வீட்டிலிருந்து அக்னி கொண்டு வர ஏற்பாடு செய்கிறேன்”, என்று சொல்லி விட்டுச் சென்றார்.

### *ரங்கம்மாள் அக்னி குண்டம் இறங்குதல்*

வெள்ளிக்கிழமை சூரியோதயத்திற்கு முன் துரை கிருஷ்ணம நாயுடு மனைவி லட்சுமியம்மாள் மூன்று சுமங்கலிப்பெண்களுடன் அக்னியை எடுத்துவர, துக்கின்னார் நாரப்ப நாயுடுவும், தம்பி துரை கிருஷ்ணம நாயுடுவும் ஏனைய பந்துக்களும் மாடுகட்டும்பட்டி வந்து சேர்ந்தனர். குண்டத்தில் ஆல், அரசு, சந்தனக் கட்டைகளை அடுக்கிச் சுமங்கலிப் பெண்கள் நெய்யையும் எண்ணையையும்

குடங்குடமாகக் கொட்டினார்கள். கம்பளிப்பட்டியிலிருந்து கொண்டம நாயுடு, கோனம்மா, ரங்கம்மா அங்கு வந்து சேர்ந்தார்கள். பின் துக்கின்னார் நாரப்ப நாயுடு குண்டத்திற்கு பூஜை செய்து துக்கின்னார் பெண்கள் மூவர் கொண்டு வந்து கொடுத்த தீயை வாங்கி குண்டத்தில் வைத்துத் தீயை மூட்டினார். கொழுந்துவிட்டெறியும் குண்டத்தைக் காண அக்கம்பக்கத்து கிராமத்தில் இருக்கும் பெண்கள் எல்லோரும் வந்தார்கள். குண்டத்தில் நெய், எண்ணெய், கற்பூரம், சந்தனக் கட்டைகளைப் போட்டு வணங்கிச் சென்றார்கள். ரங்கம்மாவின் குண்டத்திற்கு கட்டைகளை அடுக்கி அணையாது எரிய நம்பூரார் மாப்பிள்ளைகள் உதவிபுரிந்து வந்தார்கள் குண்டத்திற்கு நெருப்பு மூட்டிய மூன்றாம் நாள் ரங்கம்மா தன் தந்தையாரிடம், "அப்பா மூன்று நாட்களாகக் குண்டம் எரிந்து கொண்டிருக்கிறது. ஏழாவது நாள் வியாழக்கிழமை மாலையில் நான் கொண்டையம்பாளையம் பெரிய விநாயகர் கோயில் கிணற்றில் நீராடிப் புத்தாடை உடுத்தி, ஆபரணங்கள் அணிந்து, உறவினர்கள் புடைசூழ, மேள தாள வாத்தியங்கள், வீரணம் முழங்கக் குதிரை மேல் ஏறிக் குண்டத்திற்கு ஊர்வலமாகச் செல்ல வேண்டும். நீங்கள் பிறந்த வீட்டு பட்டு சேலையும் ரவிக்கையும் வாங்கி வாருங்கள்" என்றாள். கொண்டம நாயுடு, "அம்மா உனக்கு எந்த மாதிரி சேலை ரவிக்கை வேண்டுமென்று சொல், நான் வாங்கி வருகிறேன்" என்றார்.

ரங்கம்மா, "அப்பா எனக்கு கதவென்ன பட்டு சேலையும், சின்தவென்ன ரவிக்கையும் வாங்கிக் கொண்டு வாருங்கள்" என்றாள். அதற்குக் கொண்டம நாயுடு, "அம்மா அப்படி பெயரையே நான் கேட்டதில்லை. அது எங்கே கிடைக்கும் என்று சொன்னால் வாங்கி வருவேன்" என்று சொன்னார். ரங்கம்மா, "அப்பா சென்னிமலை கடை வீதியில் வீராசாமி செட்டியார் கடையில் அவரது பெட்டியின் மத்திய அறையில் இருக்கிறது, நீங்கள் போய் வாங்கிக் கொண்டு வாருங்கள்" என்றாள்.

மறுநாள் அதிகாலையில் கொண்டம நாயுடு குதிரைமேல் ஏறிச் சென்னிமலை சென்று கடைவீதியில் வீராசாமி செட்டியார் கடைக்குச் சென்று செட்டியாரைப் பார்த்து, "அய்யா, உங்கள் கடையில் கதவென்ன பட்டுச் சேலையும், சின்தவென்ன ரவிக்கையும் இருக்கிறதா" என்று கேட்கச் செட்டியார் "நீங்கள் கேட்கும்படியான பெயரையே நான் கேட்டதில்லை. என் கடையில் வேண்டுமானால் பாருங்கள். உங்களுக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ளுங்கள்", என்றார். கொண்டம நாயுடு "செட்டியாரே இல்லையென்று சொல்லாதீர்கள், உங்கள் அலமாரியில் இருக்கிறது பாருங்கள்" என்று சொன்னார். வீராசாமி செட்டியார் அப்படியே அலமாரியைத் திறந்து பார்க்க அதில் தக தகவென ஒளியுடன் பட்டுச் சேலையும் ரவிக்கையும் இருக்க கண்டு செட்டியார் நடுநடுங்கி வாய் குழறி, "அய்யா, இதுவென்ன வியப்பாய் இருக்கிறது. இந்தச் சேலை இங்கு எப்படி வந்தது? அய்யா! நீங்கள் யார்? இந்தச் சேலை யாருக்கு? சொல்லுங்கள்" என்றார். அப்போது கொண்டம நாயுடு. "அய்யா செட்டியாரே, நான் கம்மகுல நம்பூரார் கொண்டம நாயுடு, என் மகள் ரங்கம்மா, தன் கணவர் இறந்து விட்டதால், தீக்குளிக்கத் தீர்மானித்துக் குண்டம் எரிந்து கொண்டிருக்கிறது, கடைசியாகப் பிறந்த வீட்டுச் சேலை வேண்டுமல்லவா? எந்த மாதிரிச் சேலை வேண்டும் என்று என் மகளைக் கேட்க, அது உங்கள் கடையில் இருப்பதாகச் சொன்னாள். அய்யா! செட்டியாரே இந்த சேலையை எடுத்துக் கொடுங்கள்" என்றார். கொஞ்சம் பயந்தெளிந்த செட்டியார் சேலையைப் பார்த்தார். கண்களைப் பறிக்கும் ஜரிகை வேலைப்பாடமைந்த கரை பாம்பின் நெளிவு போல் அமைந்திருந்தது. செட்டியார் அந்தச் சேலையைத் தொடப் பயந்து, "அய்யா பதிவரதா இரத்தினமான உங்கள் மகள் உடுத்தப் போகும் சேலையை நான் தொடக்கூடாது. நீங்களே வந்து சேலையை எடுத்துக் கொள்ளுங்கள். குழந்தையில்லாப் பாவியாகிய நான் தொடக்கூடாது" என்றார். பின் கொண்டம நாயுடு கடைக்குள் சென்று பெட்டிக்குள் இருந்த கதவென்ன பட்டுச் சேலையும் சின்தவென்ன பட்டு ரவிக்கையும் எடுத்துக் கொண்டு செட்டியாரிடம் அதன் விலையைக் கேட்டார்.

வீராசாமி செட்டியார், "அய்யா இது என் கடைச் சேலையும் அல்ல, இதன் விலையும் எனக்குத் தெரியாது. இது மாதிரி சேலையை நான் பார்த்ததே இல்லை. இதற்கு எனக்கு விலை வேண்டாம். நீங்கள் சேலையை எடுத்துச் செல்லுங்கள். உங்கள் திருமகள் ரங்கம்மாளிடம் சொல்லி என்னை ஆசீர்வதிக்கச் சொல்லுங்கள்" என்று கூறினார்.

கொண்டம நாயுடு, "அய்யா செட்டியாரே சேலை உங்களுடைய கடையில்தான் இருக்கிறது. அதனால் சேலை உங்களுடையதுதான். நீங்கள் விலை வாங்காமல் போனால் நான் எப்படிச் சேலையைக் கொண்டு போவது? மேலும் நான் எந்தப் பொருளையும் நன்கொடையாகப் பெறுவதில்லை. பிறந்து வளர்ந்து சகலமும் முடிந்து கடைசியில் கடையில் வாங்கிக் கொடுக்கும் பிறந்த வீட்டு சேலைக்கு விலை கொடுக்காமல் போனால் என் மகள் பெற்றுக்கொள்ளமாட்டாள். ஆகையால் விலை மதிக்கமுடியாத இந்தச் சேலைக்கு இருபத்து ஒரு பணம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று பணத்தைக் கொடுத்துச் சேலையும் ரவிக்கையையும் எடுத்துக் கொண்டு வந்து ரங்கம்மாவிடம் கொடுத்தார். அப்போது ரங்கம்மா "அப்பா இந்தச் சேலையை நான் இப்போது தொடக் கூடாது. வியாழக்கிழமை காலையில் கொண்டயம்பாளையம் பெரிய விநாயகர் கோயில் கிணற்றில் நீராடிவிட்டு அங்கிருந்து குண்டத்திற்கு செல்ல இருப்பதால் அப்போது நம்பூரார் சுமங்கலிகள் இந்தச் சேலை, ரவிக்கை, என் ஆபரணங்கள், மஞ்சள், குங்கமம், பூச்செண்டுகள் மேள தாள வாத்தியங்களுடன் கொண்டுவர வேண்டும். அங்கு நீராடி ஆடை ஆபரணங்கள் அணிந்து குண்டம் வரைக்கும் குதிரைமேல் ஏறி ஊர்வலமாகச் செல்ல வேண்டும். இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்" என்றாள்.

பின் கொண்டம நாயுடு ரங்கம்மா சொல்லியவாறே தன் சகோதரர்களுக்கும் ஏனையோர்களுக்கும் வியாழக்கிழமை மாலையில் கொண்டையம்பாளையம் பெரிய கிணற்றுக்கு வந்து சேருமாறு செய்தி சொல்லி ஆட்களை அனுப்பினார். புனுகு கொல்ல

ரங்கராசுவை அனுப்பித் துக்கின்னார் நாரப்ப நாயுடுவையும், துரை கிருஷ்ணம நாயுடுவையும், மற்ற பந்துக்களையும் அழைத்து வரச் செய்தார். குண்டத்திற்கு தீ மூட்டிய ஏழாவது நாள் மாலையில் சுற்றுப்புற ஊர்களில் இருந்து எல்லா இனத்தாரும், பெரியவர்களும், சிறியவர்களும், பெண்களும் குழந்தைகளும் கொண்டையம்பாளையம் பெரிய கிணற்றருகில் சென்று சேர்ந்தார்கள். அங்கு கூட்டம் எள் விழ இடமில்லாது கூடியிருந்தது.

அப்போது நம்பூரார் குலச் சுமங்கலிகள் பட்டுச் சேலை, ரவிக்கை, மஞ்சள், குங்குமம், பூக்கள், கண்ணாடி, எலுமிச்சம்பழம் மற்றும் பூஜைக்கு வேண்டிய சாமான்களை தட்டுகளில் எடுத்துக் கொண்டு வீரண வாத்தியங்கள் முழங்கப் பெரிய கிணற்றுக்கு வந்து சேர்ந்தார்கள். கொண்டையம்பாளையம் பெருமாள் கோவிலுக்குச் சென்று ரங்கம்மாள் பெருமாளைத் தரிசனம் செய்து விட்டு பெரிய கிணற்றுக்குள் இறங்கி நீராடினாள், ரேணுகையின் அருள் பெற்று கன்னிமார், விநாயகர் பூஜைகள் செய்து கதவென்ன பட்டுச் சேலையும் சின்தவென்ன ரவிக்கையும் அணிந்து கொண்டு, பல்வேறு அணிகலன்களையும் அணிந்து கொண்டு மல்லி, முல்லை, அரளி மாலை அணிந்து கொண்டு, மருகு மரிக் கொழுந்துகளைத் தலையில் சூட்டிக்கொண்டு நெற்றியில் திருமண் வைத்துக் கொண்டு அருள் கொண்டு அலாரித்தும், கிலாரித்தும் ரேணுகை அங்காள தேவதை பூஜைகளைச் செய்தாள். தந்தையார் கொண்டம நாயுடு, மாமனார் நாரப்பநாயுடு, சிறிய மாமனார் துரை கிருஷ்ணம நாயுடு ஆகியோரும் மற்றையோரும் வயதில் முதிர்ந்த சுமங்கலிகளும் அட்சதை கொண்டு ரங்கம்மாளை ஆசீர்வதித்தார்கள். பின் சிறிய தந்தையார் வெங்கடாத்திரி நாயுடுவும், இராமி நாயுடுவும் உதவி செய்யக் குதிரை மேல் ஏறி உட்கார்ந்தாள். காணியாள கந்தசாமிக் கவுண்டர் குதிரையை நடத்தினார். குதிரைக்கு இரு புறத்திலும் கொண்டம நாயுடுவும் நாரப்ப நாயுடுவும் நடந்து சென்றனர். புனுகுகொல்ல ரங்கராசு சக்தியழைக்க, பயினான் வீரணம் கொட்ட,

பிச்சுகுண்டான் கோத்திரம் பாட, சங்கு, சேகண்டி, நாதசுரம், கொம்பு, எக்காளம், தாரை, வீரணம் முழங்க ரங்கம்மாள் ஊர்வலமாக பெரிய கிணற்றிலிருந்து மாடுகட்டும்பட்டி குண்டடத்திற்கு வந்து குதிரையை விட்டிறங்கிக் குண்டடத்திற்கு மேல்புறத்தில் போடப்பட்டிருந்த மனையில் வீற்றிருந்து ரேணுகை, அங்காள தேவதை பூஜை செய்தாள். வெள்ளிக்கிழமை காலையில் தீப்பாய வேண்டியிருப்பதால் தீக் குண்டடத்திற்குப் பூஜை செய்தாள். குண்டடத்தை சுற்றிலும் ஆயிரக்கணக்கானோர் கூடி விட்டார்கள்.

குண்டடத்தின் மேற்குப் பக்கத்தில் ரங்கம்மாளுக்கு அருகில் நம்பூரார் கொண்டம நாயுடு அவருடைய சகோதரர்கள், உப்பட்ல குலசேகர நாயுடு, தோணாதல கிருஷ்ணம நாயுடு, துக்கின்னார் நாரப்ப நாயுடு, துரைகிருஷ்ணம நாயுடு, ஆதூரிவார், தானூரிவார், நீர்க்குண்டலார், பேபட்லார், காங்கல்லார் பெரியவர்கள் ஒரு புறமும், கோனம்மா, ஏலம்மா, லட்சுமியம்மா, சின்னம்மா, சாயம்மா, ருக்குமணியம்மா, துளசியம்மா முதலிய சுமங்கலிகள் மற்றொரு புறமும் நிற்கக் காணியாள கந்தசாமிக் கவுண்டரும், கருப்பண்ண கவுண்டரும், முத்துசாமிக் கவுண்டரும் குண்டடத்தைச் சுற்றி உள்ள மக்களை பாதுகாவல் செய்து வந்தார்கள். மேளதாளங்கள் வெண்கல வீரணங்கள் முழங்கிக் கொண்டிருந்தன.

அப்போது ரங்கம்மாள் திருவருள் கொண்டு, “பெரியோர்களே! தாய்மார்களே! இப்பூவுலகில் நம்பூரார் குலப் பெண்ணாகப் பிறந்தேன். வளர்ந்தேன், கல்யாணமாயிற்று கணவருடைய கண்பார்வையும் கூட படாதபடி அக்னியில் வீழ்கிறேன் என்பதை உலகோருக்கு அறிவிக்க அன்னை பராசக்தி ரேணுகை கட்டளையிட்டாள். என் முற்பிறப்பின் வரலாற்றைக் கூறுகிறேன் கேளுங்கள்” என்று சொல்ல ஆரம்பித்தாள்.

“நானும் என்னுடைய கணவரும் வேடர்களின் அரச குலத்தில் பிறந்தோம்”. பல வருடங்கள் வாழ்க்கை நடத்தியும் குழந்தை இல்லாது

மிக வருந்தினோம். ஒரு தவ முனிவர் வந்தார். “கடில நதி தீரத்தில் 48 நாள் தவமிருந்து பின் ஒன்பது நாள் நவக்கிரக பூஜைசெய்தால் மகப்பேறு கிட்டும்” என்று கூறினார். அதன்படி “கடில நதி தீரம் சென்று ஒரு குடிசை அமைத்துக் கொண்டு தவமிருந்தோம். நான் கணவருக்குப் பூஜைக்கு வேண்டிய பொருள்களும் உணவு வகைகளும் தொகுத்து அவருக்குப் பணிவிடைகள் செய்து வந்தேன். ஒரு நாள் காலையில் பூஜை முடித்துக் கொண்டு உணவுண்ண வந்தவர் விதியின் பயனால் என்மேல் காதல்கொண்டு விட்டார். கணவன் சொல்லைத் தட்டமுடியாத நான் அவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டிதாயிற்று. இருவரும் ஆசிரமத்தை விட்டு வெளியே வந்து அங்கிருந்த ஒரு ஆலமரத்தடியில் இன்பமாக இருந்துவிட்டு பின் அங்குள்ள தடாகத்தில் இறங்கிக் குளித்து விட்டு கரையேறினோம். அருகில் வசித்து வந்த கார்க்கோட முனிவர் நாங்கள் செய்த தவறை உணர்ந்து சினங்கொண்டு எங்கள் முன் வந்து “பாவிகளே என்ன காரியம் செய்தீர்கள். நீங்கள் மகப்பேற்றுக்காகத் தவம்செய்ய வந்து தகாத முறையில் நடந்து கொண்டீர்கள். அதுவுமின்றி முனிவர்கள் வந்து இளைப்பாறி நீராடும் இடத்தையும் குளத்தையும் அசுத்தப்படுத்தி விட்டீர்கள். ஆதலால் உங்கள் தவம் பலிக்காது. அடுத்து வரும் பிறவியில் நீங்கள் உயர் குலத்தில் பிறந்து கணவன் மனைவியாக இருப்பீர்கள். ஆனால் உன் கணவன் உன் முகத்தைக் கூடப் பார்க்கமாட்டான். பொற்றாமரைக் குளத்தை அசுத்தப்படுத்தியதால் இவனுக்கு ஓர் இழி மகனால் சூனியம் வைக்கப்பட்டு உடம்பெல்லாம் கொப்புளங்கள் தோன்றி உயிர் துறப்பான்” என்று சாபம் கொடுத்தார். அப்போது நாங்கள் அம்முனிவரை வணங்கி “ஸ்வாமி! விதியின் விளையாட்டால் காமத்தை அடக்க வலிமையில்லாது இளம் வயதினராகிய நாங்கள் அறியாது செய்த பிழையை மன்னித்து விடுங்கள். கணவன் சொல்லைத் தட்டாத என்னைப் பாருங்கள்” என்று மன்றாடி வணங்கினேன். அதற்கு முனிவர், “பெண்ணே அடுத்த பிறவியில் நீ இவனைக் கணவனாக அடைந்தாலும் செய்யும் முயற்சி எல்லாம் வீணாகிக் கன்னியாகவே காலம் கழிப்பாய். கணவன் சொல்லைத் தட்டாமல் நடந்து கொண்ட உனக்கு மறு பிறவியில்

பராசக்தி காட்சி கொடுத்து ஞானத்தைக் கொடுத்து இறுதியில் தெய்வீக சக்தியும் கொடுப்பாள், உன் மகிமையை உன் குலத்தோரும் உலகோரும் அறியும்படி தீக்குளித்துத் தேவ கன்னிகைகளில் ஒருத்தியாக இருப்பாய், என்று என்னை ஆசீர்வதித்தார்" என்று ரங்கம்மா தன் முன் பிறப்பின் வரலாற்றைக் கூறியதைக் கேட்டு அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர்.

அதன் பின் ரங்கம்மா நம்பூரார் குலப் பெண்களையும் குழந்தைகளையும் அருகில் அழைத்து "தாய்மார்களே, சகோதரிகளே! நான் இனிச் சிறிது நேரத்தில் உங்களைவிட்டுப் பிரிந்து விடப் போகிறேன். ரேணுகையின் உத்தரவுப்படி தீக்குளிக்கப் போகிறேன். நம்பூரார் குலத்தில் உதித்த நீங்கள் உலகம் உள்ளளவும் குலத்திற்குப் பழி ஏற்படாமல் நடந்து கொண்டால் நம்குலம் பெருகும். நம்பூரார் குலத்தில் முதலில் பெண் குழந்தை பிறந்தால் என் நினைவாக ரங்கம்மா என்று பெயர் வையுங்கள். நம்பூரார் வீட்டுப் பெண்கள் வெள்ளிக்கிழமை எண்ணெய் தேய்த்துக் குளிக்கக் கூடாது. மீறிக் குளித்தால் தலைமயிர் உதிர்ந்து மொட்டையாகி விடுவார்கள். மேலும் இன்று முதல் உலகம் உள்ளளவும் நம்பூரார் குலத்தவர்கள் ஏழு என்று சொல்லக் கூடாது, நான் குண்டம் எரியவிட்ட ஏழாவது நாள் பிறந்த வீட்டை விட்டுப் புறப்பட்டுத் தீக்குளிக்க வந்ததுதான் இதற்குக் காரணம். (ஏழு என்பதை வதை தாரை என்று பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்படுகிறது) ஏழு என்ற சொல் வாயிலும் சொல்லாது பாதுகாக்க வேண்டும். தவறி நம்பூரார் குலத்தவர்கள் ஏழு என்று சொன்னால் அவர்கள் குடும்பம் அழிந்து போகும் எடுத்த காரியம் ஆகாது வேளாண்மை கெட்டு விடும். மேலும் என் அக்னிக் குண்டம் வெட்ட என் அழைப்புக்கு வராமல் களத்து வேலை என்று சாக்குச் சொல்லி நின்று விட்ட நம்பூரார் குலத்தவர்களுக்கு மூன்று நாள் இல்லாமல் களத்து வேலை முடியாது போகும். தாய்மார்களே! நீங்கள் வீரம் மிகுந்த

பெண்கள் எவருக்கும் அஞ்சாமல் நல்ல காரியங்களைச் செய்யுங்கள். கணவன், மாமன், மாமி, மற்ற பந்துக்கள் ஆகியோரையும் அன்புடன் நேசித்துக் குடும்பம் நடத்துங்கள். நமது குல தெய்வம் ரேணுகையை நாள்தோறும் வணங்கி வருவீர்களாக" என்று புத்திமதிகள் சொன்னாள்.

## *பேர நாயுடுவின் பெருமையை ரங்கம்மா தந்தைக்கு விளக்குதல்*

தகப்பனார் கொண்டம நாயுடு, கோனம்மா, மாமனார் நாரப்ப நாயுடு, ஏலம்மா ஆகியோரை அருகில் அழைத்துப் பாத பூஜைசெய்தாள். ஐய்யப்பனையும், இலட்சுமியையும் அணைத்து முத்தமிட்டு ஆசீர்வாதம் செய்தாள். அங்கிருந்த அனைவரையும் வணங்கி எல்லோருக்கும் ஒரு வேண்டுகோள் வைத்தார்.

"அப்பா வினை வழியே எல்லாம் நடந்தேறும் என்று நீங்கள் எனக்குப் பல முறை உபதேசம் செய்தீர்கள். எது நடந்தாலும் நடக்காவிட்டாலும் குலதர்மத்தைத் தவறவிடக்கூடாது. பிறந்து, வளர்ந்து மங்கை பருவமடைந்து திருமணம் செய்து கொண்டு கன்னியாகவே நான் காலங்கழித்து அக்னியில் பாய்ந்த என்னையும், தேவர்களாலும், முனிவர்களாலும், மானிடர்களாலும் சாதிக்க முடியாத காரியமான ஒரு பெருங் காரியத்தை உயிருள்ள வரைக்கும் சாதித்து உயிர் துறந்த உம் மருமகனையும் எந்த வித இடைவெளி இன்றி ஒரே கல்லில் சிலை உருவில் செய்து இந்தக் குண்டத்தின் மேற்குப் பாகத்தில் கிழக்கு முகமாக வைத்துவிடுங்கள். உமது மருமகன் வீரவாழ்வையும், என் துயர வாழ்வையும் நம் குலத்தவர்கள் மகிழ்ந்து போற்றுவார்கள். மேலும் நீங்கள் ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் கிருத்திகை நாளில் பெரிய கிணற்றில் இருக்கும் தங்கை லட்சுமியை ஜலக்கண்ணில் இருந்து அழைத்து கன்னிகைகள் பூஜை செய்து ரேணுகை, அங்காள தேவதைகளைச் சக்தி ரூபமாக அழைத்து வந்து என் இருப்பிடத்தில் வைத்து மறுநாள் அதிகாலையில் எங்கள் இருவரையும்

திருமஞ்சனமாட (ஜலகமாட)ச் செய்து பின் ஆடை ஆபரணங்கள் அணிவித்துப் பொங்கல் வைத்து ஆராதனைகள் செய்து ரோகிணியில் விளக்கேற்றி வணங்கி வந்தால் நம்பூரார் துக்கின்னார் குலங்கள் செழித்து வளரும் நான் என்றைக்கும் எங்களை வழிபடும் மக்களை அன்னை ரேணுகையின் திருவருளால் காப்பாற்றி வருவேன்" என்று சொல்லி அருளினாள்.

குண்டத்தைச் சுற்றி வரத் தொடங்கிய போது வீரணம் அடித்துக் கொண்டிருந்த புனுகு கொல்ல ரங்கராசு, தன் மனதுக்குள் "என்ன ஆச்சர்யம்! இந்த ரங்கம்மா விலை மதிக்க முடியாத ஆடை ஆபரணங்களுடன் தீக்குளிக்கப் போகிறாள், இந்த ஆபரணங்கள் எல்லாம் தீயில் வெந்து கருகிச் சாம்பலாய்விடும், ஏழையாகிய எனக்குக் கொடுத்தால் தன் தரித்திரம் தீரும்"" என்று எண்ணி ரங்கம்மா அருகில் சென்று வணங்கி, "அம்மா உம்முடைய ஏவல் செய்து வந்த எனக்கு என்ன வரம் கொடுக்கிறீர்கள்" என்றான். அதற்கு ரங்கம்மா "அப்பா! என் குலத்தோர் வாழும்படியான இடங்களுக்குச் சென்று என் சரித்திரத்தை சொன்னால் நம் குலத்தவர்களும் உன்னை நேசித்து அறுசுவை உணவளித்து ஆடைகளும், நவதானியங்களும் கொடுத்து உன்னை ஆதரித்து வருவார்கள்" என்று பகர்ந்தாள்.

இதுகேட்ட ரங்கராசு "அம்மா நீங்கள் சொன்னதெல்லாம் பிற்காலத்தில் நடப்பவை, இப்போது நீங்கள் இவ்வளவு ஆபரணங்களுடன் அக்னியில் விழுந்தால் அவையெல்லாம் கருகிச் சாம்பலாகும், எனக்கு அந்த அணிகளைக் கொடுத்தால் அவற்றை விற்று உங்கள் பெயரைச் சொல்லிக் கொண்டு சுகமாக வாழ்க்கை நடத்திக் கொள்வேன்" என்றான். அப்போது ரங்கம்மா சில அணிகளைக் கழற்றி, "புனுகு கொல்ல ரங்கராசு, இதோ இவற்றை வைத்துக் கொண்டு உன் ஆசையைப் பூர்த்தி செய்து கொள் என்று கொடுத்தாள். அந்த சமயத்தில் சென்னிமலை வீராசாமி செட்டியார் ஓடோடி வந்து கூட்டத்தை விலக்கிக் கொண்டு தன் மனைவி அன்னபூரணியுடன்

முன் வந்து, “அம்மா! ரங்கம்மா! நீங்கள் அணிந்திருக்கும் சின்தவென்ன ரவிக்கையும், கதவென்ன பட்டுச் சேலையும் மிக அழகாக இருக்கிறது. இது என் பெட்டிக்கு எப்படி வந்தது என்று எனக்குப் பயமாக இருக்கிறது” என்றார்.

அதற்கு ரங்கம்மா, “செட்டியாரே! பயப்படாதே! காரணமில்லாமல் இந்தச் சேலையும் ரவிக்கையும் உன் பெட்டிக்குள் வரவில்லை, நீ தினந்தோறும் செய்து வரும் அன்னதானத்தின் பலன் தான் இது. அத்துடன் நீ கோரிய குழந்தை வரத்தை எனது அன்னை ரேணுகை உனக்குக் கொடுத்து விட்டாள். அடுத்த வருஷம் உன் வீட்டில் ஓர் ஆண்குழந்தை தவழ்ந்து விளையாடும்” என்று ஆசீர்வதித்தாள்.

ரங்கம்மா மனமுவந்து கொடுத்த ஆபரணங்களைப் பெற்றுக் கொண்ட புனுகு கொல்ல ரங்கராசு விதியின் விளையாட்டால் மறுபடியும் ரங்கம்மாவின் அருகில் வந்து “தாயே! இவ்வளவு அழகான சேலையுடன் நீங்கள் அக்னியில் விழுந்தால் அதுவும் கருகிச் சாம்பலாகும். அக்னியில் குதிப்பதற்கு முன் இந்தச் சேலையில் பாதியைக் கிழித்து எனக்குக் கொடுங்கள். நான் என் குழந்தைக்குப் பாவாடை தைத்து உடுத்தி அழகு பார்க்கிறேன்” என்றான்.

இதைக் கேட்ட ரங்கம்மா கலகலவென நகைத்து “அடே பேராசைக்காரா! உன் ஆசைக்கு அளவில்லை. நான் அணிந்திருக்கும் பிறந்த வீட்டுச் சேலையைக் கேட்ட நீ எனக்கு பாதகம் நினைத்து விட்டாய். குலப்பெண் கட்டியிருக்கும் சேலையை நீ கேட்கலாமா? முன் ஒரு நாள் உனக்குக் கொடுத்த வாக்குப்படி நான் இதுவரை உன்னை ஆதரித்து வந்தேன். நீ எனக்குப் பாதகம் நினைத்தாய் சீ! போ அப்பாலே” என்றாள். அப்பொழுதே ரங்கராசு நிலை தடுமாறி வீரணத்துடன் விழுந்து புரண்டு சென்றான். அதன் பிறகு ரங்கம்மா மேள தாளங்கள் முழங்க அக்னிக் குண்டத்தை மூன்று முறை வலம் வந்து கஸ்தூரி மஞ்சள், குங்குமம், எலுமிச்சம்பழம், பூச்செண்டுகள்

ஆகியவற்றை அக்னியில் வீசினாள். தன் கணவரின் அஸ்தி கலசத்தைக் கையில் எடுத்து அக்கினியில் வீசினாள். அருளில் திளைத்த ரங்கம்மாவுக்குக் கையில் சூலத்தோடு ஸ்ரீ அங்காளம்மன் காட்சி தந்தாள். சகல ஜனங்களும் மலர்களாலும் அட்சதைகளாலும் ஆசீர்வாதம் செய்ய, தேவர்கள் பூமாரி பொழிந்தனர். ரேணுகையின் ஆசீர்வாதம் பெற்ற ரங்கம்மா ஸ்ரீ அங்காள தேவதை கைலாகு கொடுக்க ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம் சக்தி, என்று தீப்பாய்ந்து மறைந்தாள்.

*ஸ்ரீ ரங்கம்மாள் திருவடிகளே சரணம்!*

ரங்கம்மாள் அக்னிக்குண்டத்தில் இறங்க வரும் காட்சியைக் காண வந்த மக்கள் அனைவரும் குண்டத்தை வலம் வந்து குண்டத்துச் சாம்பலை எடுத்து நெற்றியிலே அணிந்து கொண்டு ரங்கம்மா சிறு வயதிலிருந்தே மக்களுக்குச் செய்த உபகாரங்களையும் அவள் கற்புத்திறத்தையும் புகழ்ந்து கொண்டு தத்தம் ஊர்களுக்குச் சென்றனர்.

ரங்கம்மா கட்டியிருந்த சேலையைக் கேட்ட புனுகு கொல்ல ரங்கராசு கீழே விழுந்து உருண்டு புரண்டவன் கொஞ்ச நேரத்தில் மரணமடைந்தான். அவனுக்கு ஈமச்சடங்குகள் செய்யக் கொண்டம நாயுடு பொருளுதவி செய்தனுப்பினார்.

மறுநாட்காலையில் கொண்டம நாயுடு ரங்கபோயன் குமாரர்களைக் கொண்டு குண்டத்தை மூடி, தினம் தவறாமல் பூஜை செய்யப் பண்டாரங்களை நியமித்தார். வெள்ளிக்கிழமை தோறும் கொண்டம நாயுடுவும், கோனம்மாவும் மாடுகட்டும்பட்டி சென்று குண்டத்திற்குப் பூஜை செய்து வந்தார்கள்.

ஒரு வெள்ளிக்கிழமையன்று குழந்தைகளை வீட்டில் விட்டு விட்டுக் கொண்டம நாயுடுவும் கோனம்மாளும் மாடுகட்டும்பட்டிக்கு

